மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: பதினாறு+VI=22

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 19 செவ்வாய்க்கிழமை (03.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:097

## முல்லை. மக்களை வெளியேற்றத் துணைபோக வேண்டாம்

# பாதுகாப்பு வலயத்தை விஸ்தரிக்கவே

# அமெரிக்க அரசாங்கம் உதவ வேண்டும்!

## அந்நாட்டின் 'பேர்ள்' அமைப்பு அவசர கோரிக்கை

வாஷிங்ரன், மார்ச் 3

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசாங்கம் அமைத்துள்ள பாதுகாப்பு வலயத்தை விஸ்தரித்து இடம்பெயர்ந்து தவிக்கும் இரண்டு லட்சம் மக்களுக்குரிய சேவைகளைச் செய்வதற்கு மட்டுமே அமெரிக்க அரசாங்கம் உதவவேண்டும்.

அங்கு சிக்குண்டுள்ள மக்களை அமெரிக்க பசுபிக் கட்டளை அணியின் (PACOM) உதவியுடன் வெளியேற்றி இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கும் திட்டத்துக்கு எந்த வகையிலும் துணை போகவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

சிறிலங்காவில் சமத்துவத்துக்கும் நிவாரண உதவிக்குமான மக்கள் இயக்கம் (People for Equality and Relief in Srilanka - PEARL) அமெரிக்க அரசாங்கத்துக்கு மேற்கண்ட அவசர வேண்டுகோளை விடுத்திருக்கிறது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பின் புறநகரில் 8 தமிழர்கள் கைது

கொழும்பின் புறநகர் பகுதிகளான களுபோவில, கொகுவலை ஆகிய பிரதேசங்களில் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது (16 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 6 பக்கங்கள் கொண்ட இலவச கல்விச் சுடர் இணைப்பிதழ் உள்ளே ▶

## பொதுநலவாய அமைச்சர்களின் மாநாட்டில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வலியுறுத்து

### மனித உரிமை கண்காணிப்பகம் வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 3

லண்டனில் நாளை ஆரம்பமாகவுள்ள பொதுநலவாய அமைச்சர்களின் மாநாட்டில் இலங்கை அரசுக்கு, மனித உரிமைகள் விடயத்தில் அக்கறை கொள்ளுமாறு அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படவுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இணை இயக்குநர் கரோல் பொகேர்ட் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பொதுநலவாயத் தலைவர்கள், இலங்கை அரசை மனித உரிமைகள் விடயங்களில் (16 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை அரசு நிறுத்தினால் புலிகள் மீண்டும் பலமடைவர்

### வெளிவிவகார அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 3

விடுதலைப் புலிகளுடன் தற்காலிக யுத்தநிறுத்தமொன்றை மேற்கொள்ளுமாறு புதிதாக விடுக்கப்பட்டுள்ள அழைப்புகளை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம பி.பி.ஸிக்கு கருத்துத் (16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.-கண்டி ஏ-9 வீதி 24 வருடங்களின் பின்னர் இராணுவத்தினர் போக்குவரத்துக்குத் திறப்பு

கொழும்பு, மார்ச்3

யாழ்ப்பாணம்- கண்டி வீதியில் ஏ-9 வீதி இராணுவத்தினரின் போக்குவரத்துக்காக 24 வருடங்களின் பின்னர் நேற்று முற்பகல் 10 மணிக்கு உத்தியோகபூர் வமாகத் திறந்து வைக்கப்பட்டதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு; புதுமாத்தளன் பகுதிகளில் படையினர் - புலிகள் கடுமையான மோதல்

### புலிகளின் 2 படகுகளை மூழ்கடித்ததாக படைத்தரப்பு தகவல்

முல்லைத்தீவு, மார்ச் 3

முல்லைத்தீவு, புதுமாத்தளனுக்கு தெற்கே நிலைகொண்டிருந்த 55ஆவது படைப்பிரிவின் மீது நேற்றுக்காலை கடற்புலிகளின் அணி ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது. அத்தாக்குதலில் ஈடுபட்ட புலிகளின் படகுகள் இரண்டை படையினர் தாக்கியழித்தனர் எனப் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

நேற்றுக்காலை நான்கு தற்கொலைத் தாக்குதல் படகுகள் உட்பட 15 படகுகளில் புதுமாத்தளனுக்கு வடக்கே நிலைகொண்டிருந்த 55ஆவது படைப்பிரிவின் மீது கடற்புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். அத்தாக்குதலின்போது விடுதலைப் புலிகளின் இரண்டு படகுகளை நாம் தாக்கி அழித்தோம். ஏனைய (16 ஆம் பக்கம் பார்க்க)

## 9 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் பாவனைப் பொருள்களைக் கொண்டு வர ஏற்பாடு

கொழும்பு,மார்ச்3

யாழ்-கண்டி ஏ-9 வீதி இம்மாதம் 9ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் பொது மக்களுக்குத் தேவையான பொருள்களை எடுத்துசெல்வதற்கு திறக்கப்படும் என்று அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் மீள்கட்டுமான அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் நேற்று நடைபெற்ற மாநாடு ஒன்றிலேயே பொருள்களை எடுத்துச்செல்வதற்குரிய போக்குவரத்தை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டதாகவும் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் அதனை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டதாகவும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மேலும் தெரிவித்தார்.

(அ-6)

## இந்திய நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த மாதத்தில்; ஐந்து கட்டங்களாக மே 13 வரை நடைபெறும்

புதுடில்லி, மார்ச்3

இந்திய நாடாளுமன்றத்துக்கான (லோக் சபாவுக்கான) தேர்தல் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் ஐந்து கட்டங்களாக மே மாதம் 13 ஆம் திகதி வரை நடைபெறும்.

தேர்தல் ஆணையம் இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை நேற்று விடுத்துள்ளது.

முதற்கட்டம் ஏப்ரல் 16 ஆம் திகதியும் (16 ஆம் பக்கம் பார்க்க)



சிறுவர்களை மீட்போம்

சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்

unicef



Call 110

அவசர அம்புலன்ஸ் சேவைக்கு

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால், பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு இச்சேவை வழங்கப்படுகிறது.

அழையுங்கள் 110

Trauma Secretariat UMCOR USAID MEDICAL TEAMS INTERNATIONAL World Health Organization Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சுடர் ஒளி ஆசிரியரை உடன் விடுவிக்குமாறு மனித உரிமை கண்காணிப்பகம் வற்புறுத்து

கொழும்பு, மார்ச் 03

கொழும்பு குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் ஆசிரியர் வித்தியாதரனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கேட்டுள்ளது.

இலங்கை அரசு மீண்டுமொருமுறை தமிழ் பத்திரிகையாளர் ஒருவரை அர்த்தமற்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைதுசெய்துள்ளதாகவும் மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

வித்தியாதரன் தாக்கப்பட்டார் என வெளியாகும் தகவல்கள் குறித்து கவலை வெளியிட்டுள்ள அந்த அமைப்பு, இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெப்ரவரி 26ஆம் திகதி கைது செய்யப்பட்ட பத்திரிகை ஆசிரியரை இலங்கை அரசு விடுதலை செய்யவேண்டும். அல்லது அவருக்கு எதிராக நம்பகத்தன்மை மிக்க குற்றச்சாட்டுகளைச் சுமத்த வேண்டும்.

'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியர் என். வித்தியாதரன் பிடியாணை இல்லாமல் கைதுசெய்யப்பட்டிருக்கிறார் எனவும் தடுப்புக் காவலில் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்றும் அவரது குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

இலங்கை அரசு மீண்டுமொருமுறை தமிழ்ப் பத்திரிகையாளர் ஒருவரை அர்த்தமற்ற குற்றச்சாட்டுகளை அடிப்படையாக வைத்துக் கைதுசெய்துள்ளது.

சீருடை அணிந்த மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் சீருடையணியாத மூவரும் மரணச்சடங்கொன்றில் வைத்து வித்தியாதரனை வெள்ளைவானில் கொண்டுசென்றனர் எனக் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

வித்தியாதரனை இனந்தெரியாத குழுவொன்று கடத்திச் சென்றுள்ளதாக ஆரம்பத்தில் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் பின்னர் அவர் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று குறிப்பிட்டார்.

வித்தியாதரன் கண்கள் கட்டப்பட்ட நிலையில் காலிலும் தலையிலும் தாக்கப்பட்டார். இதன் காரணமாகப் பொலிஸார் அவரை தலையில் எக்ஸ்ரே சோதனைக்காக மருத்துவமனைக்கு கொண்டுசெல்ல நேரிட்டது என 'உதயன்', 'சுடர் ஒளி' யின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஈ. சரவணபவன் சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகத்திற்குத் தெரிவித்தார்.

வித்தியாதரனை நேரில் பார்த்த குடும்பத்தினர் அவரது நிலை தொடர்பாக கடும் கவலையடைந்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசை விமர்சிக்கும் பத்திரிகையாளர்கள் மீது அரசு மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் இறுதியாக இடம்பெற்றதே வித்தியாதரன் கண்மூடித்தனமாகக் கைது செய்யப்பட்டு கௌரவமற்ற முறையில் நடத்தப்பட்டமையாகும்.

2006 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசு அரச கொள்கைகளுக்கு எதிரான மாற்றுக் கருத்துகளைக் கொண்டிருப்பவர்களை அச்சுறுத்தவும் மௌனமாக்கவும் முயல்கின்றது.

2005 இற்குப் பின்னர் 'உதயன்', 'சுடர் ஒளி' நிறுவனங்கள் பலமுறை தாக்கப்பட்டுள்ளன. ஆறு பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். வித்தியாதரன் கடந்த காலங்களிலும் அரச அதிகாரிகளிடமிருந்து அச்சுறுத்தல்களை எதிர்கொண்டிருந்தார்.

வடக்கில் யுத்தம் முடிவடைவது போல் தோன்றும் இத்தருணத்தில் ஊடகங்களுக்கு எதிரான அச்சுறுத்தல் தொடர்வதாகவே படுகிறது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## பம்பலப்பிட்டியில் பஸ் விபத்து; ஒருவர் பலி; 17 பேர் காயம்

கொழும்பு, பம்பலப்பிட்டி, டிக்மன்ட் வீதியில் நேற்றுக்காலை 7 மணியளவில் இரண்டு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதால் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 17 பேர் வரை படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் மூவரின் நிலைமை கவலைக்கிடமானதாக உள்ளது என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சிகிச்சைப் பிரிவின் அத்தியட்சகர் பிரசாத் ஆரியவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து ஹட்டன் நோக்கிச் சென்றுக்கொண்டிருந்த தனியார் பஸ்ஸும், ஹொரணையில் இருந்து கொழும்பு நோக்கி வந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. தனியார் பஸ்ஸின் சாரதியே உயிரிழந்தார்.

இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## மூத்த பிரஜைகள் குழு அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாண மாவட்ட மூத்தபிரஜைகள் பேரவையின் பணிமனை திறப்பு விழா எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு ச.சிவகுமாரன் தலைமையில் "சாந்திமாலா", இல- 95, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசஅதிபர் கணேஸ் கலந்து கொள்வார். ஆசியுரையை பாலகதிர்காம பிரதம குரு சிவஸ்ரீ கு.சௌபாக்கிய குமாரக்குருக்களும் வாழ்த்துரைகளை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும், கிறித்தாஸ் - கியூடெக் இயக்குநர் அருட்தந்தை கி.யோ. ஜெயக்குமாரும் வழங்கவுள்ளனர். (1-6)

## குடைச் சுவாமிகளின் குரு பூசை இன்று

குருதேவர் கந்தையா சுவாமிகளின் (குடைச் சுவாமிகள்) 31 ஆவது வருடாந்த குருபூசை இன்று காலை 8 மணிக்கு கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் அமைந்துள்ள அவரது சமாதியில் இடம்பெறவுள்ளது. (1-6)

## முன்பள்ளிகளுக்கு செயல்நூல்கள் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச்.03

தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளுக்கு விளையாட்டுக்கள் தொடர்பான செயல் நூல்கள் நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வைத்து வழங்கப்படும்.

முன்பள்ளி ஆசிரியர்கள் நூலினைப் பெற்றுக் கொள்ளுமாறு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) அ.பாக்கியராசா அறிவித்துள்ளார். (1-204)

## யாழ் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ். பிரதேச செயலகத்தின் 2009ம் ஆண்டின் முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (1-300)


**Pravin Best (பிரவிந்தம்)**

elementary world for the people's happiness

மக்களின் மன மகிழ்விற்கான ஆதார உலகம்

கல்வி, கலை, நலவாழ்வு, ஆராய்ச்சி, பசுமைப்பாதுகாப்பு முதலிய இன்னோரன்ன கடமைகள் விவரங்களை விரைவில் எதிர்பாருங்கள்.

பழைய வீதி, கோப்பாய் தெற்கு.
மேலும் விவரங்கள் விரைவில். நிர்வாகி.


## வாழ்த்துகிறேன்



என்னிடம் பிரத்தியேகமாக நாடகமும் அரங்கியலும் பாடத்தைப் பயின்று க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3A சித்திபெற்று மாவட்ட மட்டத்தில் 2ஆம் நிலையை அடைந்து பெருமை தேடித்தந்த யா/இராம நாதன் கல்லூரி மாணவி செல்வி வினுஷா நாராயணனை மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

கே.சுதா B.A. (Hons)
ஆசிரியர், நாடகமும் அரங்கியலும்.

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
17 ★ 05 ★ 1939



மறைவு
13 ★ 02 ★ 2008

### அமரர் மாதன் தம்பித்துரை

எங்கள் குடும்பக் குல விளக்கே அன்பின் இருப்பிடமே
அறிவின் பொக்கிசமே பார் போற்றும் நல் உத்தமரே
எம்மையெல்லாம் கண்ணை இமை காப்பது போல காத்தவரே
உங்களைக் கொடிய நோய் காவு கொண்டதுமே
எங்களை ஆதரிப்பதற்கு ஆயிரம் உறவு இருந்தென்ன
உங்கள் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஈடாகுமா?
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது உங்கள் நினைவு
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டி நிற்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, பிள்ளைகள்.

## ஆசிரியர் தேவை

அனைத்து விளையாட்டுக்களையும் பயிற்றுவிக்கக் கூடிய முழுநேர ஆசிரியர் தேவை.

தகைமைச் சான்றுகளுடன் 16.03.2009க்கு முன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

---

யா/இணுவில் மத்திய கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச்சங்கப் பொதுக்கூட்டம் - 2009

தலைவர்: திரு.அ.சதானந்தன் (கல்லூரி முதல்வர்)
காலம்: 22.03.2009 ஞாயிறு பி.ப. 3.30 மணி
இடம்: ஆரம்பப்பிரிவு மண்டபம்

சகல பெற்றோர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

குறிப்பு:- பிரேரணைகள் இருப்பின் 14.03.2009இற்கு முன் தலைவரிடம் கையளித்தல் வேண்டும்.

அதிபர்.

## துயர் பகிர்கிறோம்

எமது பாடசாலையின் ஆசிரியர் செ.பரராசசேகரம் அவர்களின் அன்புத் தந்தை

**சிற்றம்பலம் செல்லையா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/புங்குடுதீவு ஸ்ரீசித்தி விநாயகர் ம.வி.

## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் விசாகரத்தினம்



வேலணை மேற்கு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் விசாகரத்தினம் (ராசன்) 01.03.2009 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - மகாலட்சுமி தம்பதியினரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும் ரஜனியின் அன்புக் கணவரும் சிவதர்சன், தனுசன், சானுகா, சயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காந்திமதி, கருணாநிதி (கொழும்பு), கோமதி, செல்வநிதி (வவுனியா), பூமதி, காலஞ்சென்றவர்களான இந்துமதி, வளர்மதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மனோரஞ்சிதம், சறோசா, சுலோசனா (யாழ்.ப.நோ.கூ. சங்கம்), வசந்தகுமார், (ராணி அரிசி ஆலை, வவுனியா) காலஞ்சென்ற சாந்தகுமார், சுதாமதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.03.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3.00மணியளவில் அம்பலவி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ரஜனி (மனைவி), பிள்ளைகள், மருமகள் (சிறி).
7ஆம் வட்டாரம், வேலணை மேற்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இலங்கையுடன் சடுகுடு விளையாடும் இந்தியா!

போர் நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்குத் தாம் தயார் என்று விடுதலைப்புலிகள் அறிவித்ததைப் பயன்படுத்தி, மோதலில் சிக்குண்டுள்ள மக்களைக் காப்பாற்றுவதற்கு வசதி செய்யும் பொருட்டு இலங்கை அரசு போரை நிறுத்த வேண்டும் - என்று இந்திய அரசின் சார்பில் வெளிநாட்டு அமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அதே அறிக்கையை அடிப்படையாக வைத்து கடந்த சனிக்கிழமை தூத்துக்குடியில் நடைபெற்ற மின்நிலையத் திற்கு அடிக்கல் நடும் விழாவிலும் அமைச்சர் பிரணாப் உரையாற்றினார்.

இந்திய அமைச்சர் விடுத்த அறிக்கைக்கும், ஆற்றிய உரைக்கும் இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளர் பாலித கோஹன்ன அரசாங்கத்தின் சார்பில் பதிலளித்திருக்கிறார். பிரணாப் முகர்ஜியின்- இந்திய அரசாங்கத்தின் - கோரிக்கையை ஏற்கமுடியாது என்று அவர் அறிவித்திருக்கிறார்.

மோதலில் சிக்குண்டுள்ள மக்கள் மத்தியில் இனிமேலாவது உயிரிழப்புகளைத் தவிர்ப்பதே போர்நிறுத்தக் கோரிக்கையின் முக்கியமான இலக்கு என்பதனை முகர்ஜி தமது அறிக்கையிலும் சரி, தூத்துக்குடி உரையிலும் சரி மிகக் ''கவனமாக''வெளிப் படுத்தி இருந்தார்.

அவரின் கோரிக்கைக்கான பதில், அமைச்சர் பிரணாப்புக்கு மட்டுமன்றி இந்திய அரசாங்கத்துக்கும் ஒரு நெற்றியடியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.!

''விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால் போதும். மோதல்கள் தானாகவே நின்று விடும்; தாக்குதல்களும் இயல்பாகவே நின்று விடும்'' என்று கூறியிருக்கிறார் கோஹன்ன!

இந்திய அரசுக்கு இந்தச் ''சின்ன'' வாய்ப்பாடு (A Small Formula) தெரியாதா?. என்று கிண்டல் அடிப்பதாகவும் - இந்தியாவின் கோரிக்கையை ஏற்கமுடியாது என்று அடித்துச் சொல்வதாகவும் கோஹன்னவின் பதில் வெளிவந்துள்ளது. இனிமேல் இப்படிச் சின்னப்பிள்ளைத்தனமாக இந்த விடயத்தைக் கையாளாதீர்கள் என்று கூறுவதாகவும் அமைகிறது எனலாம்.

கடந்த சனிக்கிழமைக்கு முன்னரும், பெப்ரவரி 21 ஆம் திகதியன்று, முகர்ஜி சமாதானப் பேச்சுக்குச் செல்லுமாறு இலங்கை அரசாங்கத்திடமும், விடுதலைப் புலிகளிடமும் கேட்டிருந்தார். விடுதலைப் புலிகள் கொழும்பில் பெப்ரவரி 20 ஆம் திகதி இரவு விமானத் தற்கொலைத் தாக்குதல் நடத்திய பின்னர் இந்திய அமைச்சரின் இந்த அழைப்பு வந்திருந்ததாக அந்நாட்டின் செய்தி ஏஜன்சி ஒன்று விசேடமாகக் குறிப்பிட்டுக் காட்டியிருந்தது.

பிரணாப் முகர்ஜியின் இந்த அழைப்புக்குப் பதிலளிக் கும் விதத்தில் இலங்கையின் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தமது அலுவலகத்தில் பெப்ரவரி 23 ஆம் திகதியன்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்துரைத்தார். அது மிகவும் காரசாரமான பதிலாகவும் இந்தியாவை மட்டுமன்றி சர்வதேசத்தையே துச்சமாக மதிக்கும் வகையிலும் அமைந்திருந்தது.

புலிகளின் வேண்டுகோளுக்கு இணங்கியோ அல்லது சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்தோ எமது அரசாங்கம் ஒருபோதும் யுத்த நிறுத்தம் ஒன்றுக்குச் செல்லாது -

இலங்கையைத் தொடர்ந்தும் ஒரு காலனித்துவ நாடாக நினைத்துக் கொண்டு உள்விவகாரத்தில் தலையிட்டு, யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு அழுத்தம் கொடுப்பதைச் சர்வதேச நாடுகள் நிறுத்த வேண்டும்- என்று பிரதமர் ரட்ணசிறி கடுந்தொனியில் எச்சரித்திருந்தார்.

நிச்சயமாக இந்தப் பதில் பிரணாப் முகர்ஜியையும்- இந்தியாவையும் - நோக்கி விடுக்கப்பட்டது தான். பிரிட்டனுக்கும் பிரமதர் விக்கிரமநாயக்கா ஒரு ''தலையடி'' கொடுத்தார் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கை விவகாரத்தைக் கையாள்வதற்கென பிரிட் டிஷ் பிரதமர் கோல்டண் பிறவுண் விசேட தூதுவரை நியமித்தமையை இலங்கை அரசு காலால் உதைத்துத் தள்ளியது தெரிந்ததே!

எங்கள் வேலையை நாங்களே பார்ப்போம்; எவரும் இதில் மூக்கை நுழைக்க வேண்டியதில்லை என்ற இரும்புப் பிடியாகப் பிரதமரின் பதில் அமைந்திருந்தது.

அது ஒரு புறமிருக்க, இந்திய வெளிவிவகார அமைச்சர் முகர்ஜி, போர் நிறுத்தம் செய்யுமாறு மீண்டும் புதுடில்லியில் ஞாயிறன்று (01.03.2009 இல்) நடைபெற்ற மாநாடு ஒன்றில் வைத்து இலங்கை அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்.

அப்பாவிப் பொதுமக்கள் பலியாகாமல் தடுக்கும் நோக்குடன் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள போர் நிறுத்தத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தி இலங்கை அரசு போரை நிறுத்த முன்வரவேண்டும் என்று அங்கு கேட்டுள்ளார்.

அறிக்கை விட்டும், கூட்டத்தில் பேசியும், மகா நாட்டில் உரை நிகழ்த்தியும் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டும் பிரணாப் முகர்ஜி, அதனை உத்தியோக பூர்வமாக, அதிகார ரீதியாக எழுத்தில் அனுப்புவதற்கு என்ன தயக்கம்? வாய்ச்சொல், பேச்சு காற்றோடு காற்றாகக் கலைந்துவிடும். இலங்கையுடன் எந்த முகத்துடன் சிண்டு பிடிப்பது என்ற மனப்பயமா?

இலங்கை விவகாரத்தைக் கையாளும் முழுப்பொறுப்பும் இந்தியப் பிரதமரினால் அமைச்சர் பிரணாப் முகர்ஜியிடமே வழங்கப்பட்டிருக்கிறது. அவ்வாறிருக்க மிகவும் அவசரமான, அவசியமான விவகாரத்தில் - முல்லைத்தீவில் தமிழ் மக்கள் நாளாந்தம் உயிரிழந்து வரும் இந்த மிக ஆபத்தான வேளையில் - தமது கோரிக்கையை உத்தியோகபூர்வமாக எழுத்தில் அனுப்புவதற்கு முகர்ஜி பின்னடிப்பதேன்? இந்திய அரசுக்கும் முகர்ஜிக்கும் முதுகெலும்பு இல்லையா? அல்லது இவ்விடயத்தில் காலத்தைப் போக்கி இலங்கை அரசுக்கு உதவும் உள்நோக்கமா?

இலங்கைத் தமிழர்கள் அழிந்து கொண்டிருப்பதால் தமிழகம் பொங்கி எழுந்துள்ளது. அதனை நிறுத்துவதற்கு உதவாமல், இலங்கை அரசை உரிய விதத்தில் உந்தித்தள்ளாமல் பிரணாப் முடவாத்தாக பின்னிற்பது எதற்காக?

மனம் உண்டானால் இடமுண்டு. ஆனால் டில்லி அரசுக்கு இது விடயத்தில் அப்பழுக்கற்ற சுத்தமான மனதில்லை. தமிழகத்தைக் கட்டிப்போடுவதற்கு ஏதோ செய்வதாகக் காட்டிக்கொள்ளும் ஒருவகை போலி நாடகத்தை மத்திய அரசு ஆடுவதாகவே தெரிகிறது.

இது பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற நிலைப் பாட்டில் மேடையேறிக்கொண்டிருக்கிறது! உள்மனதில் ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் பிறந்திருப்பின் - பதிந்திருப்பின் - இந்திய மத்திய அரசு - வெளியுறவு அமைச்சர் ''கீச்சுமாச்சுத் தம்பளம் கீயா மாயா தம்பளம்'' காட்டும் சடுகுடு விளையாட மாட்டார்! இந்திய மத்திய அரசின் சடுகுடு விளையாட்டு ஈழத்தமிழருக்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது......!

# மோதல்கள் இடம்பெறும் வலயங்களுக்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

வன்னியில் மோதல்கள் இடம்பெறும் வலயங்களுக்கு ஊடகவியலாளர்கள் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

வன்னி மக்கள் குறித்த சர்வதேச அமைப்புகளின் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானதென்றால் அதனை நிரூபிக்க அரசாங்கம் சர்வதேச ஊடகங்களுக்கு மோதல்கள் இடம்பெறும் பிரதேசங்களுக்குச் செல்ல அனுமதி அளிக்க வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பக அவசர சேவைகள் பிரிவு ஆய்வாளர் எனா நீஸ்டெட் தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு, வவுனியா அகதிமுகாம்களின் நிலைவரம் குறித்து ஆய்வு நடத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனிதப் பேரவலம் குறித்து ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை கவனம்செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வாறான ஆய்வுகளை நடத்த மனித உரிமைகள் அமைச்சோ அல்லது வெளிவிவகார அமைச்சோ அனுமதி அளிக்கவில்லை என மனித உரிமைகள் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அனுமதி இன்றி இவ்வாறான ஆய்வுகளை மேற்கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## கடந்த இரண்டு மாதங்களில் மட்டும்

# காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட 887 பேருக்கு போதனா வைத்தியசாலை விடுதிகளில் சிகிச்சை

யாழ்ப்பாணம், மார்ச் 3

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 887 பேர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளனர் என வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 388 ஆண் நோயாளர்களும், 499 பெண் நோயாளர்களும் அடங்குகின்றனர்.

இதனைவிட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காய்ச்சலுக்குச் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

தற்போதைய கடும் வெப்பம் மற்றும் இரவில் கடுமையான குளிர் போன்றவற்றால் நோய்களுக்கு இலக்காவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதனால் வைத்தியசாலை விடுதிகளிலும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, குடாநாட்டில் வெப்ப நோய்களால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக சின்னமுத்து, பொக்குளிப்பான், கூகைக்கட்டு மற்றும் அம்மை நோய் போன்றவற்றின் தாக்கமும் அதிகரித்துள்ளது. (50-224)

# கரவெட்டிப் பிரதேசத்தில் 700 குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம்

## இதனை மேலும் விஸ்தரிப்பதற்கும் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்3

கரவெட்டிப் பிரதேசத்தில் இதுவரை எழுநூறு குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனை மேலும் விஸ்தரிப்பதற்கும் திட்டமிட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

அத்துளு குளத்தில் உள்ள கிணறு ஊடாக இந்தக் குடிதண்ணீர் நாள் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் விநியோகிக்கப்படுகின்றது.

இதற்கென ஒவ்வொரு வீட்டிலும் ஒரு குழாயும் அளவு கருவியும் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தக் குடிதண்ணீர் விநியோகத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று வடிகால் அமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குழாய் மூலம் குடிதண்ணீரைப் பெறுவதற்கு மேலும் நூற்றுக்கணக்கான மக்கள் விண்ணப்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(50-224)

# பிரபாகரனைப் பாதுகாக்க இந்தியா முயன்றால் தேசப் பற்றாளர்கள் வீதியில் இறங்குவார்கள்

## நாடெங்கும் போராட்டங்கள் வெடிக்கும் என்கிறார் அமைச்சர் சம்பிக்க



விடுதலைப் புலிகளையும் பிரபாகரனையும் பாதுகாக்க இந்தியா பலாத்காரத்தைப் பிரயோகிக்குமானால் 1987 ஆம் ஆண்டு ஏற்பட்ட சூழ்நிலை உருவாகும். தேசப்பற்றாளர்கள் இந்தியாவுக்கு எதிராக வீதியில் இறங்குவார்கள். சீனா, ரஷ்யா, வியட்நாம் ஆகிய நாடுகளின் ஆதரவு எமக்கிருக்கின்றது. எனவே ஐ.நா.பாதுகாப்பு சபையில் எந்தப் பிரேரணை கொண்டுவந்தாலும் இலங்கையை அசைக்க முடியாது என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்தை இலங்கை அரசாங்கம் ஏற்கவேண்டுமென இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளமை குறித்து ஐ.நா.சபையில் ஹோம்ஸ் வெளியிட்ட தவகவல்கள் தொடர்பிலும் அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாட்டை தெரிவிக்கையிலேயே சுற்றுச்சூழல் மற்றும் வன வளப்பாதுகாப்பு அமைச்சர் சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் தோல்வியின் விளிம்பில் உள்ளனர். இந்தச் சூழலில் யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை. புலிகளின் யுத்த நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்தை இந்தியா வலியுறுத்துவது உலகளாவில் அந்நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும். இதற்கு முன்பும் இந்தியா பலாத்காரத்தை பிரயோகித்து பிரபாகரனை பாதுகாத்தது. அதே செயலை இன்றும் செய்வதற்கும் முனைந்தால் 1987 ஆம் ஆண்டைப் போன்று தேசப் பற்றாளர்கள் இந்தியாவுக்கு எதிராக வீதியில் இறங்குவார்கள். இந்திய எதிர்ப்புப் போராட்டங்கள் வெடிக்கும். இலங்கை இறையாண்மை கொண்ட சுயாதீனமான நாடு. எனவே எமது பிரச்சினையில் தலையிட பிரிட்டனுக்கோ அல்லது வேறெந்த மேற்குலக நாடுகளுக்கோ அதிகாரம் இல்லை. அவர்களது ஆலோசனையைக் கேட்க வேண்டிய தேவையும் எமக்கில்லை. இந்த மேற்குலக நாடுகள் தான் புலிகளுக்கு விமானங்களையும், தொழில்நுட்ப வசதிகளையும் வழங்கினர். எனவே மேற்குலக நாடுகளின் பேச்சைக் கேட்க நாம் தயாரில்லை - என்றார் அவர்.

## நாளை

| | |
|---|---|
| மாசி 20 | 04.03.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | அட்டமி |
| | மு.ப. 10.57 வரை |
| நட்சத்திரம்: | ரோகிணி |
| | மாலை 05.57 வரை |
| சுபநேரம்: | 04.56 - 06.26 |
| ராகுகாலம்: | 12.26 - 01.56 |

# அடுத்து வரும் நாள்களில் பல பகுதிகளில் மின்வெட்டு

கொழும்பு, மார்ச் 3

எதிர்வரும் நாள்களில் நாட்டின் பல பகுதிகளிலும் மின்வெட்டு அமுல் படுத்தப்பட வேண்டிய நிலை உருவாகும் என மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் வரட்சியினால் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைவடைந்து செல்கின்றது. அதனால் நீர்மின் உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டுமென பொதுமக்களுக்கு மின்சக்தி அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேவையில்லாமல் மின்குமிழ்களை ஒளிரவிடவேண்டாம் எனவும் மின்சார உபகரணங்களின் பாவனைகளைக் குறைத்துக் கொள்ளுமாறும் பொது மக்களுக்கு அந்த அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த இரு மாதங்களாக நீரேந்து பகுதிகளில் வரட்சியான காலநிலை நிலவி வருகின்றது. அதனால் நீர்மின் உற்பத்தி குறைந்துள்ளமையினால் எரிபொருள் மூலம் கூடுதலான மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த நிலைமை இந்த மாதப் பிற்பகுதிவரை தொடரும் என மின்சக்தி அமைச்சு மேலும் தெரிவித்தது.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுர்த்தி வங்கிகள் ஊடாக ஓட்டோ உரிமையாளர்களுக்கு நிவாரணம்

யாழ்.பிரதேச செயலகப்பிரிவில் வதியும், வாடகைத் தேவையின் பொருட்டு முச்சக்கர வண்டியைப் (ஓட்டோ) பயன்படுத்தும் ஓட்டோ உரிமையாளர்களுக்கு பெற்றோல் நிவாரணம் வழங்கப்படவிருக்கிறது.

யாழ்.பிரதேச செயலர் மரியதாஸன் ஜெகு இதனைத் தெரிவித்தார்.

ஓட்டோவுக்குப் பயன்படுத்தும் பெற்றோலின் அளவுக்கு ஏற்ப லீற்றருக்கு ரூபா 20 வீதம் மாதாந்தம் 1500 ரூபாவரை சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் மூலம் வழங்க சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

எனவே மேற்குறித்த கொடுப்பனவினை பெறத்தகுதியான ஓட்டோ உரிமையாளர்கள் உரிய படிவத்தினை தத்தம்து பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரிடமோ அல்லது கிராம அலுவலரிடமோ அல்லது தங்கள் பிரிவுக்கான சமுர்த்தி வங்கிச் சங்கத்திலோ பெற்று உடனடியாக சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர் செ.ஞானசேகரம் அவர்களின்
அன்புத் தந்தையார்

### சிற்றம்பலம் செல்லையா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்.



## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தில் கடமைபுரியும் யேசுநேசன்
அவர்களின் அன்பு மனைவி

### திருமதி யே.சகாயராணி

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சியடைவ துடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,யாழ்ப்பாணம்.
பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கிராம அலுவ லராக கடமையாற்றும் ஆர்.திருப்புகழூர்சிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி இராஜசிங்கம் சின்னம்மா

அவர்கள் 01.03.2009 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகிறோம்.

*ஊழியர் நலன்புரிச் சங்கம்,*
*உதவி அரச அதிபர் பணிமனை, காரைநகர்.*

## இதய அஞ்சலி

காரைநகர் ஐடியல் அக்கடமி விஞ்ஞான ஆசிரியர்
இ.திருப்புகழூர்சிங்கம் அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி சின்னம்மா இராஜசிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தவர், உறவினர், நண்பர்களுக்கு ஐடியல் குடும்பத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது ஆத்மா சாந்திபெற ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ் வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நிர்வாகி, ஆசிரியர், மாணவர்கள், ஐடியல் அக்கடமி.
(சண்டிலிப்பாய், காரைநகர், யாழ்ப்பாணம், மானிப்பாய்)

## இதய அஞ்சலி

எமது கல்லூரியின் ஆரம்ப பிரிவு பகுதித் தலைவர்
செல்வி சுபத்திராதேவி இராஜசிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

### அமரர் சின்னம்மா இராஜசிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்,
காரைநகர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கலா மன்ற உபதலைவர்
இ.திருப்புகழூர்சிங்கம் அவர்களினதும் நிர்வாக
உறுப்பினர் செல்வி இ.சுமத்திராதேவி
அவர்களினதும் பாசமிகு தாயார்

### திருமதி இராஜசிங்கம் சின்னம்மா

அவர்களது பிரிவுத்துயர் அறிந்து அதிர்ச்சி அடைவதுடன் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா ஈழத்துச் சிதம்பர தில்லைக் கூத்தன் திருவடி சேர பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.
நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## கொடிகாமம் நகரில் நேற்று மினி சூறாவளி

யாழ்ப்பாணம், மார்ச் 3

கொடிகாமம் நகரப் பொதுச் சந்தைப் பகுதியில் நேற்று நண்பகல் திடீரென மினி சூறாவளி வீசியது.

பெரும் இரைச்சலுடன் சுழல்காற்று வீசி அங்கு கூடியிருந்த மக்களை கிலி கொள்ளச் செய்தது.

இந்த மினி சூறாவளியால் பொதுச் சந்தை உள் வளாகத்தில் இரு கடைகளின் கூரைச் சீற்றுக்கள் காற்றுடன் எழுந்து உடைந்தன.

இந்த அனர்த் தத்தின் போது பொது மக்கள் செய்வதறியாது வீதியின் ஓரமாகவும் கடைகளின் உள்ளேயும் ஓடிப் பாது காப்பைத் தேடிக்கொண்டனர்.

(1-131)

## விளையாட்டு நிகழ்வுகள்

வண்ணை, மார்ச்.03

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தப்பட்டு வரும் யாழ். மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் மாபெரும் விளையாட்டுப் போட்டிக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றையதினம் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

* சென் மேரிஸ் வி.க. எதிர் வளர்மதி வி.க.

(1-60)

* * *

வலி வடக்கு,மார்ச்.03

யாழ். மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டு வரும் 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளன.

ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* தெல்லிப்பழை நாமகள் வி.க எதிர் அளவெட்டி விநாயகர் வி.க.
* புத்தூர் கலை மகள் வி.க, எதிர் அராலி துணைவி சென்.ஸ்ரார் வி.க.

(1-86)

* * *

வலி.வடக்கு,மார்ச்.03

யாழ். மக்கள் வசந்தம் எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி யங்லயன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகள் விவரம் வருமாறு:-

* வதிரி பொம்மேர்ஸ் வி.க எதிர் தொண்டமனாறு கலைவாணி வி.க.
* கரவெட்டி கரவைசுடர் வி.க எதிர் துன்னாலை சுடர்ஒளி வி.க.

(1-86)

* * *

யாழ்ப்பாணம், மார்ச்.03

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆண், பெண், பிரிவு கரப்பந்து அணிகளுக்கான சுற்றுப் போட்டிகள் இன்றும், நாளையும் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறும்.

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய மைதானத்தில் இன்று பெண்கள் அணிகளுக்கும் நாளை ஆண்கள் அணிகளுக்கும் ஆட்டங்கள் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(1-207)

* * *

குருநகர், மார்ச்.03

யாழ். சென்றல் -சென். ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட்போட்டி எதிர்வரும் சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(1-51)

**படிவம்**

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பயிற்சிக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.

**Personal Class**

1-12 வரையான மாணவர்களுக்கு English Personal Class உம், Spoken with Grammer கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். (மேலதிக விவரங்களுக்கு ஆசிரியரை தொடர்பு கொள்ளவும் (அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை))
தொடர்பு:- கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T.P.No. 0771372280

**வேலைக்கு ஆள்தேவை**

கணக்காளர், விற்பனையாளர் பதவிகளுக்கு ஆள்தேவை, சிறந்த கணக்கியல் அறிவும், முன் அனுபவமும் தகைமைகளாக வேண்டப்படுகின்றன. தகைமையுள்ளோர் நேரில் வரவும்.
M/S ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
இல.212 - 214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## விழிநீர் அஞ்சலி




எமது அலுவலகத்தில் அபிவிருத்தி
உதவியாளராக கடமையாற்றும்
திருமதி தி.குகாஜினி அவர்களின்
அன்புத் தந்தையார்

### அமரர் சிற்றம்பலம் செல்லையா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திட்டப்பணிப்பாளரும் அலுவலர்களும்,
மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் உதயன் ஊழியர்
பத்மரஞ்சன் அவர்களின் அன்புத்
தந்தையும் விஜியலட்சுமியின்
அன்பு மாமனாருமான

### சிற்றம்பலம் செல்லையா

அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகிறோம். அன்னாரின் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவித்துக் கொள் வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள், நண்பிகள்.

## மரண அறிவித்தல்கள்

### சிற்றம்பலம் செல்லையா

(முன்னாள் தலைவர், விவசாய சம்மேளனம்)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் செல்லையா நேற்று (02.03.2009) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கமலாவதியின் அன்புக் கணவரும் ஞானசேகரம் (ஆசிரியர், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயம்), சந்திரசேகரம் (கனடா), பரராஜசேகரம் (ஆசிரியர், புங்குடுதீவு ஸ்ரீ சித்தி மகாவித்தியாலயம்), பத்மராணி (கலாசார உத்தியோகத்தர், கல்வி அமைச்சு பண்பாட்டலுவல்கள் திணைக்களம், பிரதேச செயலகம், சாவகச்சேரி), பஞ்சநாதன் (ஜேர்மனி), சுந்தரவதனி (ஜேர்மனி, முன்னாள் உத்தியோகத்தர் நல்லூர் பிரதேச செயலகம்), புஸ்பகாந்தி (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பத்மரஞ்சனி, பத்மரஞ்சன் (பிரான்ஸ்), குகாஜினி (அபிவிருத்தி உதவியாளர், யாழ்.செயலகம், புனர்வாழ்வுக்கிளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவஜெயந்தி (யாழ்.செயலகம், கணக்குக்கிளை), சாந்தாதேவி (கனடா), சிவஞானராசா (ஹோட்டல் ஓசானிக், திருகோணமலை), ஜனனி (ஜேர்மனி), சுரேந்திரராஜன் (ஜேர்மனி), தயானந்தராஜன் (உரிமையாளர், ராஜன்ஸ் புத்தக நிலையம்), விஜயலஷ்மி, தினேஸ்குமார் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜானி, கஜகர்ணி, அரவிந், ஆரணி, அர்ச்சனா, அபிஷன், அபிரான், மெலானி, ஹரி, ஹரன், பவித் திரன், வித்தகி, குருபரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, துரையம்மா, இரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.15, முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

### செல்லையா சிவஞானம் (புகையிலைத் தரகர்)



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவஞானம் (புகையிலைத் தரகர்) நேற்று (02.03.2009) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - எள்ளுப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற இராசம்மாவின் பெறாமகனும் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவநந் தினியின் அன்புத் தந்தையாரும் ரமேஷின் (ஆசிரியர், யா/மல்லாகம் மகாவித்தியாலயம்) அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, அப்புத்துரை, செல்லம்மா, நாகம்மா மற்றும் அன்னலட்சுமி, சண்முகரட்ணம் (சோதி), மகாலிங்கம் (தேவன்), வசந்தா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, ஜெகசோதி அம்மாள் மற்றும் ருக்மணிதேவி ஆகியோரின் மைத்துனரும் மகிஷாயினி, சாங்கிருத்தியன் ஆகியோரின் அன்புப் பேர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியவளவு, ஏழாலை மேற்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
சி.ரமேஷ் (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் சைவப் புலவர் பட்டமளிப்பு விழா வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா.வேதநாதன் மாணவர்களுக்கு சைவப்புலவர் பட்டம் வழங்குவதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.
நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் யாழ்.பல்கலைக்கழக சைவசித்தாந்த கற்கைநெறி வருகை விரிவுரையாளர் ஆ.சபாரத்தினத்திற்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதை மூன்றாவது படத்தில் காணலாம்.
நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை நான்காவது படத்தில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

### விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம்

## இந்த ஆண்டு பெரும்போகச் செய்கைக்கென 4 ஆயிரம் புசல் நெல்லை கொள்வனவு செய்யும்

யாழ்ப்பாணம்,மார்ச்.3

குடாநாட்டு விதைஉற்பத்திக்கூட்டுறவுச் சங்கம் இந்த ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கைக்கென நான்கு ஆயிரம் புசல் நெல்லை கொள்வனவு செய்யவுள்ளது.

மேற்படி விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்க அதிகாரி ஒருவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கடந்த பெரும்போக நெற்செய்கையின் போது நெல் அறுவடை மேற்கொண்ட விவசாயிகளிடம் இருந்து இந்த நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

கொள்வனவு செய்யப்படும் இந்த நெல் இந்த ஆண்டு பெரும்போக நெற்செய்கைக்கென விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

இதேவேளை- தற்போது நெல் அறுவடை ஆரம்பமாகியும் நெல்லின் விலை குறைவடையவில்லை என்றும் மேற்படி சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (203-224)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,மார்ச்.3

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் வியாபர முது நிர்வாகமாணி பட்ட நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த விண்ணப்பப் படிவத்தை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெறமுடியும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை-2009/10 ஆம் கல்வியாண்டுக்கான பட்டமேற் தொலைக் கல்வி டிப்ளோமா சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுப் கொள்ள முடியும் என இணைப்பாளர் மேலும் தெரிவித்தார். (201)

* * *

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2009 ஆம் ஆண்டுக்கான மருத்துவக் கல்வி மற்றும் பாலியல் இனப்பெருக்க விருத்திக் கற்கை நெறி, இருதய ஆரோக்கிய கற்கை நெறி ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்திலும் ஏனைய பிராந்திய நிலையங்களிலும் பெற முடியும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (201)

## வரட்சிக் காலத்திலும் வற்றாத நன்னீர் கிணறு விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது

யாழ்ப்பாணம்,மார்ச்.3

வடமராட்சிதம்பசிட்டிபகுதியில்மாயக்கை என்ற இடத்தில் வரட்சிக் காலத்திலும் தண்ணீர் மட்டம் குறையாத நிலையில் உள்ள நன்னீர் கிணறு ஒன்று விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் இந்த தகவலை தெரிவித்தனர்.

நீர் மட்டம் வற்றாத இந்த நன்னீர்க் கிணற்றை விரைவில் புனரமைப்புச் செய்து வடமராட்சியின் சில பகுதிகளுக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் அத்துளு நீர்த்திட்டம் மூலம் விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் போதுமானதாக இல்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தற்போதைய கடும் வரட்சியால் இந்த குழாய்க் கிணறு மூலம் போதியளவு குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியாது உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த நீர்மட்டம் குறைந்து காணப்படுவதால் குடி தண்ணீர் செந்நிறமாக மாறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (203-224)

## கொக்குவில் இந்து மயானத்தில் விளம்பரப் பலகை அமைக்க ஏற்பாடு

நல்லூர்,மார்ச்.3

கொக்குவில் இந்து மயானத்தில் விளம்பரப் பலகை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நல்லூர் பிரதேச சபைச் செயலர் எம்.சாந்தசீலன் தெரிவித்துள்ளார்.

கொக்குவில் இந்து மயானத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெறும் வேளை அங்கு அத்துமீறி நுழையும் வெளியார் அங்கு கிரியைகள் செய்ய வருவோரிடம் பணம் அறவிடுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது. இதனையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாகப் பிரதேச சபைச் செயலர் தெரிவித்தவை வருமாறு:-

பிரதேச சபையினால் நியமிக்கப்பட்ட இடுகாட்டுத் தொழிலாளிக்கு மாதாந்தக் கொடுப்பனவுடன் மயானக் கட்டணமாக அறவிடப்படும் தொகையில் இருந்து ஒவ்வொரு இறுதிக் கிரியைக்கும் இருநூறு ரூபா மேலதிகமாக வழங்கப்படுகிறது.

பொதுமக்களிடம் அறவிடப்படும் கட்டணத்தில் இருந்து இடுகாட்டுத் தொழிலாளிக்கு மேலதிக கொடுப்பனவு வழங்கப்படுவது குறித்து பணம் செலுத்த வரும் மக்களுக்கு பிரதேச சபையால் தெரிவிக்கப்படுகிறது.

மயானத்தில் பணம் கேட்போரை உறுதி செய்யும் பொருட்டு பொது மக்கள் அவரிடம் அவரது அடையாள அட்டையைப் பார்வையிட்டு பிரதேச சபை ஊழியர் எனின் அது குறித்துப் புகார் செய்யலாம். பணம் அறவிடுவது தொடர்பாக இதுவரை எழுத்து மூலமான முறைப்பாடுகள் எவையும் எமக்குக் கிடைக்கவில்லை - என்றார். (203-201-111)

## தவக்காலச் சிந்தனை

### தவக்கால நுழைவில்

மீண்டுமொரு தவக்காலத் தரிசிப்பிற்கு நாம் வந்திருக்கின்றோம். நம் ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்ற பாஸ்கா மறைபொருளை உள்ளுணர்வோடு சிந்திக்க முனைந்து நிற்கிறோம்.

இந்நிலையில் புறச்சூழல் எம்மை என்றுமில்லாதவாறு நெருக்குகின்றது. தினந்தினம் செத்து மடியும், வன்னிவாழ் உறவுகளின் சாவுச் செய்திகள் நெஞ்சை ரணகளமாக்குகிறது. காயங்களின் வலி, இடம் பெயர்வின் கொடுந்துயரம், செறிவான செல்வீச்சுக்களின் அழிவுப் பயங்கரம், மரண ஓலம், பதுங்குகுழியில் விடியும் பகல்கள் எந்தவொரு அமைதிக்கான அழுத்தத்திற்கும் அடிபணியாத தலைமைகள் என்ற துயரப்பட்டியல்களோடு ஓர் தவக்காலம் நம்மைச் சந்திக்கிறது.

திருநீற்றுப் புதனில் நெற்றியில் சாம்பல் பூசிக்கொள்ளல், உபவாசம், சுத்த போசனம் என்ற வெளி அடையாளங்களோடு இந்த நாள் காலந்தோறும் நினைவு கூரப்படுகிறது. இந்த எழிய அடையாளங்கள் உணர்த்த முனையும் உண்மை மனமாற்றம் என்பதே.

சாம்பல்கள் எமக்குப் பரிச்சியமானவை. எமது எதிர்பார்ப்புக்கள் நாம் கட்டிக் காத்தவை இன்பசுகங்கள் நாம் அன்பு செய்தவை பல, இன்று நம்மோடு இல்லை. சாம்பல் மேடாகி விட்டன. இவ்வுலகில் எதுவுமே நிரந்தரம் இல்லை என்ற செய்தியை இவை உணர்த்துகின்றன அல்லவா? பின் எது நிரந்தரம்? இவ்வுலகைக் கடந்த இன்னொரு வாழ்வு.இறைவனைச் சார்ந்த முடிவில்லா வாழ்வு. இதுவே நிரந்தரம். இவ்வாழ்வை அடைய நாம் செய்ய வேண்டியவை எல்லாம் உள்ளப் புதுப்பித்தலே.

பாவ வாழ்வை விட்டு விலகும் எண்ணத்தை இயல்பாக எம்மில் ஏற்படுத்த வேண்டும். நாம் போட்டிருக்கும் வெளிவேடம். போலி ஆன்மீக முகமூடி இவற்றைக் துறக்க வேண்டும். பகைமை உணர்வை விட்டு அயலவனை மன்னித்து நேசிக்கும் அன்பின் இதயம் வேண்டும்.

இவ்வாறு எம் அந்தரங்கத்தில் மனதில் ஆழத்தில் ஆத்மீகப் பயணம் செல்லும் ஓர் அருளின் நாள்கள் இவை. பாவப் பிறப்புக்களால் கறைபட்ட வாழ்வைச் சீர்செய்ய முனையக் கிடைத்த புனித காலம் இது. செப, தவ, தான,தர்ம, மனநிலைகளோடு ஆண்டவரிடம் திரும்பிவரக் கிடைக்க பாக்கியமான நாள்கள் இவை. ஆயுதக் கலாசாரம் ஆளுகையும் போர் இடி முழக்கங்களும் அவலமும் அகன்று போக மனிதன் வாழ்க்கைத் தடங்களில் மாற்றம் அவசியம். என்ற ஆண்டவரின் எதிர்பார்ப்பு இந்த தவக்காலத்தை அர்த்தமுள்ளதாக்குவதாக.'மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்' என்ற ஆண்டவரின் குரல் எம் மனங்களில் சில மாற்றங்களையாவது தோற்றுவிக்குமா...? -அருட்திரு.ஜீ.அ[illegible]

## இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் இணுவில் மத்திய கல்லூரி சாதனை

### உதவிக் கல்விப் பணிப்பாளர் பாராட்டு

யாழ்ப்பாணம்,மார்ச்.3

பாடசாலைகளுக்கிடையிலான இணைப்பாட செயற்பாடுகளிலும் இணுவில் மத்திய கல்லூரி சாதனைகளைப் பெற்று வருகின்றது.

வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விக் பணிப்பாளர் மு.நடராஜா இவ்வாறு பாராட்டுத் தெரிவித்தார்.

இணுவில் மத்திய கல்லூரியில் இடம் பெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும்போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இணுவில் மத்திய கல்லூரியானது கல்விச் செயற்பாடுகளில் மட்டுமின்றி இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் முன்னணியில் திகழ்ந்து வருகிறது என்பதற்கு கடந்த ஆண்டுகளில் மாணவர்களின் செயற்பாடுகளால் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் சான்று பகர்கின்றன.

புத்தாக்கக் கண்டுபிடிப்பு சாதனங்களைக் காட்சிப்படுத்தி இரண்டு விசேட சான்றிதழ்களை கு.நிரோஜன் என்ற மாணவன் பெற்றுள்ளார்.

வலிகாம வலயத்தில் புதிதாக அறி முகம் செய்யப்பட்ட 'கபடி' விளையாட்டுப் போட்டியில் இப்பாடசாலை வெற்றியைத் தனதாக்கி வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

மாகாண மட்ட ஆளுநர் விருதுகளை 4 சாரணர்கள் பெற்றுள்ளனர். இச்சாதனைகள் மூலம் மாணவர்கள் சிறந்த முறையில் அதிபர், ஆசிரியர்களால் வழிப்படுத்தப்பட்டு வருவதையிட்டு மகிழ்வுடன் பாராட்டுகின்றேன்.

விளையாட்டுத் துறையில் மாணவர்கள் ஈடுபடுவதால் கல்விச் செயற்பாடுகள் பாதிப்புக்குள்ளாகும் என்று பெற்றோர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் சாதனை புரிகின்ற மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெறுவதை நாம் அறிந்து கொள்கிறோம்.

மாணவர்கள் விளையாட்டு விதிகள், நுட்ப முறைகள் என்பவற்றை துல்லியமாக அறிந்து பயிற்சி செய்வது அவர்களுக்கு மேன்மேலும் வெற்றிகளைத் தேடிக் கொடுக்கும் - என்றார். (202-9-45)

## குடத்தனையில்மணல் ஏற்றும் லொறிகளுக்கு பருத்தித்துறைப் பிரதேச சபையால் வரி அறவீடு

வடமராட்சி,மார்ச்.3

வடமராட்சி கிழக்கு, குடத்தனைப் பகுதியில் மணல் ஏற்றவரும் லொறிகளுக்கு பருத்தித்துறை பிரதேச சபையால் தரிப்பிட வரி அறவிடப்பட்டு வருகிறது.

குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்து கட்டுமாணப் பணிகளுக்கும் யாழ். செயலகத்தின் அனுமதியுடன் வடமராட்சிகிழக்கு குடத்தனைப் பகுதியில் மணல் எடுக்கப்பட்டு வருகின்றது.

குடத்தனையில் மணல் அள்ளும் பகுதி பருத்தித்துறைப் பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ளதால் மணல் ஏற்றுவதற்கோ அல்லது அதனை எடுத்துச்செல்லவோ எதுவித வரியும் வழங்கப்படுவதில்லை.

இவ்விடயம் தொடர்பாக பருத்தித்துறை பிரதேச சபை யாழ்.அரச அதிபருடன் நீண்ட காலமாகத் தொடர்பு கொண்டதையடுத்து அப்பகுதிக்கு நாளாந்தம் மணல் ஏற்றவரும் லொறிகளுக்கு வரி அறவிட பருத்தித்துறைப் பிரதேச சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நாளாந்தம் மணல் ஏற்றிச் செல்லும் லொறி ஒன்று பருத்தித்துறை பிரதேச சபைக்கு 50 ரூபா வீதம் வரியாகச்செலுத்த வேண்டும்.

பிரதேச சபையின் வரி அறவிடும் உத்தியோகத்தர் குடத்தனையில் மணல் ஏற்றும் இடத்தில் வைத்து லொறிகளுக்கான வரியை அறவிட்டு வருகின்றார். (203-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடம் பெயர்ந்த ஆசிரியருக்கு யாழ்.வலயத்தில் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,மார்ச்.3

இடம்பெயர்ந்து யாழ்.கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான பெப்ரவரி மாதத்துக்குரிய சம்பளம் வழங்கப்படவுள்ளது.

மேற்படி ஆசிரியர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னர் வேதனப் பட்டியலில் கையொப்பமிட்டு சம்பளத்தை வங்கியூடாகப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்வி பதில் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (201)

## மரண அறிவித்தல்



### திருமதி.இந்திரா பொன்னுத்துரை

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இந்திரா பொன்னுத்துரை 27.02.2009 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம்மாவின் சிரேஷ்ட புத்திரியும் இளையதம்பி பொன்னுத்துரையின் (இளைப்பாறிய ஓய்வூதியர்) மனைவியும் ஜெயக்குமார்,ரோகினி, இந்திரகுமார்,மாலினி, பவானி, பாலகுமார் ஆகியோரின் அருமைத் தாயாரும் சாந்தி, மகேந்திரன், ஜெயகுமாரி, திருக்குமார், லிங்கநேசன், சுஜிதா ஆகியோரின் மாமியாரும் கிருசாந், சுஜானி, ஈசானி, ஆரணி, ரிஷிகேஷன், ராகுல், மொனிஷா, வர்ஷா, அனோஜன், சஞ்சயன் ஆகியோரின் பேத்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 03.03.2009 காலை 9 மணி தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் புதன்கிழமை காலை 8 மணிக்கு ஈமைக்கிரியைகள் நடைபெற்று காலை 10 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுன்றனர்.

தகவல் : குடும்பத்தார்
இல 27,5/1, டாக்டர்.ஈ.ஏ.குரே மாவத்தை,
வெள்ளவத்தை.

## பெருங்காடு – இறுப்பிட்டி வீதி திருத்தப்படாமையால் சிரமம்

நல்லூர்,மார்ச் 3

புங்குடுதீவு பெருங்காடு இறுப்பிட்டி வரையான பிரதான வீதி இன்னமும் புனரமைக்கப்படாத நிலையில் உள்ளதாக புங்குடுதீவு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியைப் புனரமைத்துத் தரும்படி இங்குள்ள மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விண்ணப்பித்திருந்ததுடன் அவர்களை நேரடியாக அழைத்து வீதியின் நிலைமையை எடுத்துக் காட்டியும் உள்ளனர்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இந்த வீதியைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியால் தற்சமயம் வாகனப் போக்குவரத்துக்கள் இடம்பெறுவதில்லை எனவும் நோயாளர்களும் யாழ். நகருக்குச் செல்வதற்காக வருவோரும் நீண்ட தூரம் நடந்து வந்து பெருங்காட்டுச் சந்தியிலேயே வாகனங்களில் ஏற வேண்டியுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (203-111)


### வீடு வாடகைக்கு

தாவடி பாடசாலை வீதியில் கௌரவமான சுற்றாடலில் வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகர் குடும்பம் விரும்பத்தக்கது
தெடர்பு: 060 221 0218, 0779559442

### தவறிவிட்டது

நாச்சிமார் கோவிலடி , புன்னாலைக்கட்டுவன் என்னும் முகவரியுடைய லோகேஸ்வரன் வேனுகா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல885573592V) திருநெல்வேலிக்கும் கரந்தனுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் விலாசத் தில் ஒப்படைத்து உதவவும்.சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: தங்கலிங்கம் நாகராசா
கரந்தன் , நீர்வேலி
தொ.பே: 0776624028

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள
1. M.D 90 500 MOTOR CYCLE
2. DATSUN SUNNY CAR 11 SRI
தொடர்பு :- 0772097009


## கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூறாவது ஆண்டை முன்னிட்டு மலர் வெளியிடப்படவுள்ளது

யாழ்ப்பாணம்,மார்ச்.3

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூறாவது ஆண்டை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள நூற்றாண்டு விழா மலருக்கு இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வசிக்கும் கல்லூரியின் பழைய மாணவர்களிடம் இருந்து வரலாற்றுத் தகவல்களை மலர்க்குழு திரட்டவுள்ளது.

இதன்மூலம் பழைய மாணவர்கள் தாங்கள் கல்வி பயின்ற காலத்தில் புரிந்த சாதனைகள், அக்காலத்தில் தங்களுடன் கல்வி பயின்றவர்கள் புரிந்த சாதனைகள், மற்றும் கல்லூரியில் இடம்பெற்ற குறிப்பிடத்தக்க சாதனைகள், கல்விசார்ந்த, விளையாட்டுக்கள் சார்ந்த மற்றும் இணைப்பாட விதானம் சார்ந்தவையாக இருக்க வேண்டும்.

மேற்படி தகவல்களை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ''தலைவர், நூற்றாண்டு மலர்க்குழு, கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்'' என்னும் முகவரிக்கு அல்லது kokuvilhindu@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
### சடையர் சுப்பிரமணியம்
(பனை அபிவிருத்திச்சபை, தேசிய வீடமைப்புச் செயலக கட்டடம், யாழ்ப்பாணம்)



மலர்வு
03.03.1952

உதிர்வு
01.02.2009

கடந்த 01.02.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், மற்றும் பல வழிகளில் எமக்கு உதவியவர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (03.03.2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (83006) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



பிரம்ம ஸ்ரீ
### தேவராஜக்குருக்கள் இரவீந்திரக்குருக்கள்

வேத மொழியாலே தீராத வினைதீர்க்கும் விநாயகனின்
பாத பூசைதனை நாளும் பாங்குடனே பக்குவமாய் செய்திடுவீர்
நாத ஒலியாலே வேத மந்திரங்கள் தேவரவீந்திரக் குருக்களவர்
ஏதம் அற்ற கோலத்தை காண்பதுதான் எப்போதோ

மாலிசந்தி விநாயகனின் மனங்குளிர வைத்திடும் ரவியய்யா
உமை இழந்து பக்தரெல்லாம் தடுமாறி நிற்கின்றார்
மாசற்ற நடராச வள்ளல் மகன் மனம் மாறிப்போனதென்ன .
நீர்குமிழி வாழ்க்கை யென்று நெடுந்தூரம் சென்று விட்டீர்
- நீரும் தானே

எதை யெதைப் பேசினாலும் முடிந்த முடிவும் அதுதானே
அது தனை உணர்ந்து நாங்கள் ஆறுதல் அடைவோம் என்றும்
கருணையின் மூர்த்தி என்றும் காருண்ய வள்ளல் ஐயா
ஏற்றிட்டோம் காப்பீர் உன்தன் தேவ சூரியக்குழந்தை தன்னை

பரிபாலன சபையினர், தொண்டர்கள், வழிபாட்டாளர்கள்.
அல்வாய் மாலைச் சந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்,
மாலுசந்தி, அல்வாய்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




யாழ்ப்பாணம் அரியாலையூர்
### அமரர் செல்லையா அருளம்பலம்
(முன்னாள் கணக்காளர் Jaffna Co - op, A.Baur & co)

நினைக்கவே கனக்கிறது நெஞ்சம்
எம்மைப் பிரிந்து ஓராண்டு ஆகிவிட்டது
என்பதை நினைக்கவே கனக்கிறது
மனையாளுக்கு ஏற்ற துணைவனாய்
பிள்ளைகள் போற்றும் அன்பு அப்பாவாய்
உறவினர் ஏற்கும் உறவாய் வாழ்ந்தாய்
மனம்போல வெள்ளை உடை அணிந்து
செல்வதை எப்படி மறக்க முடியும்
சுற்றத்தாரை அன்பு மொழி கூறி
வரவேற்பதை எப்படி மறக்க முடியும்
அரியாலை சித்தி விநாயகரை
தினமும் தொழுது வாழ்ந்ததை எப்படி மறக்க முடியும்.
எமை எல்லாம் அரவணைத்த குல விளக்கு
இறைவனடி சேர்ந்து ஓராண்டு ஆனாலும்
உங்களது ஓராண்டு நினைவு நாளில்
பிரார்த்தனை செய்து கொள்கின்றோம்
உங்களது ஆசி என்றும் எமக்குண்டு என எண்ணி
நம்பிக்கையுடன் வாழ்கின்றோம்

இல. 588/2, நாவலர் வீதி,
அரியாலை,யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

(83169)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## லிஜா சுந்தரலிங்கம்
**பெறுபேறு: 3ஏ (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)**

விஞ்ஞானப் பாடத்தின்மீது எனக்கு இருந்த ஈடுபாடு காரணமாகவும் என் பெற்றோரின் விருப்பத்திற்கமையவும் விஞ்ஞானத் துறையைத் தெரிவு செய்தேன். எனக்குக் கற்பித்த பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் ஆகியோர் நான் 3 ஏ பெறுவதற்கு உறுதுணையாக இருந்தனர்.

கற்றலில் நான் மனனம் செய்ததைவிட கிரகித்து வைத்துக் கொண்டதே அதிகம். அதிகளவு பயிற்சி வினாத்தாள்களை செய்து பார்த்ததால் எனக்குப் பரீட்சையை இலகுவாக எதிர்கொள்ள முடிந்தது. பாடசாலை ஆய்வுகூடமும் எனது அறிவை வளர்ப்பதற்கு உதவியது.

மருத்துவத்துறையில் ஓர் உயர் நிலையை அடைய வேண்டும் என்பதே எனது விருப்பம். அதன் மூலம் எனது சமூகத்திற்குச் சேவை செய்ய ஆசைப்படுகிறேன்.

நான் இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு உதவிய, எனக்குக் கற்பித்த அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முறையான கற்றலும் இறை நம்பிக்கையும் இருந்தால் அனைத்து மாணவர்களும் வாழ்வில் உயர் நிலையை எய்தலாம்.



## திவ்வியா தேவதாஸ்
**பெறுபேறு: 3ஏ (மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை)**

நான் கலைப்பிரிவில் தமிழ், அளவையியல், அரசறிவியல் ஆகிய பாடங்களைக் கற்றேன். எனது தந்தை ஒரு விவசாயி. ஆயினும் தனது பிள்ளைகள் படித்து, உயர் தொழில் புரிய வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் உடையவர். எனது தாய், தந்தையரின் கனவுகளை நிறைவேற்ற வேண்டும் என்கின்ற அவாவும் எனது பாடசாலைக்குப் பெருமையைத் தேடிக் கொடுக்க வேண்டும் என்கின்ற ஆர்வமுமே எனது பெறுபேற்றுக்குப் பின்புலமாகும். என்னுயிர் நண்பியின் அக்கறையும் முக்கிய காரணியாகும். எனக்குக் கற்பித்த ஆசான்கள் கூறிய அனைத்து அறிவுரைகளையும் பின்பற்றியமையே எனது வெற்றியின் இரகசியம். எனது இவ் வெற்றியில் முதலில் எனது விடாமுயற்சியும் பெற்றோர், கல்லூரி அதிபர், ஆசான்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள், உறவினர்கள் அனைவரது அறிவுரைகளும் பங்களிப்புச் செய்தன.



## ஆரணீ செல்வலிங்கம்
**பெறுபேறு: 3ஏ (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)**

நான் முதலாம் வகுப்பிலிருந்து 11 ஆம் வகுப்பு வரை அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் கல்வி பயின்றேன். அப்பாடசாலையின் அதிபரும், ஆசிரியரும் எனது கற்றல் செயற்பாட்டுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தார்கள். பின் அவர்களின் வழிகாட்டலின் பேரில் உயர்தரத்தில் கல்வி கற்பதற்காக வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் சேர்ந்தேன். அங்கு கலைப் பிரிவைத் தேர்வு செய்து தமிழையும், அளவையியலையும், இந்துநாகரிகத்தையும் பாடமாகத் தெரிவு செய்தேன். அதற்கு சிவகுரு ஆசிரியையும், நவமணி ஆசிரியையும் பெரும் வழிகாட்டியாக இருந்ததுடன் அதிபரும் ஏனைய பாட ஆசிரியர்களும் ஊக்கமளித்தனர்.

எனது தந்தை கூலி வேலை செய்பவராக இருந்தபோதிலும் எனக்கும், உயர்தரத்தில் கல்வி கற்கும் எனது தங்கைக்கும் வேண்டிய உதவியையும், ஆதரவையும் தந்தார். அம்மாவும் சகோதரிகளும் எனது கல்வி சார்ந்த முயற்சிக்குப் பேராதரவு வழங்கினார்கள். நான் சோர்வடைந்து போகின்ற நேரங்களில் எல்லாம் எனது அருமை அக்காவான நிலானி உற்சாகம் தந்து உதவினார். நான் கற்றதை மீட்பதற்குத் தனியார் நிறுவன ஆசிரியர்களும் எனக்கு வழிகாட்டியாக இருந்தனர். எனது பாடம் சம்பந்தமான புத்தகங்களை எல்லாம் எமது கிராமத்திலுள்ள நூலகத்தின் மூலமாகப் பெற்றுக் கொண்டேன். அதற்கு நூலகப் பொறுப்பாளர் உதவியாக இருந்தார்.

மேலும் எனது நண்பிகளும் எனது கிராமத்திலுள்ள பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களும், உறவினர்களும் எனது கல்வி சார்ந்த விடயங்களில் வழிகாட்டிகளாகத் திகழ்ந்தனர். பாடசாலையின் அதிபர், ஆசிரியருக்கும், பெற்றோருக்கும், சகோதரிகளுக்கும், நண்பிகளுக்கும், தனியார் நிறுவன ஆசிரியர்களுக்கும் நான் என்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். வருங்காலத்தில் ஓர் ஆசிரியராக வந்து சமூகத்தில் ஓர் முன்னோடியாகத் திகழ்வேன்.



## பிருந்தா சிவசுப்பிரமணியம்
**பெறுபேறு: 2ஏபி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)**

நான் ஆரம்பக் கல்வியை நாகர்கோயில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்றேன். பின்பு யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வந்து தரம் - 6 தொடக்கம் தரம் 11 வரை புற்றளை மகா வித்தியாலயத்தில் எனது கல்வியைத் தொடர்ந்தேன். சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்பதற்கான தகுதியைப் பெற்றுக் கலைத்துறையைத் தெரிவு செய்தேன்.

நான் உயர்தரக் கல்வியைக் கற்பதற்காக வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் இணைந்தேன். கலைப்பரிவில் தமிழ், புவியியல், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன். நான் இரவு நேரங்களைவிடப் பகல் வேளைகளிலும், அதிகாலையிலுமே படித்தேன். பரீட்சை நெருங்கிய காலங்களில் பாடசாலையிலும், தனியார் கல்வி நிலையத்திலும் அடிக்கடி பல பரீட்சைகள் நடத்தி நாங்கள் ஊக்கத்துடன் கல்வி கற்பதற்குத் துணை செய்தனர்.இவற்றுடன் எனது முயற்சியும் தெய்வ கருணையும் தான் இப் பெறுபேற்றைப் பெற வழிவகுத்தது.

நான் இப்பெறுபேற்றை எடுப்பதற்கு துணைபுரிந்த பெற்றோர், பாடசாலை அதிபர், பாட ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், சக மாணவிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் நான் இப்பெறுபேற்றைப் பெற அருள்புரிந்த இறைவனுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## டனுஜா இராசேந்திரம்
**பெறுபேறு: 2ஏபி (சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தி)**

ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்கல்விவரை சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று சாதாரணதரப் பரீட்சையிலும் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொண்டேன். உயர் கல்வியில் கலைப் பிரிவில் தமிழ், புவியியல், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களைக் கற்று நல்ல பெறுபேற்றினை அடைந்துள்ளேன்.

எனக்கு ஆரம்பத்தில் கல்வியில் ஆர்வம் குறைவு. தரம் 9 இல் இருந்து பிறரைப் போல் நானும் பல்கலைக்கழகம் போக வேண்டும் என இலக்கு வைத்துப் படித்தேன். நம்பிக்கையும் விடாமுயற்சியும் என்னை வெற்றி பெற வைத்துள்ளன.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் தந்த வழிகாட்டலும் தனியார் நிறுவனமான ஞானோதயா தந்த ஊக்கமும் என்னை மேலும் முன்னேற வைத்துள்ளது. இவர்கள் அனைவருக்கும் எனது நன்றியை மனதாரச் சொல்லிக் கொள்கிறேன்.

என்னுடைய பெற்றோர் எனக்குத் தந்த சுதந்திரம், குடும்ப சூழ்நிலை, என்னுடை சிறந்த பெறுபேற்றிக்குக் காரணம். அதாவது பெற்றோர் என்னைப் படி என்று வற்புறுத்துவதில்லை. என்னுடைய ரசனைக்கு ஏற்ப விட்டுக் கொடுத்து ஒத்தாசையாக இருந்தார்கள்.

என் உயர்வுக்கு வழிவகுத்த நண்பிகளான வினோஜா, ஜெந்தினி, விசாலாட்சி, அப்பா, அம்மா, அண்ணா, தம்பிக்கும் எனது நன்றியை மனமாரச் சொல்லிக் கொள்கிறேன்.



## பிருந்தா பாலசுப்பிரமணியம்
**பெறுபேறு: 3ஏ (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)**

எனது ஆரம்பக்கல்வியை சென்.பெனடிக்ற் றோ.க.த.க.பாடசாலையில் பயின்றேன். புவியியல்துறையில் அதீத ஆர்வம் கொண்டமையாலும் சமூகத்துக்குச் சேவையாற்றும் நோக்கம் கொண்டமையாலும் மேலும் பல பட்டங்கள் பெற்று உயர் பதவி பெறுவதற்காகவும் கலைத்துறையைத் தெரிவு செய்தேன்.

எனது கல்லூரியின் அதிபர், ஆசிரியர் வழிகாட்டலும், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களினதும் குறிப்பாக சந்திரலிங்கம் [தமிழ்], கந்தசாமி, குமரன் [புவியியல்] ஆசிரியர்களினதும் சிறந்த வழிகாட்டலில் இப்பெறுபேற்றை எய்த முடிந்தது. இரவில் கல்விகற்கும் நேரத்தில் ஏற்படும் மின்சாரத் தடையால் கல்வி கற்கும் நேரத்தில் ஏற்படும் இழப்பைப் பகல் நேரத்தில் கிடைக்கும் ஓய்வு நேரத்தின்மூலம் பூர்த்தி செய்தேன்.

பாடசாலையில் கற்பிக்கும் பாடங்களை அன்று வீட்டில் மீட்டல் செய்வேன். யாழ்.பொது நூலகத்தில் இருந்து குறிப்புக்கள் சேகரித்தும் கற்றேன். வேறு பாடசாலை மாணவிகளுடன் பாடவிடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதுமுண்டு.

பரீட்சை வினாக்களைப் பார்த்தவுடன் ஆயத்தம் செய்த பாடப்பரப்புக்களுக்குள் வினாக்கள் வந்ததால் மகிழ்ச்சியடைந்து இறைவனுக்கு நன்றி கூறி விரைவாகவும் சிறந்த முறையிலும் விடை கொடுத்ததனால் இப்பெறுபேறு கிடைக்கும் என நம்பினேன். அரசாங்கத்தில் உயர் பதவி பெற்று மக்களுக்குச் சிறந்த சேவையாற்ற விரும்புகின்றேன்.



## கலையரசி சிவபாதசுந்தரம்பிள்ளை
**பெறுபேறு: 2ஏபி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)**

நான் தரம் 1 முதல் தரம் 5 வரை புலோலி மெ.மி.த.க.பாடசாலையில் கல்வி கற்றுப் பின்னர் தரம் 6 முதல் 13 வரை வட இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்றேன். சாதாரணதரப் பரீட்சையில் சித்தி எய்து உயர்தரத்தில் கலைப்பிரிவைத் தேர்ந்தெடுத்தேன். தமிழ், புவியியல், சங்கீதம் ஆகிய பாடங்களை நம்பிக்கையுடனும், எனது பெற்றோரின் நீண்டகாலக் கனவை நிறைவேற்றும் நோக்குடனும் தெரிவு செய்தேன்.

எனது கற்றல் செயற்பாட்டிற்கு இப்பாடசாலையின் ஆசிரியரும், அதிபரும் காரணமாக அமைந்ததோடு எனது பெற்றோரின் ஊக்குவிப்பும், சகோதரர்களின் ஊக்குவிப்பும் நான் இப் பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்வதற்கு உறுதுணையாக அமைந்தன. அத்துடன் எல்லாவற்றுக்கும் மேலாகக் கடவுள் மேல் நான் வைத்திருந்த இறை நம்பிக்கையும் நான் நல்ல பெறுபேறுகளைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தன.

இப் பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்வதற்கு உறுதுணையாக இருந்த தமிழ் ஆசிரியருக்கும், புவியியல் ஆசிரியருக்கும், சங்கீத ஆசிரியருக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் தனியார் நிறுவனத்தில் கற்பித்த ஆசிரியர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

இது மட்டுமல்லாது எனது உறவினர்களின் ஊக்குவிப்பும் இப் பெறுபேற்றிற்குக் காரணமாக அமைந்தது.

நான் பல்கலைக்கழகம் சென்று ஆசிரியராகச் சேவை ஆற்ற வேண்டும் என்பதே எனது விருப்பம் ஆகும்.



## சர்மிளா ஜெயக்குமார்
**பெறுபேறு: 2ஏபி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)**

கல்விக்கு இடப்படும் அடித்தளம் சிறப்புற அமைந்தால் பரீட்சையில் சித்தி பெறுவது சுலபம். ஆரம்பக் கல்வி தொடக்கம் இக் கல்லூரியில் வழங்கப்பட்ட கல்விதான் என்னை ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, சாதாரணதரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் சித்தி பெறவைத்தது.

கல்லூரி அதிபர்கள், உப அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

பல்கலைக் கல்வியைப் பூர்த்தி செய்ததும் இக் கல்லூரியிலேயே ஆசிரியராகக் கடமையாற்ற விரும்புகிறேன்.

ஆரம்பக் கல்வி தொடக்கம் புத்தகக் கல்வி மட்டுமே குறிக்கோளாக இல்லாமல் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் என்னால் ஈடுபடமுடிந்தது. அந்த வகையில் வலைப்பந்து, பூப்பந்து, உடற்பயிற்சிப் போட்டி, தமிழ்த் தினம், ஆங்கிலத்தினம் முதலான போட்டிகளிலும் பங்குபற்றி சாதனைகள் புரியவும் இக் கல்லூரி எனக்கு வாய்ப்பளித்தது. இவ்வாறான இணைப்பாடவிதான செயற்பாடுகள் நான் சலிப்பின்றி உற்சாகத்துடன் கற்றிலில் ஈடுபட வழிவகுக்கிறது.

**சந்திப்பும், படங்களும்:**
**ஔண்யன், தென்னவன், கணேசமூர்த்தி, சுழகலிங்கம்.**
**29**



## பா.ஜனனி
**பெறுபேறு: 2ஏபி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)**

அதிகாலையில் எழுந்து படிப்பதும் பாடங்களை ஞாபகத்தில் வைத்திருக்க உதவும். எனது தாத்தா கூறிய அறிவுரை என்னளவில் உண்மை. இதனாலேயே சிறந்த பெறுபேற்றை என்னால் பெறமுடிந்தது.

கல்லூரிப் பரீட்சைக் காலங்களில் அதிகாலை வேளைகளில் படிக்கும் பழக்கத்தை அதிகப்படுத்திக் கொண்டேன். அத்துடன் பாட ஆசிரியர்கள் சொற்படி குறிப்பெடுத்தல் மற்றும் படித்த பாடங்களை அன்றே படித்தல் ஆகியவற்றைப் பின்பற்றியதாலும் நான் எதிர் பார்த்த இலக்கை அடைய முடிந்தது.

விடத்தற்பளை என்ற கிராமத்தில் பிறந்த நான் ஆரம்பக் கல்வியை விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் கற்று, இடம்பெயர்வு காரணமாகச் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இணைந்து இடைநிலை, உயர்நிலைக் கல்வியினைக் கற்றேன்.

என்னைப் பரீட்சையில் சித்திபெறப் பல்வேறு வழிகளிலும் ஊக்குவித்த எனது பெற்றோர், சகோதரி, கல்லூரி அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் இவ்வேளையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.



## வினோதினி பொன்னுத்துரை
**பெறுபேறு: 2ஏபி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)**

உயர் கல்வியைத் தொடரும் மாணவர்கள் பாடத் தேர்வினைச் சரியான முறையில் தேர்வு செய்வதன்மூலம் பல்கலைக்கழக அனுமதியைப் பெறமுடியும். சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்காகக் கற்பிக்கும் ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டலுடனும், சக மாணவிகளுடன் போட்டியுடனும் எனது கற்றல் செயற்பாட்டை மேற்கொண்டதால் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் ஆகியோர் எனக்கு அளித்த ஊக்கம் சிறந்த பெறுபேறு கிடைக்க உந்துசக்தியாக அமைந்தது.

எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பல்கலைக்கழகத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று விரிவுரையாளராக வரவேண்டுமென விரும்புகிறேன்.

கல்வியில் பின்தங்கிய பளை, வேம்பெடுகேணி சீ.சீ.த.க.பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று இடப்பெயர்வு காரணமாக இக் கல்லூரியில் இணைந்து கொண்டேன்.

பரீட்சையில் 3 ஏ பெறுபேறு எனக்குக் கிடைக்குமென எதிர்பார்த்தபோதிலும் 2ஏபி கிடைத்துப் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்வடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம் 13 * 07 * 1950



அஸ்தமனம் 13 * 03 * 2008

**அமரர் வைரவிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா**
(முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம் - கிளிநொச்சி)

திதி: பூர்வபக்க ஸப்தமி

பூஜித்த தெய்வம் போனவழி தெரியவில்லை
பொங்கிவரும் கண்ணீருக்கு அணையுமில்லை
தேற்றுவதற்கு இவ்வுலகில் யாருமில்லை
தேம்புகிறோம் தெய்வமே உமை நினைந்து

(82986)

'சீமா',
அல்வாய் வடமேற்கு,
திக்கம்.

கண்ணீர்த்துளிகளுடன்:
**குடும்பத்தினர்.**

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும், வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம் 03 * 12 * 1963



மறைவு 18 * 01 * 2009

**அமரர் பொன்னுத்துரை கணேஸ்வரன்**

**ஒன்றரைத் திங்கள் ஓடி மறைந்ததுவோ!**
**அன்பே உன்னை நினைக்காத நொடியுண்டோ!**
**ஏங்க வைத்ததேன் செல்வமே?**
**விடை காணாது தவிக்கின்றோம்!**
**விடியலின்றித் துடிக்கின்றோம்**

அன்னாரின் இறுதிக் கிரியையின் போது சகல வழிகளிலும் உதவி நல்கிய அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (03.03.2009) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாகையடி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (83160)

**குடும்பத்தினர்.**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 22 01 1925



இறப்பு 15 02 2005

திதி - 03.03.2009 பூர்வபட்ச சப்தமி.

**அமரர் தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை**
(ரீவி மாஸ்ரர்–நீர்வேலி)
**முன்னாள் பாடசாலை அதிபரும்–பிரசித்த நொத்தாரிசும்**

திக்கற்ற நெஞ்சங்களுக்குத் தெம்பு கொடுத்தவரும்
அதிதிகளுக்கு இறுமாப்போடு பேசாப்பறை சாற்றியவரும்
நன்னடக்கம், பணிவு, நேர்மையைத் தலையாய்
இவை கொண்ட இலட்சணங்களை அணிகலன்களாய்
இசையுற்று வாழ்ந்த இனியவராய்
ஒளிபடைத்த நல்லாசிரியக் கண்மணியாய்
சிறந்து நிறைவேற்று அதிபர் பெருமகனாய்
ஏழை எளியவரின் பயன் கருதாச் சேவகராய்
உற்றார் உறவினர்க்கு உற்ற துணையாளராய்
அப்பணிப்பு நிறைந்த பொதுச் சேவையாளராய்
எட்டுத் தசாப்தங்கள் ஒளிவிட்டுப் பிரகாசித்த செம்மல்
இவ்வுலகை நீத்து நான்கு ஆண்டுகள் உருண்டோடி விட்டனவே!

**அவரது பசுமையான நினைவால் நிறைகிறது எம் நெஞ்சங்கள்.**
**அவரது ஆத்மா சாந்தியடைய**
**[illegible]**

என்றும் தந்தையின் இலட்சியங்களில் பற்றுறுதியுடன் வாழும்
அன்பு மனைவி - பரஞ்சோதியும் [illegible]. பிள்ளைகளும்

## லலித் கொத்தலாவலவை விளக்க மறியலில் வைக்க உத்தரவு

கொழும்பு,மார்ச் 3

'கோல்டன் கீ' நிதி மோசடி தொடர்பில் செலிங்கோ நிறுவன உரிமையாளர் லலித் கொத்தலாவலவை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை நீதிமன்றம் கடந்த சனிக்கிழமை உத்திரவிட்டுள்ளது.

லலித் கொத்தலாவலவின் மனைவி சிசிலி கொத்தலாவலவையும் கைது செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மோசடி செய்யப்பட்டதாக கூறப்படும் 'கோல்டன் கீ' வாடிக்கையாளர்களின் 2 ஆயிரத்து 600 கோடி ரூபாய் நிதியை எதிர்வரும் 10 நாள்களுக்குள் செலுத்துமாறும் இறுதி அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

'கோல்டன் கீ' கடன் நிறுவன பணிப்பாளர் மேற்கொண்டதாகக் கூறப்படும் மோசடிக் குற்றச்சாட்டு, அதன் உரிமையாளர் என்ற அடிப்படையில் லலித் கொத்தலாவலயின் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

(அ-சி)

## இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,மார்ச் 3

சட்ட விரோத கசிப்பு வைத்திருந்த பெண் உட்பட இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதி,நுணாவில் மேற்கு ஆகிய இடங்களில் சாவகச்சேரிப் பொலிஸார் நடத்திய திடீர்ப் பரிசோதனையின் போது கைதுசெய்யப்பட்ட இருவரையும் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் ஆயர் செய்தனர்.

வழக்குகளை விசாரணை செய்த நீதிவான் தலா 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (202-20)

## நீர்வேலிப் பகுதியில் கோழிகள் திருட்டு

யாழ்ப்பாணம்,மார்ச் 3

நீர்வேலிப் பகுதியில் திருடர்கள் கோழிகளுக்கு மயக்க மருந்தை விசிறி பின்னர் அவற்றைத் திருடி வருகின்றனர்.

கடந்த சனிக் கிழமை நீர்வேலி தெற்கு, பூதர்மடம் வீதியில் இவ்வாறு கோழிகள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீதியில் ஆள்கள் நடமாட்டம் குறைந்த நண்பகல் வேளையில் திருடர்கள் வீதியோரத்தில் நின்ற கோழிகளை இவ்வாறு திருடியுள்ளனர். (203-224)

## விமானம் மூலம் பொருள்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்3

யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நேற்றும் விமானம் மூலம் பொருள்கள் எடுத்து வரப்பட்டதாகச் சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

பிறிமா கோழி இறைச்சி, மற்றும் குளிர்பானங்கள் போன்றவையே வந்து சேர்ந்துள்ளன.

இப்பொருள்கள் சங்கத்தின் கூட்டுறவு நகர் விற்பனை நிலையங்கள் ஊடாக நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

(203-224)

**படிவம்**

மொறட்டுவப் பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப (BIT) பாடநெறி அநுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

Bharathy Pathippakam,
430, K.K.S. Road, Jaffna.

## கச்சாய் நூலகத்தில் சிறுவர் பகுதி

யாழ்ப்பாணம்,மார்ச் 3

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தில் சிறுவர் பகுதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

நூலகத்தில் போதிய இடவசதி இல்லாமையால் நூலகத்தின் முன் பக்கத்தில் பனை ஓலையால் வேயப்பட்ட இரு குடில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த இரு குடில்களிலுமே சிறுவர்களுக்கான சிறுவர் பகுதி அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த சிறுவர் பகுதி 'இளந்தளிர்' இல்லம் எனவும் பெயரிடப்பட்டுள்ளதாக நூலகர் திருமதி பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இக்கட்டடம் விஸ்தரிப்புச் செய்யப்படும் காலங்களில் சிறுவர்களின் பிரிவுகள் புதிய கட்டங்களாய் அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (202-131)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 14 * 07 * 1917



மறைவு 01 * 02 * 2009

**திருமதி செல்லம்மா சுப்பிரமணியம்**

கடந்த 01.02.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் அவர் நோயுற்று இருந்த வேளைகளில் அவருக்குச் சிகிச்சை அளித்த லயன் Dr. வை.தியாகராஜா அவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பி ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்று செவ்வாய்க்கிழமை (03.03.2009) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இராஜவீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 21 ° 04 ° 1933



மறைவு 01 ° 02 ° 2009

**திருமதி தங்கமணி பழனிச்சாமி**

*(இல.115 இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்)*

இல்லறத்தில் இணைந்து நல்லறமாக வாழ்ந்த உங்களை
காலமது எம்மை விட்டுப் பிரித்ததுவோ
அன்பும் பண்பும் பாசமும் நிறைந்த எங்கள் தெய்வமே!
மெழுகாக உருகி எம் வாழ்வில் விளக்கேற்றி
சீருடன் எங்களை வாழ வைத்த அன்புத் தெய்வமே!
ஆறுதல் கூற ஆயிரம் பேர் வந்தாலும் உங்கள் முன் ஈடாகாது
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு மட்டும்
எம் இதயங்களில் எந்நேரமும் நிலைத்து நிற்கின்றது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்

தகவல்:
ப.தயாபரன் மகன் (London), சி.பத்மசுந்தரி மகள் (France),
ம.பிரேமலதா மகள் (London), ப.தயானந்தன் மகன் (France).

(83110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைத்தங்கல் முகாம்களில் சர்வதேச தரங்களை கடைப்பிடிக்கும்படி ஐ.நா.அதிகாரி வற்புறுத்தினார்

## பாதுகாப்புச் சபையில் ஜோன் ஹோம்ஸ் சமர்ப்பித்த அறிக்கை

நியுயோர்க்,மார்ச்.03

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து இடைத்தங்கல் நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் சர்வதேச தரங்களுக்கு அமைவாகவும் மனிதாபிமான கொள்கைகளுக்கு ஏற்றமுறையிலும் நடத்தப்பட வேண்டும் என்று அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து, நிலைகளை ஆராய்ந்து சென்ற ஐ.நா. மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் வற்புறுத் தியுள்ளார்.

பாதுகாப்புச் சபையில் உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் சமர்ப்பித்த அறிக்கையின் ஒருபகுதி நேற்று முன்தினம் உதயனில் வெளியாகியிருந்தது, மிகுதிப் பகுதி இங்கு தரப்படுகின்றது.

எனது பயணத்தின் நோக்கம் என்னவென்றால் போரில் சிக்கியுள்ள மக்களின் மனிதாபிமான நிலைமை பற்றிய முதல் நிலைத் தகவலைப் பெற்றுக் கொள்வது, தப்பி ஓடியவர்களை பராமரிப்பதற்காக எடுக்கப்படும் ஒழுங்குகளைக் கவனிப்பது, இடம் பெயர்ந்தவர்கள்தொடர்பான சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் சர்வதேச தரங்களில் அவர்களைப் பராமரிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு சகல தரப்பினையும் வற்புறுத்துவது ஆகியவையே.


இலங்கை ஜனாதிபதி உட்பட இலங்கையின் அதி உயர் அதிகாரிகளுடன் நான் விரிவாகக் கலந்துரையாடினேன். எதிர்க் கட்சியினர்,முக்கிய தமிழ் கட்சியின் தலைவர் ஒருவர் உட்பட தமிழ் தரப்பினரையும் சந்தித்தேன். அமெரிக்கா, நோர்வே, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகிய இணைத் தலைமை நாடுகள், ஐ.நா. முகவர் அமைப்புக்கள் சிவில் சமூகத் தலைவர்களையும் சந்தித்தேன்.

எனது பயணத்தின் முக்கிய அம்சம் வவுனியாவுக்குச் சென்றமையே. புலிகளின் கட்டுப்பாட்டில் இப்பகுதி முன்னர் இருந்துள்ளது. இங்கு சுமார் 36 ஆயிரம் இடம் பெயர்ந்த மக்கள் இருக்கிறார்கள். கடந்த மூன்று வாரங்களாக இங்கு இவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். பாடசாலைகளிலும், தற்காலிகக் கூடாரங்களிலும் மக்கள் இருக்கும் இடைத்தங்கல் முகாம்களுக்கும் நான் சென்றேன். இங்கு இடம் பெயர்ந்தவர்கள் அரசாங்கத்தாலும் உள்ளூர் அதிகாரிகளாலும் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். ஐ.நா. முகவர் அமைப்புக்கள், ஐ.சி.ஆர்.சி. மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**ஆஸ்பத்திரிக்கு விஜயம்**

அங்குள்ள உள்ளூர் ஆஸ்பத்திரி ஒன்றுக்கும் சென்று பார்த்தேன். வன்னியில் இருந்து கடல் மார்க்கமாக கொண்டு வரப்பட்ட காயமுற்ற இடம் பெயர்ந்த மக்கள் இங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறார்கள்.

இடம் பெயர்ந்தவர்கள் வழமையாக நகர்த்தப்படும் ஒரு பெரிய இடமான மெனிக்பாம் என்ற இடத்திற்கும் நான் சென்றேன். இந்த முகாம் பெரும் சர்ச்சைக்குட்பட்டதாகும். இங்குள்ள அகதிகள் நெடுங்காலம் தங்கவைக்கப்படப் போகி



றார்கள் என்ற ஓர் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது. இடைத் தங்கல் முகாம்களிலும் அடிப்படைத் தேவை களான உணவு, தங்குமிடம், நல்லதண்ணீர், கழிப்பிடம், சுகாதாரம் போன்ற தேவைகள் செய்து கொடுக்கப்படுவதாகத் தெரிவிக்கின்றனர். இருந்த போதும் சில இடைத் தங்கல் முகாம்களில் மக்கள் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது. ஐ.நா. மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இப்பொழுது அங்கு அதிகமாகப் போகமுடிகிறது. இது ஒரு முக்கியமான விடயம். ஆனால் வேறு வகையில் உள்ளே செல்வதும் வெளியே வருவதும் இப் பொழுது ஏற்றுக் கொள்ள முடியாத அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நான் சந்தித்த அனைவரிடமும் முக்கியமான மனிதாபிமான பிரச்சினைகளை வலியுறுத்திக் கூறினேன். வன்னியில் சிக்கியுள்ள ஆயிரக்கணக்கான மக்களின் நிலை பற்றி எனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டேன். பாதுகாப்பினை உறுதி செய்து சர்வதேசச் சட்டங்களை கடைப்பிடிக்கும்படி இரு தரப்பினரையும் கேட்டுக்கொண்டேன். அங்குள்ள பொது மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும்படி கேட்டுக்கொண்டேன். மேற்கொண்டும் பொதுமக்கள் சேத முறாதவாறு பார்த்துக் கொள்ளும்படி இரு தரப்பினரையும் கேட்டுக் கொண்டேன். இதில் ஐ.நா. பணியாளர்கள் அவர்களில் தங்கியிருப்பவர்கள் அரச சார்பற்ற நிறுவ னங்களின் உறுப்பினர்கள், அவர்களில் தங்கியிருப்பவர்கள் ஆகியோரின் பாதுகாப்பும் அடங்கும். இவர்களும் அங்குள்ள பொதுமக்களுடன் சேர்ந்து சிக்குண்டுள்ளவர்கள்.

**புலிகளுக்கு வேண்டுகோள்**

நான் குறிப்பாக பொதுமக்களை சுதந்திரமாக வெளியேற அனுமதிக்கும்படி

## பொதுமக்களுக்கு மேற்கொண்டும் சேதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்க!

விடுதலைப் புலிகளைக் கேட்டுக் கொண்டேன். தப்பிச் செல்ல முயன்ற போது சுடப்பட்டதாக செய்தி வந்த நிலையில் இந்த கோரிக்கையை விடுத் துள்ளேன். கட்டாயப்படுத்தி ஆள் சேர்க்க வேண்டாம் குறிப்பாக சிறுவர்களை சேர்க்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டேன்.

பொதுமக்களைத் தவிர்ப்பதற்காக தங்கள்கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதை பெரும்பாலும் நிறுத்தி விட்டதாக அரசாங்க தரப்பில் என்னிடம் பல தடவைகளிலும் உறுதியாகக் கூறப்பட்டது. இது எந்த அளவில் உண்மையானது என்பது தெளிவில்லாமலேயே இருக்கிறது.

வன்னிப்பகுதிக்கு மனிதாபிமான நடவடிக்கைகள் தடையின்றி இடம் பெறுவதற்கு அனுமதிக்கும்படி இரு தரப்பினரையும் கேட்டுக் கொண்டேன். வன்னிப் பகுதிக்கு நிவாரணப் பொருள்கள் போதுமான அளவில் சென்றடைய கேட்டுக் கொண்டேன்.

ஐ.சி.ஆர்.சி மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியவை கடல் மார்க்கமாக உணவு வகைகளை எடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்க அரசு கடைசியாக முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது .

**சர்வதேச கொள்கையை பின்பற்றக் கோரிக்கை**

இடம் பெயர்ந்த மக்களை சர்வதேச தரங்களுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்றால் போல் நடத்த வேண்டும் என்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்திடம் வற்புறுத்தினேன். அகதிகளை வரவேற்று பராமரிப்பதற்கு வவுனியாவில் வசதிகளை விரிவுபடுத்துமாறு கேட்டுக்கொண்டேன். தற்காலிக முகாம்களுக்கு அதிக இடம் ஒதுக்கும்படியும் கேட்டுக்கொண்டேன்.

எனது விஜயத்தின் பின்னர் மேலதிகமாக 250 ஏக்கர் நிலம் தற்காலிகமாக வசிப்பிடங்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிகின்றேன். மேலும் 400 ஏக்கர் ஒதுக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது மேலும் இடம் பெயர்ந்த மக்கள் மத்தியில் இராணுவத்தினர் காணப்படுவதை விரைவாக முடிவுக்கு கொண்டு வருமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தினேன். இடம் பெயர்ந்த வர்கள் அதிக சுதந்திரமாக நடமாட அனுமதிக்க வேண்டும் என்பதை சுட்டிக் காட்டினேன். 60 வயதிற்கு மேற்பட்ட இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களை விட்டு வெளியேறி வசதியான இடங்களில் வசிக்க அனுமதிக்கப்பட்டிருப்பதாக அறிந்தேன்.

இடம் பெயர்ந்த மக்கள் முடிந்தளவில் விரைவாக தாம் முதலில் குடியிருந்த இடங்களுக்கு திரும்புவதற்கு வசதி செய்ய வேண்டும் என்பதை அரசிடம் வலியுறுத்தினேன். தங்கள் நோக்கமும் இதுவேதான் என்று அரசாங்கம் எல்லா சந்தர்ப்பங்களிலும் தெரிவித்தது. 2009 ஆம் ஆண்டு இறுதி வாக்கில் 80 வீதத்தினர் மீள குடியமர்த்தப்பட்டு விடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் இன ரீதியான ஒரு கலப்படத்தை உருவாக்க முயற்சி நடப்பதான சந்தேகத்தையும், இல்லாமல் செய்வதன் அவசியத்தையும் இடம் பெயர்ந்த மக்களை வெகுகாலம் அகதி முகாம்களில் வைக்கப் போகிறார்கள் என்ற சந்தேகத்தையும் இல்லாமல் செய்வதின் அவசியத்தை நான் குறிப்பிட்டு வற்புறுத்தினேன்.

**ஜனநாயக தீர்வை எட்டுக**

இறுதியாக எனது மனிதாபிமான விஜயத்திற்கு அப்பாற்பட்டு அரசாங்கத்தை இந்த வரலாற்று முக்கியத்துவ சந்தர்ப்பத்தை பயன்படுத்தி விரைவாக செயற்படும்படியாகவும் போர் முடிந்ததன் கையோடு அரசியல் பிரச்சினைகளை கையாளும் படியும் எல்லாரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முழுதும் ஜனநாயக அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு, தீர்வு ஒன்றை நோக்கி நகரும் படியும் கேட்டுக் கொண்டேன்.

பொதுமக்கள் வெளியேறி அமைதியான முடிவொன்றை இந்த யுத்தம் தொடர்பாக ஏற்படுத்துவதற்கு அவர்களை அனுமதிக்கும்படி கேட்டு இடைத்தரகர் மூலமாக புலிகளிடம் முயற்சிகள் நடைபெறுவதாக நான் அறிகிறேன். இவை வெற்றியாக முடியும் என்று பெரிதும் நம்புகிறேன். அதேசமயம் பொது மக்கள் வெளியேறுவதற்கு வசதி யாக அரசாங்கத்தை இறுதியான போர் முனைபொன்றில் இறங்காமல் தவிர்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். (ப)

# இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க எங்களால் மட்டுமே முடியும் - பா.ஜ.க.

இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்க்க எங்களால் மட்டுமே முடியும் - என்று பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ் மாநிலத் துணைத் தலைவர் எச்.ராஜா கூறியுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் முத்துப்பேட்டையில் ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்து பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க பா.ஜ.கவால் மட்டுமே முடியும். வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் சர்வத்சிங் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தார். அவர் இலங்கையில் மூன்று நாள்கள் தங்கி, பேச்சு நடத்தி போர் நிறுத்தம் செய்தார்.

ஆனால் இப்போது உள்ள வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, இலங்கைக்கு போனவுடனேயே திரும்பி வந்துவிட்டார். போன வேகத்தில் திரும்பி வந்தவர் தமிழர்கள் பற்றி என்ன பேசியிருக்க முடியும். போர் நிறுத்தம் செய்யப்படவே இல்லை.

மூன்று லட்சம் தமிழர்கள் வன்னி காடுகளில் பசி, பட்டினியால் வாடுகிறார்கள். அவர்களைச் சந்தித்தாரா? ஏன் தமிழர்களை பார்க்காமல் திரும்பி வந்தார்.

வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில், அவரது தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அதில் போர் நிறுத்தத்திற்கு முடிவு செய்தார். அதில் காங்கிரஸ் தலைவர் சோனியாவும் கலந்து கொண்டார். கூட்டம் முடிந்து வெளியே வந்து செய்தியாளர்கள் கேள்விக்குப் பதில் அளித்த வாஜ்பாய், தமிழர்களை அழிக்க இலங்கைக்கு ஆயுதம் அனுப்ப மாட்டோம் என்று உறுதியாகச் சொன்னார்.

அதன்படி கடைசி வரை ஆயுதம் கொடுக்கவில்லை. ஆனால் இப்போதுள்ள காங்கிரஸ் அரசு 760 பொறியியலாளர்களை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது. அதில் இரண்டு பொறியியலாளர்கள் போரில் இறந்த பின்புதான் இந்த உண்மையே நமக்கு தெரியவருகிறது.

ஆகவேதான் இலங்கை பிரச்சினைத் தீர பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என்கிறோம் - என்றார். (சி)

# மின்சாரசபைத் தொழிற்சங்கம் இன்று சுகவீன லீவுப் போராட்டம்

கொழும்பு, மார்ச் 03

அரசாங்கத்தினால் இன்று நாடாளுமன்றுக்குக் கொண்டுவரப்படவுள்ள மின்சாரத் திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல போராட்டங்களை நடத்திவரும் இலங்கை மின்சாரசபைத் தொழிற்சங்கம் அவற்றுள் அடுத்த கட்டமாக இன்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தை நாடளா விய ரீதியில் நடத்தவுள்ளது.

இன்று நண்பகல் 12 மணிக்கு இத் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் உள்ள இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் ஒன்றிணைந்து கொழும்பில் உள்ள இலங்கை மின்சார சபைத் தலைமையகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்துகின்றனர்.

இதேவேளை, தலைமையகத்திற்கு முன்பாக கறுப்புக் கொடிகளைத் தொங்க விட்டும் தொழிற்சங்கம் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தக் கறுப்புக்கொடிப் போராட்டத்தைக் கைவிடுமாறு அரசால் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் நேற்று முன்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது ஒரு ஜனநாயகப் போராட்டம் என்பதால் இவ்வாறான சுற்றறிக்கைக்கெல்லாம் அஞ்சிப் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று அவர் மேலும் கூறினார்.

இருப்பினும், திட்டமிட்டபடி மின்சாரத் திருத்தச்சட்டமூலம் இன்று நாடாளுமன்றிற்குக் கொண்டு வரப்படும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

# ரவி கருணாநாயக்கவின் பாதுகாப்பு ஐம்பது சதவீதத்தால் குறைப்பு

கொழும்பு, மார்ச் 03

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பி.ரவி கருணாநாயக்கவின் பாதுகாப்பு 50 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தாம் நீதிமன்றம் செல்லப்போகிறார் என ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் உதயனுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

அரசு எதிர்க்கட்சி உறுப்பினர்களை கடுமையாகப் பழி வாங்கி வருகின்றது. அதன் ஒரு கட்டமாகவே எனது பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது.

எனது பாதுகாப்புக்காக நியமிக்கப் பட்டிருந்த [illegible] பேர் அகற்றப்பட்டுள்ளனர். மேல்மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன் மூலம் அரசு எமக்கு அதிக தொல்லைகளைத் கொடுக்க முற்படுகின்றது. இத்தேர்தலில் நாம் முழுமையாக இறங்கி வேலை செய்வதைத் தடுப்பதே அரசின் ஒரே திட்டம்.

இது மிகவும் பாரதூரமான நிலைமை. எனது உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கின்ற நிலையிலேயே எனக்கான பாதுகாப்புக் குறைக்கப்பட்டிருக்கின்றது.

எனது பாதுகாப்பை மீண்டும் அதிகரித்துக் கொள்வதற்காக நான் விரைவில் நீதிமன்றம் செல்லத் திட்டமிட்டுள்ளேன் - என்றார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப் பிரச்சினைக்காக கையெழுத்து இயக்கம்

## சரத்குமார் அறிவிப்பு

ஈழத் தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்தக் கோரியும் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வலியுறுத்தியும் ஒரு கோடி மக்களின் கையெழுத்துகளைப் பெற்று ஐ.நா. சபைக்கு அனுப்ப மாபெரும் கையெழுத்து இயக்கத்தை விரைவில் தொடங்க உள்ளோம்.

- இவ்வாறு அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஈழ மண்ணில் அமைதி திரும்பும் வரை அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி இறுதி வரை போராடும் என்று அறிவித்து அதற்காக மக்கள் சக்தியைத் திரட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இலங்கைத் தமிழர்களின் துயர்துடைக்க ஐ.நா. சபை, உலக நாடுகளின் ஆதரவைப் பெற்று தமிழ் இன விரோத சிங்கள அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஒரு கோடி மக்களின் கையெழுத்துகளைப் பெற்று ஐ.நா. சபைக்கு அனுப்ப மாபெரும் கையெழுத்து இயக்கம் விரைவில் தொடங்க உள்ளோம்.

மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை, நிர்வாகிகள் ஆயிரக் கணக்கான குழுக்களாக பிரிந்து தமிழகம், மும்பை, டில்லி, புது்வை, பெங்களூர் உள்பட பல்வேறு பகுதிகளில் மக்களிடம் கையெழுத்துப் பெற இருக்கிறார்கள். ஒரு கோடி கையெழுத்துகளைப் பெறும் இந்த இயக்கத்தின் நோக்கம் கருதி அனைத்து மக்களும் கையெழுத்திட்டு பேராதரவை தெரிவிக்க வேண்டுகிறேன் - என்றுள்ளது. (சி)

# 23 முறை திருமணம் செய்து மூதாட்டி கின்னஸ் சாதனை

லண்டன், மார்ச் 03

அந்தரங்க உறவில் அதிக நாட்டம் கொண்ட 68 வயது மூதாட்டி இதுவரை 23 முறை திருமணம் செய்து கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார். அடுத்த திருமணத்துக்கும் அவர் தயாராகி வருகிறார்.

இண்டியானாவின் அலெக்சாண்டிரியாவைச் சேர்ந்தவர் லிண்டா உல்ப். தற்போது வயது 68. முதல்முறையாக தனது 16 ஆவது வயதில் திருமணம் செய்துகொண்டவர்.

அந்தரங்க உறவில் கொண்ட அதீத ஆர்வத்தால், அடுத்தடுத்து கணவர்களை மாற்றத் தொடங்கினார். இவர் இதுவரை 23 பேரை திருமணம் செய்துள்ளார். முதல் முதலாக செய்த திருமணம் தான் அதிக காலம் நீடித்தது. ஏழு ஆண்டுகள் வரை கணவருடன் குடும்பம் நடத்தியுள்ளார்.

இவரது திருமணங்களிலேயே 36 மணி நேரத்தில் முறிந்ததுதான் மிக குறைந்த கால திருமண பந்தம். பல்வேறு கணவர்கள் மூலம் இதுவரை ஏழு குழந்தைகள் பெற்றுள்ளார்.

குற்றம் செய்து சிறைக்குச் சென்று திரும்பியவர்கள், இயந்திர திருத்துனர்கள், மத போதகர், மது விடுதி பணியாளர்கள், பிளம்பர்கள், இசைக் கலைஞர்கள் ஆகியோர் என ஏராளமானோர் லிண்டாவுடன் திருமணம்



செய்து குடும்பம் நடத்தியுள்ளனர்.

இவர்களில் இரு முன்னாள் கணவர்கள், ஓரினச் சேர்க்கையாளர்களாக மாறிவிட்டனர். இவ்விருவரும் லிண்டாவை ஏமாற்றுவதற்காகவே திருமணம் செய்து பிரிந்தவர்கள்.

கணவர் இல்லாமல், தனியாகவும் இவர் வாழ்க்கை நடத்தியுள்ளார். 10 ஆண்டுகள் இவர் தனியாக தனது குழந்தைகளுடன் வசித்துள்ளார். இப்போதும் தனது 23 ஆவது கணவரை விவாகரத்துச் செய்துவிட்டு தனியாகத்தான் வசித்து வருகிறார்.

தற்போது முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள லிண்டா, புதிய வாழ்க்கைத் துணையைத்தான் தேடி வருகிறார் என தெரிவித்துள்ளார். உலகிலேயே அதிகளவு திருமணம் செய்தமைக்காக, இவரது பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.


## கண்ணீர் அஞ்சலி



பிரம்மஸ்ரீ தேவராஜக்குருக்கள் இரவீந்திரக்குருக்கள்

எமது ஆலய மணவாளக் கோல பெருவிழாவைப் பல வருடங்களாக தொடர்ந்து நிறைவேற்றி வந்ததுடன் எமது குடும்பத்துடனும் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்த எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய பிரம்ம ஸ்ரீ தேவராஜக் குருக்கள் இரவீந்திரக் குருக்கள் அவர்களது திடீர் மறைவால் நாமெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்கின்றோம். அவரது குடும்பத்தினரது துயரில் நாமும் பங்கேற்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பெருங்கலட்டி அல்வாய் கிழக்கு நில்லையம்பல பிள்ளையார் ஆலய பிரதம தர்மகர்த்தா பழனிப்பிள்ளை ஆசிரியரும், பிள்ளைகளும் சுற்றத்தவரும்.


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம் மார்ச் 3

யாழ். வண்ணை கண்ணாதிட்டி காளி அம்பாள் ஆலய பெருந்திருவிழா நேற்றுமுந்தினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு இடம்பெறவுள்ளது. மறுநாள் செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திரு விழா நடைபெற வுள்ளது. (201)

* * *

யாழ்ப்பாணம் மார்ச் 3

சாவகச்சேரி வாரிவனம் அமிர்தபாஷணி சமேத சந்திரசேகர வாரிவன நாத சிவாலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலட்சார்சனை ஆரம்பமாகி 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது. எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை மாசிமக மகா யாகம் இடம்பெறவுள்ளது. ஆன்மீக ஈடேற்றம் கருதியும், நாட்டில் சாந்தி , சமாதானம் வேண்டி நடைபெற்று வந்த இலட்சார்ச்சனை சில காலங்கள் நடைபெறாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (201-323)

* * *

யாழ்ப்பாணம் மார்ச் 3

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் மாசி மக இலட்சார்ச்சனைப் பெருவிழாவும் சங்காபிசேகமும் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளன (201-323)

## புதிய சித்திரத்தேர் வடிவமைப்பு

சங்கானை, மார்ச் 3

காளையடி, பண்டத்தரிப்பு ஞானவேலாயுதசுவாமி ஆலயத்திற்கு 21 அடி உயரமான சித்திரத்தேர் வடிவமைக்கப்படுவதோடு, அதற்கான 25 அடி கொட்டகையும் அமைக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் சித்திரை வருடப் பிறப்பன்று வெள்ளோட்டம் இடம்பெறும்.

முதன் முறையாக இவ் ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா எதிர்வரும் வைகாசி அமாவாசைத் தினத்தன்று நடைபெறவுள்ளன.

(203-29)

## வெறிச்சோடிக் காணப்படும் வாழைப்பழச் சந்தை

யாழ்ப்பாணம், மார்ச் 3

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் உள்ள வாழைக்குலை விற்பனை செய்யும் இடம் வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

கடந்த சில நாள்களாக இந்தப் பகுதிக்கு வாழைக்குலைகள் விற்பனைக்கு வந்து சேர்வது மிகவும் அருகிக் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்த சந்தைப் பகுதியில் முன்னர் வாழைக் குலை வியாபாரம் மிகவும் களை கட்டிக் காணப்படும்.

வாழைக்குலைத் தட்டுப்பாடே இதற்குக் காரணமாகவுள்ளது.

இதே சமயம் - தனியார் கடைகளில் கதலிப்பழம் கிலோ 160 ரூபா தொடக்கம் 180 ரூபாவாக விற்கப்படுகின்றது.

(203-224)


## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 18 * 11 * 1935



மறைவு 01 * 02 * 2009

திருமதி நடராசா பாக்கியம்

திதி: ஷஷ்டி (03.03.2009)

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் வாழ்ந்த
எம் குடும்பத்தின் குல விளக்கே
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 01.02.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் பிரிவுச் செய்தியறிந்து நேரில் வந்து எமது துயரில் பங்கு கொண்டோருக்கும், வேறு வழிகளில் ஆறுதல் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (03.03.2009) செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மதவடி வேன்,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

உம் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(88177)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு 14 * 04 * 1948



உதிர்வு 01 * 02 * 2009

திருமதி நாகேஸ்வரி முருகேசு (சின்னத்தம்பி)

திதி: ஷஷ்டி

அன்பின் ஒளிவிளக்காய் பாசத்தின் உருவமாய் நின்று
இன்பமாய் முகம் காட்டி எமை இன்பமாய்
வாழவைத்த எம் குலத்தின் விளக்கே
ஆறாத் துன்பத்தில் எமை ஆழ்த்தி விட்டுச் சென்றதேனோ?
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் இனிய உள்ளங்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

01.02.2009 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (03.03.2009) செவ்வாய்க்கிழமை நடைபெறும். அந்த நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வேதவன விநாயகர் ஆலய வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

(83167)

குடும்பத்தினர்
மு.முருகேசு (சின்னத்தம்பி)

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 01 * 07 * 1979



தெய்வ பாதத்தில் 03 * 03 * 1996

செல்வன் ம.பிரேமானந்

எங்கு சென்றாய் எம் தெய்வமே
எத்தனை ஆண்டுகள் சென்றதய்யா
இத்தனை காலமும் மறக்கவில்லை
உங்களை இழந்த துயர்தான் தீருமா?
மனித வாழ்வு மாயமே ஆயினும்
மரணம் சொற்ப வாழ்வில் உங்களைப் பிரித்ததே
மனிதகுல தெய்வமே!
என்றும் எம் மாணிக்கமே மறவோம் உங்களை
உங்கள் பாதத்தில் எம் கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


இல.26/2, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
உள்ளங்கள்.

(87176)

## நீங்காத நினைவலைகள்

மூன்றாம் ஆண்டு



அமரர் சின்னையா சின்னத்தம்பி

இருபத்தி நான்காம் ஆண்டு



அமரர் சின்னத்தம்பி ரவிச்சந்திரன்

05.01.1932 மண்ணுலக முத்தெனவே 01.03.1969
06.03.2006 விண்ணுலக முத்தெனவே 21.03.1985

ஸப்தமி - திதி - சதுர்த்தசி

ஆண்டுகள் பல உருண்டோடினாலும்
ஆறாது எம் கவலைகள், மாறாது எம் சோகங்கள்
ஓடியே சென்றதெங்கே ஒளிமுகம் மனையிலிங்கே
தேடுகின்றோம் அனுதினமும் ஆறவில்லை எம் மனங்கள்
அனலாகத் துடிக்கின்றோம் உங்கள் அன்புமுகம் - காண்பதற்கே
மோட்சவழி நீங்கள் சென்று நயம் பெறுவீர்கள் - எந்நாளும்
ஆண்டுகள் பல அகன்றாலும்
அகலாத நினைவோடு உங்கள்
பிரிவால் துயருறும்:

உடுவில்மேற்கு,
சுன்னாகம்.

(83178)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலய மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இந்தப் போட்டியின்போது விருந்தினர்கள் 'பாண்ட்' வாத்திய அணிவகுப்புடன் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை விருந்தினர்கள் ஏற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலை அதிகாரி டாக்டர் ம.யோகீஸ்வரதேவன் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்:-சுந்தா)

# தெல்லிப்பழைப் பிரதேச உதைபந்தாட்டம்; குளமங்கால் ஆபிரகாம் வி.க. சம்பியனானது

வலி.வடக்கு,மார்ச்3

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மல்லாகம் குளமங்கால் ஆபிரகாம் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மல்லாகம் ஆபிரகாம் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சம வலிமையுடன் மோதிக் கொண்டன. முதல் பாதி ஆட்டம் நிறைவுபெறும் போது ஆபிரகாம் விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் காணப்பட்டது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஆபிரகாம் விளையாட்டுக் கழகம் மைதானத்தில் ஆதிக்கம் செலுத்தியதுடன் எதிரணியினரின் கோல் கம்பத்தையும் அடிக்கடி ஆக்கிரமித்தது.

பல தடவைகள் கோல் கம்பத்தை நோக்கிப் பந்தை நகர்த்திய ஆபிரகாம் விளையாட்டுக் கழக வீரர்கள் வாய்ப்புக்களைத் தவறவிட்டு, ரசிகர்களின் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகினார்கள்.

ஆட்ட இறுதியில் ஆபிரகாம் விளையாட்டுக் கழகம் 01:00 என்ற கோல் கணக்கில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

மூன்றாம் இடத்தை மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது.

(50-86)

## மெய்வன்மைப்போட்டி

நெடுந்தீவு, மார்ச் 3

நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நெடுந்தீவுப் பங்குத் தந்தை அருட்திரு.எஸ்.ரோய் பேடினன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203-111)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# இரு பிரிவுகளில் வதிரி பொமேர்ஸ் வெற்றி

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான ''கபடி''ப் போட்டியில் ஆண், பெண் இருபிரிவுகளிலும் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

வதிரி பொமேர்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான ''கபடி''ப் போட்டியில் 8 கழகங்கள் பங்கு கொண்டன. இதில் இறுதிப் போட்டியில் 100 புள்ளிகள் பெற்று பொமேர்ஸ் அணி சம்பியனாகியது. நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் 52 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்தையும், இமையாணன் விளையாட்டுக் கழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

பெண்களுக்கான 'கபடி'ப் போட்டியில் 62 புள்ளிகள் பெற்று பொமேர்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனானது. இரண்டாவது இடத்தினை 21 புள்ளிகள் பெற்று மாலிசந்தி மைக்கல் அணி கைப்பற்றியது.

(50-70)



யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப்பிரிவு மாவட்ட மட்டத்தில் கழகங்களுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணம் பசிலியன்ஸ் விளையாட்டுக்கழக வீராங்கனைகள் விருந்தினர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:-நேசன்)

# நல்லூர் பிரதேச கபடிப்போட்டி சம்பியனானது அரியாலை ஐக்கியம்

வலி.வடக்கு, மார்ச்3

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கபடிப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. இரு அணிகளும் முதல் பாதி ஆட்டத்தில் தலா 14 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டன.

இரண்டாம்பாதி ஆட்டத்தில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் தமது திறமையை வெளிப்படுத்தியதுடன் வேகமாக விளையாடிப் புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது.

ஆட்ட நிறைவில் அரியாலை ஐக்கிய விளையாட்டக்கழகம் 46:35 என்ற புள்ளிகள் அடிப்படையில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தை வென்று சம்பியனாகியது. (50-86)

# 4:0 என்ற கோல் கணக்கில் வென்றது கொக்குவில் மத்தி

வலி.வடக்கு, மார்ச்3

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக் கழகமும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஆரம்பம் முதல் போட்டி விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் விறுவிறுப்பு மேலும் அதிகரித்தது.

முதல் பாதி ஆட்ட நிறைவில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் ஒரு கோலைப் பெற்றிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் முழுமையாக மைதானத்தை தனது ஆதிக்கத்தில் வைத்திருந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் மேலும் 3 கோல்களை அது பெற்றுக் கொண்டது.

ஆட்ட நிறைவில் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகம் 04:00 என்ற கோல் கணக்கில் திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக் கழகத்தை வென்று சம்பியனாகியது. (50-86)



அச்சுவேலி மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் விருந்தினராகக் கலந்துகொண்டவர்கள் பாடசாலை 'பான்ட்' வாத்திய இசைக்குழுவின் அணிவகுப்புடன் அழைத்து வருவதையும், விருந்தினர்களாகக் கலந்துகொண்ட அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் ரி.புவனேந்திரன், வணபிதா ஏ.எஸ்.டேமியன், [illegible] ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட [illegible] உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சுவாமிநாதன் கிராம சேவையாளர் எஸ்.சாந்தரூபன் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர்.

*(அச்சுவேலிச் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரப்பந்தாட்டத்தில் பாலசுப்பிரமணிய வித்தி. வெற்றி பெற்றது

நவாலி, மார்ச் 3

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் ஆனைக் கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியா சாலையின் 17 வயதுப் பிரிவினர் முதலாம் இடத்தையும், 15 வயதுப் பிரிவினர் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (50-100)

## இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்.3

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் 2007/08 ஆம் கல்வியாண்டுக்கான தமிழ் மற்றும் சைவசித்தாந்த முதுகலைமாணிக் கற்கை நெறிகளை மேற்கொண்டுவரும் மாண வர்களிடமிருந்து இரண்டாம் அரை யாண்டுப் பரீட்சைக்கான அனுமதி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து எதிர் வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பல் கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட் கப்பட்டுள்ளது. மேற்படி பரீட்சைகள் அடுத்த மாதம் 16 ஆம் திகதி ஆரம் பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

(201)



'பரத நாட்டியக் கச்சேரி முறைமை' என்னும் நூல் வெளியீட்டு விழா இணுவில் பொது நூலக மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

யாழ்.பல்கலைக்கழக பதில் நூலகர் திருமதி ஸ்ரீகாந்தலக்ஷ்மி அருளானந்தம் தலைமை உரையாற்றுவதையும், விருந்தினர்களாகக் கலந்து கொண்ட திருமதி பத்மினி செல்வேந்திரகுமார், திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன், நூல் வெளியீட்டுரை நிகழ்த்திய தமிழ்த்துறை விரிவு ரையாளர் ஈ.குமரன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

இராமநாதன் கல்லூரி நடன ஆசிரியை திருமதி செல்வாம்பிகை வீரசிங்கத்திடம் இருந்து நூலின் பிரதியை மருதா என்ரபிறைசஸ் உரிமையாளர் பா.கஜேந்திரரூபன் பெற்றுக் கொள்வதை இரண்டாவது படத்தில் காணலாம்.

# மனித உடலும் ஓர் இயந்திரம்தான்!



''பிரேசில் நாட்டைச் சேர்ந்தவர்கள் தான் உலகில் அழகான உடல் அமைப்பைக் கொண்டவர்கள். அவர்கள் செய்யும் உடற்பயிற்சிகளைப் பின்பற்றினால் யார் வேண்டுமானாலும் கவர்ச்சியான உடல் அமைப்பைப் பெற முடியும். இதே முறையைப் பின்பற்றி கவர்ச்சியில் கலக்கிக் கொண்டு இருக்கும் கனவுக் கன்னிகளான பிபாஷாபாசுவும், கத்ரீனாகைப்புமே இதற்குச் சிறந்த உதாரணங்கள்'' என்று கூறி பிரமிக்க வைக்கிறார், பிரபல இந்திய உடற்பயிற்சி நிபுணரான தியான் பாண்டே.

மனித உடலும் இயந்திரங்களைப் போலவே சில இயக்க விதிகளின் அடிப்படையில் செயற்படுகிறது. இதை மனதில் வைத்து 'பயோ-மெக்கானிக்கல்' உடற்பயிற்சி இயந்திரங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. எல்லாவிதமான உடல் அமைப்பைக் கொண்டவர்களும், அனைத்து வயதினரும் இதில் பயிற்சி செய்ய முடியும் என்பது இதன் சிறப்பம்சம்.

உயரத்துக்கேற்ற எடையைப் பெற 'வை பிட்' என்ற புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது. தொலைக்காட்சியுடன் இதனை இணைத்து விட்டால் தினமும் விதவிதமான உடல் பயிற்சிகளைப் பார்த்து, அதேபோல் வீட்டிலேயே செய்ய முடியும்.

ஜப்பானின் புகழ்பெற்ற, புராதன தற் காப்புக் கலையான 'ஐகிடோ'வும் இப் போது பிரபலமாகி வருகிறது. உடலுக்கு உறுதியை அளிப்பது மட்டுமல்லாமல்... மனதையும் ஒருமுகப்படுத்த இக்கலை உதவுகிறது. இதனால் சிக்கலான நேரங்களிலும் துல்லியமான முடிவுகளை எடுத்து 'சிறந்த நிர்வாகி' என்று பெயர் வாங்க முடியும்.

நான்கு சுவர்களுக்கு உள்ளேயே பயிற்சி செய்து அலுத்துப் போனவர்களுக்காக, இராணுவக் கொமாண்டோக்களுக்கு அளிக்கப்படும் சாகசப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மலைஏறுதல், கயிற்றில் தலைகீழாகத் தொங்கிச் செல்லுதல், மைல் கணக்கில் ஓடுதல், நீண்ட தூர நீச்சல் என்று சவாலான பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இதில் பயிற்சி பெற்றவர்கள் எதையும் தாங்கும் இதயத்துடன், எப்படிப்பட்ட கஷ்டமான சூழ்நிலையிலும் வேகமாக முடிவெடுத்து வெற்றி பெறமுடியும்.

மேற்கத்திய நாடுகளில் பிரபலமான 'கிக்பொக்சிங்' விளையாட்டின் ஒருவகை யான 'தேபோ' என்ற தற்காப்புக் கலைப் பயிற்சியும் இப்போது கற்றுக் கொடுக்கப்படுகிறது. கராத்தே அசைவு களுடன் கைகளையும், கால்களையும் பயன்படுத்திச் செய்யும் இந்தக் கலையைத் தினமும் செய்து வந்தால் இரும்பு போன்ற பலமான இதயத்தைப் பெறுவது உறுதி.

இவை தவிர, மிகவும் அரிதாக உப யோகிக்கப்படும் உடல் தசைகளான அடி வயிறு, முதுகுத் தசை ஆகியவற்றுக்கும் பிரத்தியேகமான உடற்பயிற்சிகள் இருக்கின் றன. இவற்றைச் செய்வதால் உடலின் உறுதி யான, பலவீனமான தசைகள் ஒருங் கிணைந்து உடல் சிறப்பாக செயற்படு கிறது.

உடற்பயிற்சிகளோடு மட்டும் நின்று விடாமல் உண்ணும் உணவையும் கவன மாகத் தேர்ந்தெடுத்து உண்டால் உடல் பருமன், கொழுப்பு அதிகரித்தல் போன்ற பிரச்சினைகள் ஏற்படாது. இன்று ரசாயன உரங்களும், பூச்சிக் கொல்லி மருந்துகளும் பயன்படுத்தப்பட்டு பயிர்கள் விளைவிக் கப்படுகின்றன. இதனால் உண்ணும் உணவே விஷமாக மாறிவிட்டது. இத்தகைய உணவை உண்பவர்களுக்குப் புற்று நோய் தாக்கும் அபாயம் இருக்கிறது. ரசாயனங் களை உபயோகிக்காமல், இயற்கையான முறையில் பயிர்செய்யப்பட்ட உணவுப் பொருட்களை உண்டு வந்தால் நோயே வராமல் நீண்ட நாட்கள் வாழமுடியும்.

பால், முட்டை, இறைச்சி போன்ற உணவுகளைத் தவிர்த்து, இயற்கை உணவை உண்டால் ஆயுள் கூடும். ஏனென் றால், இவற்றை அளிக்கும் விலங்குகளுக்கு ரசாயனம் கலந்த உணவு கொடுக்கப்படு கிறது. அதிக வளர்ச்சிக்காக ஹோர்மோன் ஊசிகளும் போடப்படுகின்றன. மேலும் சுகாதாரமில்லாத மோசமான சூழ்நிலை களில் இவை வளர்க்கப்படுகின்றன.

பிரபல நடிகர்களும், பெரிய பணக்காரர் களும் தங்களுக்கென பிரத்தியேகமான உடற்பயிற்சி ஆலோசகர்களை வைத்திருக் கிறார்கள். அதுபோல செய்ய வசதி இல்லாத வர்கள் தகுதி வாய்ந்த உடற்பயிற்சிக் கூடங் களில் சேருவதன் மூலம் அழகான உடற் கட்டைப் பெற்று அசத்தமுடியும்.

## கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்.3

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாதாந்தக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு சம்பந் தப்பட்டோர் தவறாது சமூகமளிக்குமாறு பணிப்பாளர் அறிவித்துள்ளார். (201)

## தற்கொலைத் தாக்குதல் நடத்தப்படலாம் என்று எஸ்.எம்.எஸ்.அனுப்பிய சந்தேகநபர் விடுதலை

கொழும்பு,மார்ச்.3

இரண்டு மணி நேரத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்படவுள் ளதாக கையடக்கத் தொலைபேசியில் எஸ்.எம்.எஸ்.மூலம் தகவல் கொடுத்ததாக குற்றம் சாட்டப்பட்ட பெண் தாதியை கொழும்பு மேலதிக நீதிவான் குமாரி அபேரட்ன கடுமையாக எச்சரித்து விடுதலை செய்தார்.

அங்கொடை மனநோயாளர் வைத்திய சாலையில் பணிபுரியும் வகிதா ஜயசிங்க (வயது 32) என்ற இத்தாதிக்கு எதிரான வழக்கு விசாரணையின்போது, நீதிவான் அவரை எச்சரித்து விடுதலை செய்தார்.

மேற்படி சந்தேக நபரின் சார்பில் ஆஜ ரான சட்டத்தரணி அவரை விடுவிக்கக் கோரி நீதிவானிடம் விண்ணப்பித்தி ருந்தார்.

சந்தேகநபர் கடமைபுரியும் வைத்திய சாலையில் குண்டுப் புரளி தொடர்பாக வதந்தி பரவியதால் அவர் இவ்வாறு தனது கைத் தொலைபேசியில் எஸ்.எம். எஸ்.மூலம் நண்பர்களுக்கு தகவல் கொடுத் தார் எனவும் சட்டத்தரணி நீதிவானிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து சந்தேகநபரான அப் பெண் தாதியை 3 இலட்சம் ரூபா பிணை யில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

இனிமேல் ஏதாவது குற்றம் செய்தால் 3 இலட்சம் ரூபாவை அபராதமாகச் செலுத்த வேண்டிவரும் எனவும் நீதிவான் எச்சரித்தார். அரச செலவாக 1500 ரூபா வைச் செலுத்துமாறும் நீதிவான் உத்தர விட்டார். (202-201)

## காணவில்லை

28.02.2009 அன்று காலை 6 மணியில் இருந்து 2½ மாதம் நிரம்பிய பருத்த 'அல் ஷேசன்' இனத்தைச் சேர்ந்த கறுப்புடன் சிறி யளவு மஞ்சள் கலந்த எமது நாய்க்குட்டி 399, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய எனது வீட்டில் இருந்து காணா மல் போயுள்ளது. இதனைக் கண்டு பிடித்து கொடுப்பவருக்கு ரூபா 25000/- சன்மான மாக வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்:
021 222 3512, 0777 238057

## முன்பள்ளி ஆசிரியருக்கு பயிற்சிச் செயலமர்வு

யாழ்ப்பாணம்,மார்ச்.3

நல்லூர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்க ளுக்கான பயிற்சிச் செயலமர்வு நாளை புதன்கிழமை தொடக்கம் மூன்று நாள்க ளுக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் 2 மணி வரை நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிச் செயலமர்வில் அனைத்து முன்பள்ளி களின் ஆசிரியர்களையும் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

## தவறிவிட்டது

கோணாவளை ஒழுங்கை கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியுடைய தே.வசந்தன் என்பவரது தே.அ.அ (820700511V),விசேட அ.அ (0902027612) என்பன பொற்பதி வீதிக்கும் ஆடியபாதம் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பொற்பதி வீதியில் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள விறகு காலையில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,மார்ச்.3

இந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரி சில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாண வர்களுக்கான விண்ணப்பப் படிவங் கள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப் பட்டு வலயங்களுக்கு வழங்கப்பட் டுள்ளன.

அத்துடன் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பாடசாலைப் பரீட்சார்த்திகளின் 2007 ஆம் ஆண்டுக்கான பரீட்சை முடிவுச் சான்றிதழ்களும் எடுத்து வரப்பட்டுள்ள தாக யாழ்.வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

பாடசாலை அதிபர்கள் அவற்றைத் தத்தமது வலயங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (203)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.த.ஜீவராஜா
(N.P.T.T.B.A,B.A)

யாழ்.விக்னேஸ்வராக் கல்லூரி ஆசிரியரும், சிறந்த சொற்பொழிவாளருமாகிய திரு.த.ஜீவராஜா அவர்கள் பாடத் தெரிவில் மாற்றத்தை ஏற்படுத்தி இரண்டாவது தடவையாகவும் கலைமாணிப் பட்டம் பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கற்ற, கற்பித்த ஆசிரிய நண்பர்கள்,
வவுனியா.

(ஃ/557349)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரிப்பதாக புலிகள் அறிவிப்பு

## இந்திய தொலைக்காட்சிக்கு பா.நடேசன் பேட்டி

## தடைமுகாம்களுக்கு சர்வதேசம் நிதிஉதவி வழங்கினால் அது வரலாற்றுப் பேரழிவாகும்; தவறாகும்

புதுடில்லி, மார்ச்3

ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்ற எந்தக் கோரிக்கையையும் நாம் நிராகரிக் கின்றோம். இந்த ஆயுதங்கள் எமது அரசியல் போராட்டத்தின் கருவிகள் மட்டுமன்றி அவையே எமது மக்களின் கவசங்களுமாகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்.

புதுடில்லியில் இருந்து ஒளிபரப்பாகும் 'ரைம்ஸ் நவ்' (Times Now) தொலைக்காட்சி சேவைக்கு நேற்று (திங்கட்கிழமை) வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவரது பேட்டியின் விவரம் வரமாறு:-

கே.:ஐ.நா.வின் பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (27.02.09) உரையாற்றிய ஐ.நாவின் மனிதாபிமான விவ காரங்களுக்கு பொறுப்பான செயலாளர் ஜோன் ஹோம்ஸ் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள மக்கள் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களை வெளியேற அனுமதிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். அதற்கான உங்களின் பதில் என்ன?

ப.:ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கு பொறுப்பான செயலாளர் ஜோன் ஹோம்ஸ் வன்னிக்கு வந்து அங்குள்ள மக்களின் நிலமைகளை பார்வையிடுவதற்கும், பொதுமக்கள் இங்கு பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா என்பதை பார்வையிடுவதற்குமான பாதுகாப்பான பயண ஒழுங்குகளை மேற்கொள்ளாதது வருத்தமானது.

வன்னியில் பணியாற்றி வந்த ஐ.நா. மற்றும் தொண்டர் நிறுவனங்கள் போன்றவற்றை அங்கிருந்து வெளியேறும்படி கடந்த வருடம் அரசு உத்தரவிட்டதை தொடர்ந்து ஐ.நா. தமிழ் மக்களை கைவிட்டுள்ளது. அதன் பின்னர் அரசு சாட்சிகள் அற்ற நிலையில் தனது போரை நடத்தி வருகின்றது.

தமது சொந்த விருப்பத்தின் அடிப்படையில் தான் மக்கள் இங்கு வசித்து வருகின்றனர். அவர்கள் தாங்கள் வாழும் பிரதேசத்தில் அமைதியும், பாதுகாப்பும் வேண்டும் என விரும்புகின்றனர். ஐ.நா.வின் ஆதரவுடன் சிறிலங்கா அரசு நடத்தி வரும் தடை முகாம்களுக்கு செல்வதற்கு அவர்கள் விரும்பவில்லை. சிறிலங்காவின் இந்த முகாம்களை தடை முகாம்களுக்கு ஒப்பானவை என கடந்த மாதம் 20 ஆம் நாள் மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்திருந்தது.

கே.:சிறிலங்கா வேறு நாடுகளின் அதிகாரங்களுக்கு உட்பட்ட நாடு அல்ல. எனவே யாரும் போரை நிறுத்தும் படி அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது என சிறிலங்காவின் பிரதமர் ரட்ணசிறீ விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக உங்களின் கருத்து என்ன?

ப.:காஸா பகுதியை விட வன்னியில் அதிகளவான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அங்கு பொதுமக்கள் பாதிக்கப்படுவது தொடர்பாக உலக நாடுகள் கவனம் செலுத்துகின்றன. உலக நாடுகளில் சிறிலங்காவும் ஒன்று, அது அணிசேரா நாடுகள், ஐ.நா. போன்றவற்றிலும் உறுப்புரிமை உள்ள நாடு. உலகின் இந்த நிலைப்பாடு ஆளுகைக்கு உட்பட்ட நாடு என்ற வாதத்தின் அடிப்படையிலானது அல்ல.

இருந்த போதும், ஐ.நா. மற்றும் உலகின் மனிதாபிமான சமூகம் என்பன வன்னியில் மேற்கொள்ளப்படும் படை நடவடிக்கையை நிறுத்துவது தொடர்பாகவும், சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் குறித்தும் முக்கிய கவனத்தை இதுவரையில் செலுத்தவில்லை.

பயங்கரவாதத்தின் மீதான போரை மேற்கொண்டு மக்களை விடுவிக்கின்றோம் என்ற போர்வையில் திட்டமிட்ட படு கொலைகளையும், இனவாத தாக்குதல்களையும், பயங்கரமான வன்முறைகளையும் அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது. மனித கேடயங்களாக பொதுமக்களை பயன்படுத்துவதாக போலியாக அரசு கூறியவாறு அவர்கள் மீது எறிகணைகளை வீசி படுகொலை செய்து வருகின்றது. இது இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக அரசினால் மேற்கொள்ளப்படும் இன அழிப்பு நடவடிக் கையாகும்.



தமிழ் மக்களை பாரம்பரியமாக வாழ்ந்து வரும் அவர்களின் இடங்களில் இருந்து வெறியேற்றுவதற்கு முயற்சிப்பது வேதனையானது. நான் ஒன்றை கேட்கின்றேன், தீர்வு ஒன்றை காண்பதற்காக காஸா பகுதியில் உள்ளவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதனை ஐ.நா. ஆதரிக்குமா?

இலங்கையில் நடைபெற்று வரும் மோதல்கள் அனைத்துலகத்திற்கு ஆபத்தானது அல்லாத உள்நாட்டு விவகாரம் என தெரிவித்து, சிறிலங்காவின் படை நடவடிக்கையை நிறுத்துவது தொடர்பாக ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் விவாதிப்பதற்கு சில நாடுகள் கருதுவது வேதனையானது. ஐ.நாவின் பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடுகள் துன்பத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு உதவிகளை புரிவதுடன், மனித பேரவலத்தை தடுக்க முன்வர வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

கே.:தற்போது மேற்கொள்ளப்படும் படை நடவடிக்கையை நிறுத்துவதற்கு அனைத்துலக சமூகம் நடவடிக்கை எடுக்காததனால் ஏற்பட்ட பாதிப்புக்கள் என்ன?

ப.:சிங்கள படையினரின் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களினால் இங்கு நாளாந்தம் 50 பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர். சிறுவர்களின் கல்வியும் தடைப்பட்டுள்ளது. உணவு மற்றும் மருந்துப் பொருள்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பீரங்கி மற்றும் பல்குழல் உந்துகணை செலுத்திகளின் தாக்குதலினால் சிறுவர்களும், பெண்களும், முதியவர்களும் கொல்லப்படுகின்றனர்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற போர்வையில் திட்டமிட்ட வகையில் சிறிலங்கா அரசு தமிழ் மக்களை பலவந்தமாக வெளியேற்றுவதனை, அனைத்துலக சமூகத்தின் செயற்திறன் அற்ற நடவடிக்கை ஊக்குவிக்கின்றது. (வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள தடை முகாம்கள் ஒன்றை மட்டும் தான் வெளிப்படுத்துகின்றன. அதாவது, ஆடுகளை எதிர்பார்த்து ஓநாய்கள் காத்திருக்கின்றன.)

### வவுனியா சென்ற மக்களை நிரந்தர அகதிகளாக்கும் முயற்சி

கே.:விடுதலைப் புலிகளிடம் இருந்து தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும் என சிறிலங்கா அரசு தெரிவித்து வருகின்றது. அதற்கான உங்களின் பதில் என்ன?

ப.:வன்னியில் இருந்து வெளியேறும் மக்களை சிறிலங்கா அரசு தடுத்து வைத்துள்ளது. அவர்களை நேர்காணல் காண்பதற்கு இராணுவத்தினரால் வழிநடத்தப்படும் ஊடகங்களையே அனுமதித்து வருகின்றது. துன்பத்தினாலும், அச்சத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களை பயன்படுத்தி ஆக்கிரமிக்கும் இராணுவத்தை விடுவிப்புவர்களாக சித்தரிக்கின்றது.

ஆனால், சில அனைத்துலக ஊடகங்களின் தகவல்களின் படி வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா சென்ற மக்கள் மீண்டும் வன்னிக்கு திரும்பவே விரும்புவதாக அறியமுடிகின்றது. இந்த தமிழ் மக்களை

(15 ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் சமரவீர இரட்டைச்சதம் முதல் இன்னிங்ஸில் இலங்கை 606

பாகிஸ்தான் தலைநகர் லாஹூரில் இடம்பெறும் பாகிஸ்தான் உடனான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியிலும் இலங்கை வீரர் திலான் சமர வீர இரட்டைச் சதமொன்றைப் பெற்று சாதனை புரிந்துள்ளார்.


திலான் சமரவீர நேற்று 214 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் தொடர்ச்சியாக இரட்டைச்சதம் பெற்ற ஆறாவது வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

திலகரட்ண தில்ஷானுடன் இணைந்து திலான் சமரவீர நேற்று ஐந்தாவது விக்கெட்டுக்காக 207 ஓட்டங்களைப் பெற்றார்.

தனது இரட்டை சதத்தைப் பூர்த்தி செய்து 214 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அவர் ரண்அவுட் முறையில் ஆட்டமிழந்தார். தில்ஷான் மிகவும் வேகமாகத் துடுப்பெடுத்தாடி 170 பந்துகளில் 145 ஓட்டங்கைளைப் பெற்று ரண்அவுட் முறையில் ஆட்டமிழந்தார். சங்கக்காராவும் சிறப்பாக ஆடி 4 ஓட்டங்களை எடுத்தார்.

வர்ணபுர (8) பரணவிதாரன (21), மஹேல (30) ஆகியோர் பெரிதாக சோபிக்கவில்லை. இலங்கை 606 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் உமர் குல் 135 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான நேற்றைய ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 111 ஓட்டங்களை எடுத்திருந்தது.



## இந்திய அணிக்கு கூடுதல் பாதுகாப்பு


நேப்பியர், மார்ச் 3

நியூஸிலாந்து அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரின்போது, இந்திய வீரர்களுக்கு கூடுதல் பாதுகாப்புத் தேவை என்று இந்திய அணித்தலைவர் டோனி வலியுறுத்தியுள்ளார்.

வெலிங்டனில் நடந்த 2ஆவது ருவெண்ரி 20 போட்டியின் கடைசி ஓவரின்போது, எல்லைக்கோட்டுக்கு அருகே களத்தடுப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இந்திய வீரர்கள் மீது சில நியூஸிலாந்து ரசிகர்கள் தண்ணீர் போத்தல்களை வீசினர். இதையடுத்து, ஒருநாள் தொடருக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று இந்திய அணித் தலைவர் டோனி வலியுறுத்தி உள்ளார்.

இதையடுத்து, ஒருநாள் போட்டிகளின் போது மைதானத்தில் பொலிஸார் அதிக அளவில் குவிக்கப்படுவார்கள். ரசிகர்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும். பிரச்சினைக்குரிய நபர்கள் வெளியேற்றப் படுவார்கள் என்று நியூஸிலாந்துக் கிரிக்கெட் சபைத் தலைமை அதிகாரி ஜஸ்டின் வாஹன் தெரிவித்தார்.

# சர்வானின் அதிரடி ஆட்டத்தால் மேற்கிந்தியா ஓட்டம் குவிப்பு



பார்படாஸ் மார்ச் 03

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 749 ஓட்டங்களைக் குவித்தது. சர்வான் 291 ஓட்டங்களைக் குவித்தார். இங்கிலாந்து, மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி பார்படாஸில் உள்ள பிரிட்ஜ டவுனில் நடைபெற்று வருகிறது. இதில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 600 ஓட்டங்கள் எடுத்தது.

இதற்குப் பதிலடி தரும் வகையில் மேற்கிந்திய தீவுகள் அணி தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 749 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அந்த அணியின் வீரர் சர்வான் அபாரமாக ஆடி 291 ஓட்டங்கள் குவித்தார். இளம்வீரர் ராம்டீன் சிறப்பாக ஆடி 166 ஓட்டங்களைக் குவித்தார். இந்த ஜோடி 6 ஆவது விக்கெட்டுக்கு 261 ஓட்டங்களைச் சேர்த்தது. சர்வான் இரண்டாவது முறையாக இரட்டைச் சதம் அடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கிந்திய தீவுகள் அணி இங்கிலாந்தை விட 149 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. நான்காம் நாளான நேற்று முன்தினம் ஆட்ட நேர இறுதியில் இங்கிலாந்து அணி விக்கெட் இழப்பின்றி 6 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதல் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றியீட்ட - 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இரண்டாவது போட்டி சமநிலையில் முடிவடையக் கூடிய நிலையில் இருப்பதால் தொடர் மேற்கிந்தியத் தீவுகள் வசமாகும்.

# பரபரப்பான கட்டத்தில் ஆஸி. தென்னாபிரிக்க டெஸ்ட்

அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா இடையே நடந்து வரும் முதலாவது டெஸ்ட் பரபரப்பான கட்டத்தை எட்டியிருக்கிறது.

246 ஓட்டங்கள் முன்னிலையுடன் தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸை ஆடிய அவுஸ்திரேலிய அணி 3ஆவது நாள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 51 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்த நிலையில் 4ஆவது நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. வேகமாக ஓட்டங்கள் குவிக்கவேண்டும் என்ற நோக்குடன் 4ஆவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த அவுஸ்திரேலிய அணிக்கு விக்கெட்டுகள் மளமளவென சரிந்தன. முடிவில் 207 ஓட்டங்களில் அவுஸ்திரேலியா சகல விக் கெட்டுக்களையும் இழந்தது. அதிகபட்சமாக ஆரம்ப ஆட்டக்காரர் பிலிப் ஹக்ஸ் 75 ஓட்டங்களும் (121 பந்து, 11 பவுண்டரி, ஒரு சிக்ஸர்), ஹடின் 37 ஓட்டங்களும், அணித் தலைவர் பொண்டிங் 25 ஓட்டங்களும், முதல் இன்னிங்ஸில் சதம் அடித்த மார்கஸ் நார்த் 5 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதன் மூலம் தென்பிரிக்காவுக்கு 454 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்தப் பெரிய இலக்கை நோக்கி தென்னாபிரிக்காவின் 2ஆவது இன்னிங்ஸை அணித்தலைவர் சுமித்தும், மெக்கன்ஸியும் தொடங்கினார்கள். முதல் இன்னிங்ஸில் சோடைபோன இந்த ஜோடி, 2ஆவது இன்னிங்ஸில் நல்ல தொடக்கத்தைக் கொடுத்தது. இவர்கள் முதல் விக்கெட்டுக்கு 76 ஓட்டங்கள் சேர்த்தனர். மெக்கன்சி 35 ஓட்டங்களிலும் (95 பந்து), சுமித் 69 ஓட்டங்களிலும் (110 பந்து, 7 பவுண்டரி) ஆட்டமிழந்தனர்.

இவர்களுக்குப் பின்னர் இணைந்த அம்லா, கலீஸ் ஆகியோர் மேற்கொண்டு விக்கெட் விழாமல் பார்த்துக்கொண்டனர். 4ஆவது நாள் ஆட்டநேர முடிவில் தென்னாபிரிக்க அணி 2ஆவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 178 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அம்லா 43 ஓட்டங்களுடனும் (88 பந்து), கலீஸ் 26 ஓட்டங்களுடனும் (40 பந்து) களத்தில் நீடித்தார்கள்.

தற்போதைய நிலையில் இரண்டு அணிகளுக்கும் வெற்றி வாய்ப்பு சரிசமமாக இருப்பதால் இந்த டெஸ்ட் பரபரப்பான கட்டத்தை எட்டியிருக்கிறது. தென்பிரிக்காவின் வெற்றிக்கு இன்னும் 276 ஓட்டங்கள் தேவைப்படுகின்றன. கைவசம் 8 விக்கெட்டுகள் உள்ளன.

454 ஓட்டங்களை தென்னாபிரிக்கா எடுத்து வென்றால், அது புதிய உலக சாதனையாக இருக்கும். 2003ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகள் அணி அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அதிகபட்சமாக 418 ஓட்டங்களை விரட்டிப் பிடித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி கோவையில் சிவனடியார்கள் உண்ணாவிரதம்

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி கொங்கு நாட்டு ஆதீனங்கள், அருளாளர்கள், சிவனடியார்கள் நேற்றுமுன்தினம் கோயம்புத்தூரில் உண்ணாவிரதம் இருந்தனர்.

காந்திபுரம் தமிழ்நாடு ஹோட்டல் முன் நடைபெற்ற உண்ணாவிரதத்தை பா.ஜ.க. கவுன்ஸிலர் கோமதி ராஜன் குத்துவிளக்கேற்றி தொடக்கி வைத்தார்.

இதற்குத் தலைமை வகித்த பேரூர் ஆதீனம் மருதாசல அடிகளார் பேசியவை வருமாறு -

இலங்கையில் நடப்பது தமிழர்களுக்கு எதிராக, தமிழ் இனத்தை அழிப்பதற்காக நடத்தப்படும் போர். தமிழ் இனத்தை அழிப்பதோடு, புராதன கலைச் சிற்பங்களையும், தமிழ் இலக்கியங்களையும் சிங்களவர்கள் அழித்து வருகின்றனர்.

63 நாயன்மார்களில் புகழ் பெற்ற திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரால் பாடப்பட்ட இரண்டு தலங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளன. திருகோணமலை, திருக்கேதீஸ்வரம் என்ற இரண்டு திருக்கோவில்கள் வரலாற்று சிறப்பு மிக்கவை, 1,200 ஆண்டுகள் பழமையானவை. இக் கோவில்களில் வழிபாடு நடத்தப்படுவதில்லை. அங்குள்ள

## அங்கு நடத்தப்படுவது ஈழத் தமிழினத்தை அழிப்பதற்கான போர் - பேரூர் ஆதீனம் பேச்சு

சிலைகள் உடைக்கப்படுகின்றன. கோவிலுக்குள் காலணிகள் வீசப்படுகின்றன. இராணுவத் தளபாடப்பொருள்கள் வைக்கும் அறைகளாக கோவில்கள் மாறி வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் உள்ள மிகப்பெரிய நூலகத்தில் வைக்கப்பட்டிருந்த இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள் எரித்து சாம்பலாக்கப்பட்டன. தமிழர்களைக் காப்பாற்றுவதோடு, அங்குள்ள தமிழ் நூல்கள், ஓலைச் சுவடிகள், கலைச்சிற்பங்கள், சமய நூல்களைக் காக்க வேண்டும். பழைமையைப் பாதுகாக்க அமைக்கப்பட்டுள்ள யுனெஸ்கோ அமைப்பு இதில் தலையிட்டு தீர்வு காண வேண்டும் - என்றார்.

காமாட்சிபுரி ஆதீனம் சிவலிங்கேஸ்வர சுவாமிகள், பொன்னையராஜபுரம் பாலமுருகனடிமை சுவாமிகள், பிள்ளையார் பீடம் பொன் மணிவாசக அடிகளார், மலுமிச்சம் பட்டி நாகசக்தி அம்மன் அருள்பீடம் சிவசண்முக சுந்தரபாபு சுவாமிகள், நவக்கரை நந்திகோவில் ராமானந்தமூர்த்தி

இன்பமே சூழ்க; எல்லோரும் வாழ்க!



இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி சிவனடியார்கள் விரதமிருந்தபோது.....

சுவாமிகள், சவுரிபாளையம் வராகி மணிகண்ட சுவாமிகள், ஈச்சனாரி கட்சியப்பர் மடாலயம் சடாச்சரவேல் சுவாமிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

மேலும் இந்து மக்கள் கட்சி (தமிழகம்) தலைவர் அர்ஜுன் சம்பத் உள்ளிட்ட பல தரப்பினரும் இதில் கலந்து கொண்டனர்.

# கொளத்தூர்மணி நேற்றுக் கைது!

சேலம், பெப். 03

பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணியை திண்டுக்கல் பொலிஸார் நேற்றுக்காலை 7.30 மணியளவில் சேலம் மாவட்டம் மேட்டூரிலுள்ள அவரது பொன்னகர் வீட்டில் வைத்துக் கைதுசெய்தனர்.

பெப்ரவரி 26ஆம் திகதி திண்டுக்கல்லில் நடைபெற்ற பெரியார் திராவிடர் கழகப் பொதுக் கூட்டத்தில் பேசிய அவர் தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிராகப் பேசினார் என 3 பிரிவுகளின் கீழ் திண்டுக்கல் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இதனால் விசாரணை செய்வதற்காக நேற்றுக்காலை 7.30 மணியளவில் அவர் விசாரணை என்ற பெயரில் கைது செய்யப்பட்டு திண்டுக்கல் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இவர், தனது தோட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு பயிற்சி கொடுத்தமைக்காகவும், கர்நாடக வாழ் தமிழர்களுக்காக போராடியமைக்காகவும் 5 ஆண்டுகளுக்கு மேல் சிறைவாசம் அனுபவித்தவர் என்பதும், கடந்த சில நாள்களுக்கு முன்புதான் ஈரோடு நிகழ்வில் பேசியதற்காக ஒரு மாதம் சிறை சென்று வெளிவந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் தமிழருக்கு சம உரிமைகள் கட்டாயம் வழங்கப்பட்டே ஆகவேண்டும்

## இதற்கு மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை; குற்றஞ்சாட்டுகிறது பா.ஜ.க.



சென்னை, மார்ச் 3

இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு சம உரிமைகள் கட்டாயம் வழங்கப்பட வேண்டும். ஆனால், தற்போதைய மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை. இலங்கைத் தமிழர்கள் குறித்து மத்திய அரசோ, காங்கிரஸ் கட்சியோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை - என்று பா.ஜ.க.வின் மூத்த தலைவர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

பிரதமர் வேட்பாளரான எல்.கே.அத்வானி மார்ச் 7ஆம் திகதி நாகர்கோவிலில் தேர்தல் பிரசாரத்தைத் தொடங்கவுள்ளார் - என்றும் அவர் தெரிவித்தார்.

பா.ஜ.க.வின் தென் மாநிலங்களுக்கான தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள வெங்கைய நாயுடு, தமிழகத்தில் மேற்கொள்ள வேண்டிய தேர்தல் பணிகள் குறித்து அக்கட்சி நிர்வாகிகளுடன் சென்னையில் நேற்றுமுன்தினம் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறியவை வருமாறு -

மக்களவைத் தேர்தலில், 'நல்ல அரசு, தேசப் பாதுகாப்பு, தேச முன்னேற்றம்' ஆகிய முழக்கங்களை முன்வைத்து பா.ஜ.க. பிரசாரத்தில் ஈடுபடும்.

வேட்பாளர்கள் பட்டியல் தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. 138 தொகுதிகளுக்கான பட்டியல் தயாராகிவிட்டது. மார்ச் 15க்குள் இறுதிப் பட்டியல் தயாராகிவிடும்.

இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமைகள் கட்டாயம் வழங்கப்பட வேண்டும். ஆனால் தற்போதைய மத்திய அரசு அப்பிரச்சினையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை.

இலங்கைத் தமிழர்கள் குறித்து மத்திய அரசோ, காங்கிரஸ் கட்சியோ கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் செல்வாக்கு மிக்கவராக தமிழக முதல்வர் கருணாநிதி திகழ்கிறார். ஆனால் இலங்கையில் போரை நிறுத்த, அந்த வாய்ப்பைப் பயன்படுத்த அவர் தவறிவிட்டார்.

தமிழகம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் பா.ஜ.க. தனித்தே போட்டியிடும் - என்றார்.

பேட்டியின்போது கட்சியின் தேசிய செயலாளர் சு.திருநாவுக்கரசர், மாநிலத் தலைவர் இல.கணேசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# தமிழினத்துக்கு முதல்வர் துரோகம்!

## சிறையைக் கண்டு அஞ்சி நடுங்க மாட்டேன் இது 28ஆவது முறை; வைகோ ஆவேசம்



திருநெல்வேலி, மார்ச் 03

இலங்கைப் பிரச்சினையில் தமிழ் இனத்துக்கு முதல்வர் பச்சைத் துரோகம் செய்துவிட்டார் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ குற்றம்சாட்டியுள்ளார்.

தூத்துக்குடியில் மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு எதிராக கடந்த சனிக்கிழமை கறுப்புக்கொடி காட்ட முயன்ற வைகோ தலைமையிலான 185 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை 15 நாள்கள் நீதிமன்றக் காவலில் அடைக்க மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

இதையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 5.10 மணிக்கு இவர்களை பாளையங்கோட்டை சிறையில் பொலிஸார் அடைத்தனர்.

பின்னர் சிறையில் இருந்து சிறிதுநேரம் மட்டும் வெளியே வந்த வைகோ, சிறைவாச லில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறினார். மேலும் அவர் அப்போது கூறியவை வருமாறு -

இலங்கையில் இனப் படுகொலை நடந்த இடங்களில் செஞ்சிலுவைச் சங்கத்தினர் 90 சிசுக்களின் சடலங்களைக் கண்டெடுத்து உள்ளனர். இராணுவ அமைச்சராக பிரணாப் முகர்ஜி இருந்தபோதுதான், இலங்கைக்கு அதிகளவிலான ஆயுதங்கள் அனுப்பப்பட்டன. இங்கிருந்து அனுப்பப்பட்ட கருவிகளை இயக்க அங்கு 265 பேருக்கு பயிற்சியளித்த 3 ஆயிரம் சிப்பாய்கள் கூட இன்னும் திரும்பிவரவில்லை. அந்த ஆயுதங்கள் மூலம் தமிழ் மக்கள் கொல்லப்படுவது வேதனை அளிக்கிறது.

அதனால்தான் தூத்துக்குடிக்கு பிரணாப் வந்தபோது அவருக்கு எதிராக கறுப்புக்கொடி காட்ட முற்பட்டோம். இதில் இளைஞர்கள் சிலர் கூட்டத்தில் பிரணாப் படத்துக்கு தீவைத்து தங்கள் ஆவேசத்தை வெளிப்படுத்தினர். அதனால்தான் அரசு எங்களைக் கைது செய்தது. அதுமட்டுமன்றி காங்கிரஸை திருப்திப்படுத்துவதற்காகவும் நாங்கள் கைதுசெய்யப்பட்டோம். சிறையைக் கண்டு நான் அஞ்சமாட்டேன். இதுவரை 28 முறை சிறை சென்றுள்ளேன் - என்றார்.

## வைகோ விடுதலை

மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றபோது கைதான ம.தி.மு.க. பொதுச் செயலாளர் மற்றும் 2 எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்ட 159 பேர் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தூத்துக்குடியில் கடந்த 28இல் கைதான இவர்களை 15 நாள் காவலில் வைக்க மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். இதையடுத்து அனைவரும் பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட வைகோ உட்பட அனைவரது சார்பிலும் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த நீதிபதி, நேற்று வைகோ உட்பட 159 பேருக்கும் பிணை வழங்கி உத்தரவிட்டார்

# இந்திய நாடாளுமன்றத் தேர்தல்: ஏப். 16ஆம் திகதிமுதல் மே 13 வரை

புதுடில்லி, மார்ச் 03

நாடாளுமன்றத் தேர்தல் ஏப்ரல் 16 முதல் மே 13 வரை ஐந்து கட்டங்களாக நடைபெறும் - என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

முதல்கட்ட வாக்குப்பதிவு ஏப்ரல் 16இலும், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு 23இலும், மூன்றாம் கட்ட வாக்குப்பதிவு 30இலும், நான்காம் கட்ட வாக்குப்பதிவு மே 7இலும், ஐந்தாம் கட்ட வாக்குப்பதிவு மார்ச் 13இலும் நடைபெறுகிறது.

வாக்கு எண்ணும் நடவடிக்கை மே 16ஆம் திகதி நடைபெறுகிறது.

தமிழகத்தில் மே 13 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெறுகிறது. வரும் 17ஆம் திகதி வேட்புமனுத் தாக்கல் ஆரம்பித்து 24ஆம் திகதி முடிவடைகிறது.

இதிலுள்ள முக்கிய தகவல்கள் வருமாறு -

★ 40 லட்சம் தேர்தல் பணியாளர்கள்.

★ பாதுகாப்பு பணிக்கு 21 லட்சம் பொலிஸார் மற்றும் துணை இராணுவப் படையினர்.

★ 13.68 லட்சம் வாக்குப்பதிவு இயந்திரங்கள்.

★ 8 லட்சம் 28 ஆயிரம் வாக்குச்சாவடிகள்.

★ புதிய அரசு ஜூன் 2இல் பொறுப்பு ஏற்க வேண்டும்.

# சீமானின் ஒரு வருடகால சிறை குறித்து நடிகர் மணிவண்ணன் புதுவிளக்கம்!



வேதாரண்யம், பெப். 03

ஈழத் தமிழ் ஆதரவு அக்கினிப்புயல் சீமான் வெளியில் இருந்தால் தேர்தலில் தங்களுக்கு வாக்கு எண்ணிக்கை குறைந்துவிடும் என்ற எண்ணத்தில், அவரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் ஒரு வருடத்துக்கு வெளியில் வரமுடியாதவாறு சிறையில் அடைத்துள்ளனர் - என்று இயக்குநரும் நடிகருமான மணிவண்ணன் கூறியுள்ளார்.

இலங்கையில் போரை நிறுத்த வலியுறுத்தி, திருவாரூர் மாவட்டம் கோவில் வெண்ணியிலிருந்து, நாகை மாவட்டம் வேதாரண்யம் வரை 110 கிலோ மீற்றர் தொடர் ஓட்ட நிறைவு விழா பொதுக் கூட்டம் வேதாரண்யம் ராஜாஜி பூங்காவில் நடந்தது.

விழாவில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மணிவண்ணன் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தினரால் சுடப்படுவது தொடர்ந்து வருகிறது. பாதுகாப்புக்காக உள்ள இந்திய கடற்படையினர், மீனவர்கள் பாதுகாப்புக்காக இருக்கிறார்களா அல்லது அவர்களை சுட்டுக்கொல்லும் இலங்கை இராணுவத்தினருக்கு பாதுகாப்பாக உள்ளார்களா என்ற ஐயப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்போது, இங்கு நடக்கும் அரசியல் சம்பவங்கள் எனது ஐயப்பாட்டை உறுதிசெய்யும் வகையில் உள்ளது. சினிமா இயக்குநர் சீமான், வெளியிலிருந்தால் தங்களுக்கு வாக்குகள் குறையும் என்பது மட்டுமல்லாமல், ஆட்சிக்கும் வர முடியாது. என்பதால், அவரை தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் கைதுசெய்துள்ளனர்.

தமிழக காங்கிரஸ் கட்சி தலைவராக தங்கபாலு பொறுப்பேற்று ஆறு மாத காலங்களில் சீமானை, வைகோவை கைதுசெய் என்று அறிக்கை கொடுத்ததைத் தவிர, வேறு எதையும் செய்யவில்லை. இந்தத் தகவல் கொடுப்பதிலேயே 'பிஸி'யாக உள்ளார். இப்படிப்பட்டவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றால் மக்களுக்கு எதையும் செய்ய முடியாது. அதனால், எங்களைப்போல வேலை வெட்டி இல்லாமல் இருப்பவர்களை தெரிவு செய்தால், அவர்களுடைய பிரச்சினைக்காக போராடுவோம். நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்போம் - என்றார்.

# பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கும்வரை நீதிமன்றப் பணிப் புறக்கணிப்புத் தொடரும்

சென்னை, மார்ச். 03

சென்னை உயர்நீதிமன்றச் சம்பவம் தொடர்பாக விசாரணைக் கமிஷன் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதனடிப்படையில் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கும் வரை நீதிமன்றைப் புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபடுவோம் - என்று சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திற்குள் சட்டத்தரணிகள் - பொலிஸார் மோதல் குறித்து நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா தலைமையிலான விசாரணைக் கமிஷன் நேற்றுமுன்தினம் 2ஆவது நாளாக விசாரணை நடத்தி முடித்தது.

## சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு

இதில் கலந்துகொண்டு வெளியே வந்த சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஆர்.சி.போல் கனகராஜ் செய்தியாளர்களிடம் கூறுகையில் -

தனக்கு சூட்கேஸ் நிறைய போதுமான ஆவணங்கள் கிடைத்துள்ளன என விசாரணைக் கமிஷன் நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா கூறினார். அவ்வாறு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்று உத்தரவு பிறப்பிக்கும் வரை நீதிமன்றைப் புறக்கணிப்போம். உண்ணாவிரத போராட்டத்திலும் ஈடுபடுவோம் - என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனான் முன்னாள் பிரதமரின் படுகொலை விசாரணை ஆரம்பம்

## நெதர்லாந்து சர்வதேச நீதிமன்றில் ஏற்பாடு

பெய்ரூத், மார்ச் 3

லெபனானிய முன்னாள் பிரதமர் ரபிக் ஹரிரி படுகொலை தொடர்பான விசாரணை நெதர்லாந்திலுள்ள ஹேகு சர்வதேச நீதிமன்றத்தில் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2005 ஆம் வருட பெப்ரவரியில், லெபனானின் தலைநகரான பெய்ரூத்தில் முன்னாள் பிரதமர் ரபிக் ஹரிரி கார்க்குண்டுத் தாக்குதலொன்றில் கொல்லப்பட்டார். இதில் மற்றும் 22 பேர் வரை பலியாயினர்.

இக்குண்டுத் தாக்குதல் தொடர்பாக சில வாரங்களுக்குள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் சிரியாவுக்கு ஆதரவான நான்கு இராணுவ ஜெனரல்களும் அடங்குவர். தற்போது சர்வதேச நீதிமன்றம் இந்நான்கு ஜெனரல்களையும் அதனிடம் ஒப்படைக்குமாறு லெபனானை கோரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படுகொலையில் அயல்நாடானா சிரியா சம்பந்தப்பட்டுள்ளது என ஹரிரியின் ஆதரவாளர்கள் குற்றஞ்சாட்டினர். அத்துடன் இப்படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்து லெபனானில் பரவலாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. அச்சமயம் லெபனானில் சிரிய படைகள் தொடர்ந்தும் நிலைகொண்டிருந்தன.

இப்படுகொலையை அடுத்து, சிரியா படைகள் உடனடியாக லெபனானிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு. புஷ் உட்பட உலகத் தலைவர்கள் கோரிக்கை விடுத்தார்கள். ஐ.நா. மேற்கொண்ட உடனடி நடவடிக்கையை அடுத்து, சிரியப் படைகள் நாட்டைவிட்டு வெளியேறின.

லெபனானில் இடம்பெற்ற சிவில் யுத்தத்தை தடுப்பதற்காக வரவழைக்கப்பட்ட சிரிய படைகள் நாடு சீரடைந்த பின்னரும், லெபனானில் 30 வருட காலம் விடாப்பிடியாக நிலைகொண்டிருந்தன. இதற்கு ஹரிரி அணியினர் தொடர்ந்தும் ஆட்சேபனை தெரிவித்து வந்துள்ளனர்.

லெபனானிய அரசியலிலும், இராணுவத்திலும் சிரிய ஆதரவுப் பிரிவும், எதிர்ப்புப் பிரிவும் உருவாகின. இத்தகைய ஒரு தருணத்தில்தான் சிரிய எதிர்ப்பாளரான முன்னாள் பிரதமர் ரபீக் ஹரிரி தலைநகரில் படுகொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை சிரியா அடியோடு மறுத்துவந்துள்ளது.

இப்படுகொலை தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்படுவதையொட்டி, முன்னாள் பிரதமர் ரபீக் ஹரிரி யின் புதல்வர் சாட், வரவேற்புத் தெரி வித்துள்ளார். இது தொடர்பாக அவர் பி.பி.ஸிக்குக் கருத்துத் தெரிவிக்கையில், ''இவ்விசாரனைக்காக நாம் நீண்ட காலம் காத்து இருந்துள்ளோம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நீதிமன்றத்திடம் சந்தேக நபர்களைக் கையளிக்குமாறு, கனேடிய வழக்குத் தொடுநர் டானியல் பெலிமாரி லெபனானிய அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளவிருக்கிறார். இதற்காக அவருக்கு 60 நாள்கள் கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

''குற்றப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க தயாராகவே உள்ளேன். போதிய சாட்சியங்கள் உண்டு. இது குறித்து தனிப்பட்ட ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் நான் திருப்தியடைகிறேன்'' என்றும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

## பங்களாதேஷில் 1,000 சிப்பாய்கள் மீது கொலைக் குற்றச்சாட்டு

டாக்கா, மார்ச்3

பங்களாதேஷ் இராணுவ அதிகாரிகளைச் சிறைப்பிடித்து திடீர் கலகம் செய்த் துணை நிலை இராணுவப் படையின் (பி.டி.ஆர்.) 1,000 இற்கும் மேற்பட்ட சிப்பாய்கள் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் மீதான குற்றச் சாட்டுகளை விசாரிக்க தனிச் சட்டம் இயற்ற முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத் தின் அடிப்படையில் தனி விசாரணை நீதிமன்றம் நியமிக்கப்பட்டு, வழக்கு விசாரிக்கப்பட்டு விரைவில் தீர்ப்பு வழங்கப்படும் என தலைநகர் டாக்காவில் அரசு தரப்பில் ஞாயிற்றுக்கிழமை தெரிவிக்கப்பட்டது.

குற்றவாளிகளுக்குஅதிகபட்ச தண்டனை வழங்கப்படும் என தெரிய வருகிறது. அதிகபட்ச தண்டனை என்பது மரண தண்டனைதான் என்பது குறிப்பிடத்தக்கது.

1971 இல் பங்களாதேஷ் உருவானது. அந்நாட்டில் இராணுவக் கலகம் மூலம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் அடிக்கடி நடக்கின்றன. அங்கே இன்னும் பாகிஸ்தானுக்கு ஆதரவான சக்திகள் செல்வாக்குடன் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

## இங்கிலாந்து தொழில் அதிபரின் தொலைபேசியை விழுங்கிய மீன்!

லண்டன், மார்ச் 03

இங்கிலாந்தைச் சேர்ந்த தொழில் அதிபர் அன்றூ சியாட்டில், கடற்கரையில் தொலைத்துவிட்ட கையடக்கத் தொலைபேசி மீனின் வயிற்றுக்குளிருந்து இயங்கும் நிலையில் மீட்கப்பட்டது.

அன்றூ சியாட்டி, தமது கையடக்கத் தொலைபேசியை கரையில் வைத்து விட்டு கடலில் குளித்துள்ளார். குளித்த பின்னர் கரை திரும்பிய இவர் தொலைபேசியை காணாது திரும்பியுள்ளார். கடல் அலையால் அது இழுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என அவர் நினைத்துக்கொண்டாராம்.

ஒரு வாரத்துக்குப் பின்னர் புதிய கையடக்கத் தொலைபேசியொன்றை வாங்குவதற்காக தமது காதலியுடன் கடைக்குப் புறப்பட்டுள்ளார். அப்போது காதலியின் கையடக்கத் தொலைபேசி ஒலித்துள்ளது. அதில் காணாமற்போன தொலைபேசியின் இலக்கம் பதிவாகியுள்ளது.

அப்போது காதலியின் கையிலிருந்த தொலைபேசியை வாங்கி அவர் பேசியுள்ளார். அதில் மீனவர் கிளென் கோவி என்பவர் பேசியுள்ளார். அந்த மீனவர், ''நான் பிடித்த மீனின் வயிற்றில் கையடக்கத் தொலைபேசி ஒன்று இருந்தது. அதில் உங்கள் தொலைபேசி இலக்கம் இருந்தது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

''எனவே நான் மீட்ட கையடக்கத் தொலைபேசி யாருடையது என தெரிந்தால் அவரிடம் ஒப்படைத்துவிடலாம். அதன் பொருட்டே அதில் பதிவாகியிருந்த இந்த இலக்கத்துக்குப் பேசினேன்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அன்றூ சியாட்டி குறிப்பிடுகையில், ''மீனின் வயிற்றுக்குள் போன பின்னரும் அந்த கையடக்கத் தொலைபேசி பாதிப்பு இல்லாமல் செயற்பட்டுள்ளது. இதுவும் ஓர் ஆச்சரியந்தான்'' எனத் தெரிவித்துள்ளார்.

## கினியா பிஷ்ஷாயு ஜனாதிபதி துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு



பிஷ்ஷாயு, மார்ச் 3

கினியா - பிஷ் ஷாயு ஜனாதிபதி ஜோவோ பெர்னார்டோ வியரா இராணுவத்திலிருந்து வெளியேற்றப்பட்ட வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, ஞாயிற்றுக்கிழமை மாலை தலைநகரான பிஷ்ஷாயுவிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில், கினியா - பிஷ்ஷாயு ஆயுதப் படைகளின் தலைவர் ஜெனரல் படிஸ்ட்டா டக்மி நா வாயுவும் கொல்லப்பட்டார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

குண்டுத் தாக்குதலில் தலைமையகக் கட்டடத்தின் ஒரு பகுதி தகர்ந்து விட்டது. ஐவர் காயமடைந்தனர் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள் .

மேற்கு ஐரோப்பிய நாடான கினியா - பிஷ்ஷாயு உலகிலேயே மிக வறிய நாடாகும். இங்கு அடிக்கடி புரட்சிகள் இடம் பெற்று வந்துள்ளன.

## ஆயுதங்களை கீழே போட...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரசாரத்திற்கான கேடயமாக சிறிலங்கா அரசு பயன்படுத்தி வருவதுடன், அவர்களை நிரந்தரமாக அகதிகளாக்கவும் முற்பட்டு வருகின்றது.

அரசு தனது அதிகளவான வளங்களை பயன்படுத்தி பெருமளவில் திட்டமிட்ட பிரசாரத்தினை படை நடவடிக்கைகளுடன் இணைத்து மேற்கொண்டு வருகின்றது. அரசியல் தீர்வு தொடர்பான சிறிலங்கா அரசு காண்பித்து வரும் அசிரத்தையையும், தற்போது மேற்கொள்ளப்படும் படை நடவடிக்கையையும் நோக்கும் போது ஒன்று மட்டும் உறுதியானது. அதாவது, படையினர் மேற்கொண்டு வரும் எல்லா நடவடிக்கைகளும் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்படுகின்றன என்பதுதான்.

கே.:போர் நடைபெறும் பகுதிகளில் இருந்து பொதுமக்கள் வெளியேற அனுமதிக்கப்பட வேண்டும் என சில நாடுகளும், ஐ.நா.வும் மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுத்து வருகின்றன. அதற்கான உங்களின் பதில் என்ன?

ப.:இவை எல்லாம் தமது பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்ற நடவடிக்கையை மெருகுபடுத்தும் வார்த்தைகள். ஜனநாயக வழிகளில் 1977ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை பிரகடனத்தின் மூலம் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக முன்மொழிந்த சுயாட்சியும், தமிழ் மக்களின் உரிமையுமே எமது நோக்கம்.

எனவே, பெருமளவில் தமிழ் மக்களை அவர்களின் வாழ் நிலங்களில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளுக்கு அனைத்துலக சமூகம் ஆதரவினையும், உற்சாகத்தினையும் வழங்கக்கூடாது. அனைத்துலக சமூகம் தொடர்ந்தும் மௌனமாக இருந்து கொண்டு தடை முகாம்களுக்கு நிதிகளை வழங்குவார்களாக இருந்தால் அது உண்மையாகவே இது ஒரு வரலாற்று பேரழிவும், தவறுமாகும்.

மிகவும் கொடூரமான அரசுகள் பலவந்தமாக பெருமளவில் வெளியேற்றப்பட்ட மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீண்டும் குடியேற்றியதாக உலகின் எந்தப் பகுதியிலும், எப்போதும் வரலாறு இல்லை. ஆனால், அனைத்துலக சமூகம் தமது சுருதியை மாற்றியுள்ள போதும் மீண்டும் பழைய முழக்கத்தையே தற்போதைய புதிய சூழலிலும் பயன்படுத்தி வருவது வருத்தமானது.

கே.:மீளக்குடியமர்த்துதல், மறுவாழ்வு திட்டம் என்ற பெயரில் சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் திட்டங்களுக்கு நிதி உதவிகளை நேரடியாக வழங்குவது தொடர்பாக அனைத்துலக கொடையாளி நாடுகளுக்கான உங்களின் கருத்துக்கள் என்ன?

ப.:கொழும்பு போன்ற பிரதேசங்களில் பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் உரிமைகளையோ, பாதுகாப்பையோ கூட அரசு ஏற்றுக்கொள்ள மறுத்து வருகின்றது. மக்களை மீள்குடியமர்த்துவதாக சிறிலங்கா அரசு அனைத்துலக சமூகத்திற்கு தெரிவித்து வரும் வாக்குறுதிகள் அவர்கள் கொடுக் கும் நிதி உதவி கள் கிடைக்கப் பெற்றதும், அதே வேகத்தில் காணா மல் போய்விடும்.

ஆழிப்பேரலை முகாமைத்துவ கட்டமைப்புக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பல தடவைகள் அனைத்துலக சமூகம் கோரிக்கை விடுத்து வந்திருந்தது. முன்னாள் அமெரிக்க அரச தலைவர் பில் கிளின்ரன் கூட இதனை மேற்கொண்டிருந்தார். ஒற்றுமையையும் அரசியல் தீர்வையும் பலப்படுத்தும் வழி இதுவென கருதப்பட்டது. ஆனால் நீதித் துறையை தவறாக பயன்படுத்தி அதனை சிறிலங்கா அரசு சீரழித்து விட்டது.

தற்போது கூட மக்கள் முன்னணி அரசில் அங்கம் வகிப்பவர்களும், அரச தலைவரின் சொந்த கட்சியில் இருப்பவர்களும் தாம் இராணுவத் தீர்வுக்கே ஆதரவுகளை வழங்குவோம் எனவும் அதிகார பரவலாக்கத்திற்கு அல்ல எனவும் தெரிவித்து வருகின்றனர்.

போரை நிறுத்தி, மக்களை தமது வாழ்விடங்களில் வாழ அனுமதித்து, அவர்களை சுயமரியாதையுடன் வாழ அனுமதிப்பதே உண்மையான மனிதாபிமானம். தமிழ் மக்களின் பிரச்சினைகள், சிறுபான்மை மக்களை அரசு நடத்தும் முறை, மனித உரிமை மீறல்கள் போன்றன தொடர்பான சிறிலங்கா அரசின் உண்மையான தோற்றத்தை உலகில் உள்ள மனிதாபிமான சமூகம் தாமதிக்காது உணர்ந்துகொள்ளும் என நாம் நம்புகின்றோம்.

கே.:மக்களை விடுதலைப் புலிகள் மனித கேடயங்களாக வைத்துள்ளதாக சிறிலங்கா அரசு தெரிவித்து வருகின்றதே.அதற்கான உங்களின் பதில் என்ன?

ப.:தமிழ் மக்கள் அவர்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் பிரச்சாரம் இது. இங்கு தமிழ் மக்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இங்கு தொடர்ந்து வாழவே விரும்புகின்றனர். சிறிலங்கா அரசு, ஐ.நா. மற்றும் அனைத்துலக நாடுகள் போன்றவை தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதாக தமது அறிக்கைகளில் தெரிவித்தவாறு அவர்களை அவர்களின் வாழ்விடங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றி இராணுவத்தினரால் நிர்வகிக்கப்படும் முட்கம்பிகளுடன் கூடிய முகாம்களுக்குள் அடைப்பதற்கு முயற்சிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

யாழ்.குடநாட்டில் இருந்து வெளியேற்றப்பட்ட தமிழ் மக்கள் ஒரு தசாப்தத்துக்கு மேலாக அரசு ஆக்கிரமித்துள்ள இடங்களில் மீளக்குடியேறுவதற்காக காத்திருக்கின்றனர். அண்மையில் கிழக்கிலும் இது நிகழ்ந்துள்ளது. கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையின் பின்னர் சம்பூரில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் பல இடங்கள் தமிழ் மக்கள் செல்ல முடியாத பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் திட்டமிட்ட முறையில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன.

இடம்பெயர்ந்து செல்லும் மக்களை தனக்கு ஆதரவான துணை இராணுவக்குழுவினரை பயன்படுத்தி அரசு மிரட்டி வருகின்றது. இதனை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணையம் இந்த வருடத்தின் தொடக்கத்தில் தெரிவித்திருந்தது. கிழக்கில் மக்கள் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அது தெரிவித்திருந்தது.

இவ்வாறான ஆபத்தான நிலைமையில் தமிழ் மக்கள் இந்த தடை முகாம்களுக்குள் விருப்பத்துடன் செல்ல வேண்டுமா? தமது பாரம்பரிய வாழ்விடங்களை கைவிட்டு தமிழ் மக்கள் வெளியேற வேண்டும் என ஐ.நாவும், ஏனைய நாடுகளும் எதிர்பார்க்கின்றனவா? வெளியேறும் மக்களை தடை முகாம்களுக்குள் அடைப்பதற்கு அவை முயற்சிக்கின்றனவா? இந்த முயற்சி தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பத்துடன் தான் மேற்கொள்ளப்படுகின்றதா?

பயங்கரவாதத்தின் மீதான போரை மேற்கொண்டு மக்களை விடுவிக்கின்றோம் என்ற போர்வையில் திட்டமிட்ட படுகொலைகளையும், இனவாத தாக்குதல்களையும், பயங்கரமான வன்முறைகளையும் அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது. மனித கேடயங்களாக பொதுமக்களை பயன்படுத்துவதாக போலியாக அரசு கூறியவாறு அவர்களை வெளியேற்றவும் முற்றாக அழிக்கவும் முயற்சித்து வருகின்றது. இது இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக கடந்த 61 வருடங்களாக அரசாங்கங்கள் மேற்கொள்ளப்படும் இன அழிப்பு நடவடிக்கையாகும்.

### படையெடுப்புக்கு இந்தியா ஆசீர்வாதம் வழங்குகிறது

கே.:விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அழைப்பை பயன்படுத்தி மக்களை வெளியேற்றுமாறு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தது தொடர்பாக உங்கள் கருத்து என்ன?

ப.:மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு முன் வைக்கப்பட்ட இந்த போர் நிறுத்த கோரிக்கையை, தமக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என சிறிலங்கா அரசு, ஏற்கெனவே நிராகரித்து விட்டது.

தமிழ்நாடு தூத்துக்குடியில் பிரணாப் முகர்ஜி இதனை சொல்லியிருப்பதை அரசியல் அழுத்தத்தால் சொல்லப்பட்ட ஒரு விடயமாகவே கொழும்பு பார்க்கின்றது.

அத்தோடு, மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான ஒரு போர் நிறுத்தம் தொடர்பாக இந்தியா தொடர்ந்து சொல்லி வருவதை, ஒரு தற்காலிக நடவடிக்கையாகவும், தமிழர் தாயகம் மீதான சிறிலங்காவின் படையெடுப்பக்கு வழங்கப்படும் ஓர் ஆசீர்வாதமாகவுமே நாம் கருதமுடியும்.

அத்தோடு, பிரணாப் முகர்ஜியின் கருத்துக்கு பதில் வழங்கியிருக்கும் சிறிலங்கா அரசு, விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போடுவதே ஓர் போர் நிறுத்தத்தை நோக்கி இட்டுச்செல்லும் என்று சொல்லியிருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

ஆனால், ஆயுதங்களை கீழே போடுவதற்கான எந்த கோரிக்கையையும் நாம் நிராகரிக்கின்றோம். ஏனெனில், இந்த ஆயுதங்கள் எமது அரசியல் போராட்டத்தின் கருவிகள் மட்டுமன்றி, அவையே எமது மக்களின் பாதுகாப்பு கவசங்களுமாகும்.

இந்தியா இப்போது, போரை முடிவுக்குக் கொண்டு வந்து, மக்களின் துன்பங்களைப் போக்கி, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒர நிரந்தரத் தீர்வு காணவே சிறிலங்காவை வலியுறுத்த வேண்டும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# அரசமைப்பு சீர்திருத்த சபைக்கு ஐந்து உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றுக்கு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 3

அரசமைப்புச் சீர்திருத்த சபைக்கு ஐவர் கொண்ட உறுப்பினர்களின் விவரங்களை நேற்று உயர்நீதிமன்றுக்கு சட்டமா அதிபர் சமர்ப்பித்துள்ளார்.

சீர்திருத்தசபைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை என்பதை எதிர்த்து பேராசிரியர் சுமன ஸ்ரீ ஜெயகே உள்ளிட்ட சிலரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நேற்று தொடங்கிய போதே அவர் இதனைக் கூறினார்.

பிரதமர், எதிர்க்கட்சித் தலைவரின் இணக்கத்துடன் முன்னாள் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் நிமால் செனவிரட்ண, முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்கேஸ்வரன், ஊடகவியலாளர் சிவகுமார் நடேசன், பேராசிரியர் ஷெரீப் டீன், கலாநிதி ஜெயதேவ உயங்கொட ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஆறாவது உறுப்பினராக மொறட்டுவ பல்கலைக் கழக உபவேந்தர் பரீசீலிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர்களது பெயர்கள் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டு இதன் முன்னேற்றம் குறித்து எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை நீதிமன்றுக்கு அறிவிக்கவேண்டும் என உயர்நீதிமன்ற நீதியரசர் சரத்என் சில்வா தலைமையிலான மூவர் கொண்ட ஆயம் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது. (1-6)

# ஈழத்தமிழருக்காகத் தமிழகத்தில் தீக்குளித்த விஜயகாந்த் கட்சியின் தொண்டர் மரணம்

சென்னை, மார்ச் 3

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து, தீக்குளித்து உயிருக்கு ஆபத்தான நிலையில் வேலூர் அரச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த விஜயகாந்தின் கட்சியைச் சேர்ந்த சீனிவாசன் நேற்றுப் பிற்பகல் பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்நிலையில் கடந்த மாதம் 26 ஆம் திகதி இரவு 11 மணியளவில், வல்லப்பட்டில் உள்ள தன் வீட்டிற்கு வெளியே வந்த சீனிவாசன், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தீக்குளிக்கப் போகிறேன் என அறிவித்து விட்டு, உடல்மீது மண் எண்ணையை ஊற்றித் தீயிட்டுக் கொண்டார்.

உடல் கருகிய நிலையில் வாணியம்பாடி அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

தீக்குளித்த சீனிவாசனைக் காப்பாற்ற வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வைத்தியர்கள் போராடி வந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை பகல் 3 மணியளவில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். (சி)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் கட்டம் ஏப்.23 இலும் மூன்றாம் கட்டம் ஏப். 30 இலும் நான்காம் கட்டம் மே 7 இலும் ஐந்தாம் கட்டம் மே 13 இலும் மொத்தம் ஐந்து கட்டங்களாக வாக்குப் பதிவு இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குகளை எண்ணும் பணிகள் மே 16 ஆம் திகதி ஆரம்பமாகும்.

தமிழகத்தில் மே 13 ஆம் திகதி வாக்குப்பதிவு இடம்பெறவிருக்கின்றது.

தேர்தல்கள் முடிவடைந்து புதிய அரசு ஜூன் 2 ஆம் திகதி பதிவி ஏற்கும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

(மற்றொரு செய்தி 14 ஆம் பக்கத்தில்)

## பொதுநலவாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றத்தைக் காணுமாறு வலியுறுத்த வேண்டு மென அவர் தெரிவித்துள்ளார்.

மோதல்களிலிருந்து தப்பியோடும் பொதுமக்கள் இரு தரப்பிலிருந்தும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என அவர் மேலும் கூறியுள்ளார்.

தப்பியோடும் பொதுமக்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொள்ளும் அதேவேளை, அரசும் தாக்குதலை மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

''இலங்கை அரசின் செயற்பாடுகள் மற்றும் மனித உரிமை விடயங்களில் மோசமான நிலைமைக்காக அந்த அரசைப் பொறுப்பாளியாக்க வேண்டும். அதற்காக பொதுநலவாய அமைச்சர்கள் மாநாட்டில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கப் படவேண்டும்'' - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## பாதுகாப்பு வலய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவில் போரில் சிக்குண்டுள்ள 2 லட்சம் மக்களையும் யு.எஸ்.பசுபிக் கட்டளைப் பிரிவின் உதவியுடன் வெளியேற்றி இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கும் திட்டம் ஒன்று குறித்து அறியவருகிறது. அந்தத் திட்டத்துக்கு துணை போக வேண்டாம் என்று தயவுடன் கேட்டுக்கொள்கிறோம் - என்று வாஷிங்ரனில் இயங்கும் சிறிலங்காவில் சமத்துவத்துக்கும் நிவாரண உதவிக்குமான மக்கள் இயக்கம் - 'பேர்ள்' நேற்று விடுத்த அறிக்கையில் கேட்டுள்ளது.

இரண்டு லட்சம் மக்களும் வாழ்வதற்கு ஏற்ற வகையில் பாதுகாப்பு வலயத்தின் பிரதேசத்தை விஸ்தரித்து மக்களுக்கு போதிய பாதுகாப்பு கிடைக்கும் வண்ணம் தொண்டர் நிறுவனங்கள் அங்கு பணி புரியவும் ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை கண்காணிப்பாளர்கள் தாராளமாக சென்றுவரவும் அனுமதிக்க வசதி செய்யப்படவேண்டும் - என்றும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

போரில் சிக்கித் தவிக்கும் மக்கள் நெருக்குண்டு வசிக்காமல் 'மூச்சு விடும்' வகையில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்றுக்கொள்ளுமாறு அமெரிக்கா இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் கேட்கப்பட்டுள்ளது.

போரில் சிக்குண்டுள்ள மக்களை அவர்களின் இடங்களில் இருந்து வெளியேற்றி இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைப்பது அந்த மக்கள் தமது மரணத்துக்குரிய பிடியாணையில் ஒப்பம் இடுவதுக்கு நிகராகும். அத்தோடு அரசின் இன அழிப்பை நிறைவேற்றுவதாகவும் அது அமையும் என்று 'பேர்ள்' அமைப்பின் பேச்சாளர் றோஷா ஹெப்ஸர் கருத்து வெளியிட்டார்.

'பேர்ள்' அமைப்பின் அறிக்கையை இந்திய இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ளது. (அ)

# கருணாவின் இணைப்புச் செயலர் மீது மட்டு. இருதயபுரத்தில் வைத்துச் சூடு!

கொழும்பு, மார்ச் 03

மட்டக்களப்பு நகருக்கு வெளியே இருதயபுரம் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளீதரனின் இணைப்புச் செயலாளர் பயணம் செய்த வாகனம் மீது ஆயுதாரிகளால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த 18 வயதுடைய கணபதிப்பிள்ளை துசீகரன் என்பவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இணைப்புச் செயலாளர் நியூட்டனுடன் பயணம் செய்து கொண்டிருந்த வேளை இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய ஆயுததாரிகள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

# கிழக்கு மாகாண அமைச்சர் கலந்துகொண்ட வைபவத்தில் திடீர் துப்பாக்கி வேட்டுச்சத்தம்

மட்டக்களப்பு காத்தான்குடியில் நேற்று நண்பகல் கிழக்கு மாகாண அமைச்சர்கள் இருவர் கலந்து கொண்ட வைபவமொன்றின்போது திடீரென கேட்ட துப்பாக்கி வேட்டுக்களினால் சில நிமிடங்கள் அங்கு பதற்றமான நிலை காணப்பட்டது.

அமைச்சர் ஒருவரின் மெய்க்காப்பாளருடைய துப்பாக்கி தற்செயலாக வெடித்ததாலேயே இந்தப் பதற்ற நிலை காணப்பட்டது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாகாண சுகாதார சேவைகள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மற்றும் விவசாய அமைச்சர் துரையப்பா நவரட்ண ராஜா ஆகியோர் காத்தான்குடி கமநல சேவை நிலையத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அடிக்கல்லை அமைச்சர்கள் வைபவ ரீதியாக நட்டுக் கொண்டிக்கையில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன என்று பிரதேச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் உடன் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அமைச்சர் துரையப்பா நவரட்ணராஜாவின் பாதுகாப்பு பொலிஸ் அதிகாரியின் துப்பாக்கித் தற்செயலாக வெடித்தது என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்தது. அவரின் துப்பாக்கியிலிருந்து பாய்ந்த 4 வெற்றுத் தோட்டாக்கள் அந்த பகுதியில் கண்டெடுக்கப்பட்டன.

அவரது துப்பாக்கி உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டதோடு மேலதிக விசாரணைக்கு அவர் உட்படுத்தப்பட்டு வருகிறார் என பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. துப்பாக்கித் தோட்டாக்கள் மேல் நோக்கிப் பாய்ந்தமையால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

8 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் பலர் கைதாகி விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக உறவினர்கள் பிரதி அமைச்சர் இராதா கிருஸ்ணனிடம் முறையிட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை மொறட்டுவை, சொய்சாபுர ஆகிய இடங்களிலும் நேற்று தேடுதல் இடம் பெற்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகுகள் சேதங்களுடன் திரும்பிச் சென்றன என்று களமுனைத் தகவல்களை மேற்கோள்காட்டி படைத்தரப் பில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

அதேவேளை அப்பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை கடுஞ் சமர் இடம்பெற்றுள்ளது எனவும் படைத் தரப்புத் தெரிவித்தது.

இச்சமரில் விடுதலைப் புலிகளுக்குக் கடும் இழப்புகள் ஏற்பட்டன என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலை கடற்புலிகளின் தளபதி சூசை மற்றும் லோறன்ஸ் ஆகியோரே நெறிப்படுத்தினர் என்றும் படைத் தரப்பு வெளியிட்ட செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் இந்த இரு சமர்களிலும் படைத் தரப்புக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து எந்த வித தகவல்களும் வெளியாகவில்லை.

அதேசமயம், புதுக்குடியிருப்பு, சாலைக்கு தெற்கே கேவில் மற்றும் பற்றிக்கரைப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளுக்கும், 53 ஆவது, 55 ஆவது மற்றும் 58 ஆவது படைப்பிரிவுகளுக்கும் இடையே இடம்பெற்ற கடுஞ் சமரில் இராணுவத்தினர் பலர் காயமடைந்தனர் என படைத்தரப்பு நேற்றுச் செய்தி வெளியிட்டிருந்தது.

அதேவேளை, விசுவமடுப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதலில் பெருந்தொகையான ஆயுதங்களை மீட்டனர் என்றும் படைத்தரப்புச் செய்தியில் குறிப்பிட்டிருந்தது.

இதே வேளை அம்பலவன் பொக்கணையில் இடம்பெற்ற தேடுதலின் போது புலிகளின் அதி சக்தி வாய்ந்த தொலைக்காட்சி ஒலிபரப்பு நிலையம் ஒன்றை இராணுவத்தினர் கண்டு பிடித்துள்ளதாகவும் அங்குள்ள பொருள்கள் அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## யாழ்.- கண்டி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ் வீதியினூடாக பலாலியில் இருந்து 40 பஸ்களில் 400 இராணுவத்தினர் விடுமுறையில் தமது வீடுகளுக்கு செல்வதற்காக அனுராதபுரம் நோக்கி சென்றனர். அதேவேளை 40 பஸ்களில் அனுராதபுரத்தில் இருந்து 600 இராணுவத்தினர் பலாலி நோக்கி சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஏ-9 வீதி திறக்கப்பட்டதையொட்டி அனுராதபுரம், ஓமந்தை, ஆனையிறவு, பலாலி ஆகிய இடங்களில் விசேட வைபவங்கள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-6)

## யுத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால் யுத்தத்தை நிறுத்த வேண்டிய தேவையே ஏற்படாது என போகொல்லாகம பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பது விடுதலைப் புலிகள் வடக்கு, கிழக்கில் தம்மை மீண்டும் பலப்படுத்தவே உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தை தற்காலிகமாக இடைநிறுத்துவது எந்த நன்மையையும் கொண்டு வரப் போவதில்லை. விடுதலைப் புலிகள் தம்மைப் பலப்படுத்தவே இது உதவும் என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கை அரசு மனிதாபிமான நலன்களையும் யுத்தநிறுத்தத்துக்கு அழைப்பு விடுப்பவர்களின் கரிசனைகளையும் கருத்தில் கொள்ளும் என்றும் போகொல்லாகம பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் பகுதிகளிலிருந்து வந்தவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் காணப்படும் கட்டுப்பாடுகளையும் வெளிவிவகார அமைச்சர் நியாயப்படுத்தியுள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள போகொல்லாகம பொதுமக்கள் தமது சொந்தப் பகுதிகளில் தகுந்த நேரத்தில் மீளக் குடியமர்த்தப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சில நாள்களுக்கு முன்னர் பாதுகாப்புச் சபைக்கு ஆற்றிய உரையில் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான தலைவர் ஜோன் ஹோம்ஸ் முகாமில் வசிப்பவர்களின் நடமாட்டத்திற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாதவையெனத் தெரிவித்திருந்தார்.

இந்தியா கடந்த சில நாள்களாக மோதலை நிறுத்துமாறு இலங்கை அரசைத் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி)

அறிவித்தல்
Logic வகுப்புகள் அனைத்தும் வழமையான நேர அட்டவணைப்படி புதன்கிழமை முதல் நடைபெறும்.
NEC
Clock Tower Road, Jaffna

பொது உளச்சார்பு (APTITUDE)
திங்கள், செவ்வாய், வியாழன் 1 மணி தொடக்கம் 3 மணி வரை வகுப்புக்கள் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக நடைபெறும்.
20 மணித்தியால வகுப்பிற்கு கட்டணம் 600/=

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம்
52,ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L DAY CLASS
புதிய பிரிவு ஆரம்பம்:
05.03.2009 [7.15] வியாழன்
Tam. - திரு.குழந்தை (9-10)
Hic. - திரு.N.T.தரன் (8-9)
Log. - திரு.S.S.சந்திரன் (10-11)
Geo. - திரு.சுரேன் (10-11)
Piusa. - திரு.ஸ்ரீரங்கநாத் (7.30-8.30)
Chri. - திரு.நூட் (8-9)
Dram. - திரு.மயூரன் (10-11)
Hist. - திரு.S.S.தீஸ் (10-11)
Eco. - திரு.B.சஜீதரன் (2-3)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

LOGIC
கமல்
வகுப்புக்கள் ஆரம்பம்
04.03.2009 புதன்
யூனிவேர்சல்

DAY CLASS
PAPER CLASS
நாடக அரங்கியல்
ம.ம.மயூரன்
ஆரம்பம்: 04.03.2009
புதன் 4.30 p.m
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
## பதிவு செய்வோருக்கு கற்கை கட்டண சலுகை
## MS Office ## DTP
* Accounting * English * VB.net
## Hardware * Web Developing
* Video Editing *AutoCAD
International Courses...
## MCP ## MCSE ## MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 1,3 & 5
புதிய பிரிவுகள் ஆரம்பம் 04.03.2009 08.00AM



மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில்,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS
Supported By

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

நற்சிந்தனை
உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக் காதே. அப்படி நினைப்பது ஆன்மீகத்துக்கு முற்றிலும் முரண்பட்டது

க.பொ.த.உயர்தர
கல்விச்சுடர்
03.02.2009
Special Guidance For A/L 2009&2010

க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும்
கல்வி இணைப்பிதழ்

**உயர்தர மாணவர்களே**

உலக சந்தையில் பெற்றோலிய எரிபொருட் களுக்கான விலை மட்டங்கள் உயர்ந்தும்-தாழ்ந்தும் ஸ்திரமற்றும் காணப்பட்டு வந்ததன் காரணமாக, இலங்கை பெற்றோலிய எரிபொருள் கொள்வனவு மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை இலகுபடுத்தும் மற்றும் இலாபகரமானதாக ஆக்கிக் கொள்ளும் நோக்கில் வங்கித்தரப்புக்களுடன் "ஹெட் ஜிங்" என்ற பெயரில் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொண்டமை சகலரும் அறிந்த ஒரு விடயமேயாகும்.

உலக வர்த்தக சந்தையில் அண்மைக்காலமாகப் பெற்றோலிய எரிபொருட்களின் விலை மட்டத்தில் திடீர் சரிவு ஏற்பட்ட போதிலும் அதனால் கிட்டத்தக்க இலாப வாய்ப்பு, குறிப்பிட்ட அந்த "ஹெட்ஜிங்" ஒப்பந்தம் காரணமாக இந் நாட் டின் பொதுமக்களுக்குக் கிட் டும் வாய்ப்பு கை நழுவிப் போக நேர்ந்துள்ளது.

இந்த "ஹெட் ஜிங் "ஒப்பந்தம் தொடர்பான ஓர் அறிமுக விளக்கம் கடந்த 03.01.2009 இல் உயர்தரப் பொருளியல் மாணவர்களுக்காக இப்பகுதியில் பிரசுரிக்கப்பட்டது. அதன் பின்பு ஏற்பட்ட இக்கட்டு நிலையும் பொருளாதாரப் பாதிப்புக்களும் கடந்த முதலாம் திகதி "லங்காதீப "பத்திரிகையில் சிங்களத்தில் கட்டுரையாக வெளிவந்தது. தமிழ் மாணவர்களின் நலன் கருதி அதன் மொழிபெயர்ப்பு இங்கு வெயிடப்பட்டுள்ளது.

# ஹெட்ஜிங் குறித்த பிரச்சினை மீண்டும் தலையெடுக்குமா?

சாதாரணமாக நீதிமன்றமொன்று, குறிப்பிட்டதொரு வழக்குத் தொடர்பாகத் தான் வழங்கிய தீர்ப்பு தவறானதெனக் காரணம் முன்வைக்கப்பட்டாலும் கூட அவ்வாதம் சரியானதே எனத் தான் ஏற்றுக்கொண்டால் மட்டுமே தனது முன்னைய தீர்ப்பை மாற்றிக்கொள்ள முன்வரும். இருந்தபோதிலும் இந்நாட்டின் உச்ச நீதிமன்றமெனக் கொள்ளப்படும் உயர்நீதிமன்றம் மேற்குறிப்பிட்ட நடைமுறைக்கு முற்றிலும் மாறுபாடான காரணத்துக்காக

தான்முன்னைய வழக்குகள் தொடர்பாக வழங்கியிருந்த கட்டளைகளை ரத்துச் செய்து, குறிப்பிட்ட விடயம் தொடர்பாக மன்றில் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் தொடர்பான விசாரணைகளையும் முடித்துக் கொண்டுள்ளது.

### கைவிடப்பட்ட சம்பவம்

இலங்கைப் பெற்றோலிய எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் 'ஹெட்ஜிங்' உடன்படிக்கை என அடையாளப்படுத்தப்படும் எதிர்கால விலை மட்ட நிர்ணயத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கான செயற்பாடுகள் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தனது முன்னைய தீர்ப்பை கைவிட்ட சம்பவமே அதுவாகும். முழு நாட்டினதும் கவனத்தை ஈர்த்திருந்த குறிப்பிட்ட அந்த ஒப்பந்தத்துக்கு எதிரான மனுமீதான விசாரணைகளின் பின்னர் உயர்நீதிமன்றம் குறிப்பிட்ட அந்த ஒப்பந்தம் செல்லுபடியற்றதாக்கப்பட வேண்டுமென முதலில் தீர்ப்பளித்திருந்தது. அத்துடன் இலங்கைப் பெற்றோலிய எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் கணக்காளர் ஆகியோரை அவர்களது பதவியிலிருந்து இடைநிறுத்தி வைக்குமாறும் தனது தீர்ப்பில் மேலும் தெரிவித்திருந்தது. அத்துடன் குறிப்பிட்ட அந்தஒப்பந்தத்துக்கு அமைய வங்கிகளுக்குச் செலுத்தி முடிக்கப்பவேண்டியிருந்த நிதிக் கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதை நிறுத்திவைக்க வேண்டுமெனவும், அத்துடன் பெற்றோல் லீற்றரொன்றுக்கான விலை நூறு ரூபாவாக விற்பனை செய்யப்படவேண்டுமெனவும் தீர்ப்பு வழங்கியிருந்தது.

## சம்பந்தப்பட்ட வெளிநாட்டு வங்கிகள் நீதிமன்றத்தின் உதவியை நாடும் நிலை

### அரச தரப்பின் பொறுப்பு

இவ்விதம் பெற்றோல் விலையைக் குறைக்குமாறு உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவை நிறைவேற்றிவைக்க வேண்டியது நாட்டின் நிறைவேற்று அதிகாரத்தரப்பின் பொறுப்பே ஆகும். ஆனாலும் குறிப்பிட்ட அந்தப் பொறுப்பை நீதிமன்றத்தின் உத்தரவுக்கமையச் செயற்படுத்த நிறைவேற்று அதிகாரத்தின்படி எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. கடந்த ஜனவரி 27 ஆம் திகதி மேற்குறித்த விடயம் தொடர்பான மனு மீதான விசாரணை மீளவும் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னர் தான் ஆரம்பத்தில் வழங்கியிருந்த உத்தரவை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உயர்நீதிமன்றம் மற்றுமொரு தடவை நிறைவேற்று அதிகாரத் தரப்புக்கு உத்தரவு பிறப்பித்த போதிலும், உயர்நீதிமன்றத்தின் அத்தகைய அறிவுறுத்தல் நிறைவேற்று அதிகாரத்தரப்பால் அலட்சியம் செய்யப்படும் வகையில் அது தொடர்பாக எவ்வித செயற்பாடும் நிறைவேற்று அதிகாரத்தரப்பால் மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக விரக்தியுற்ற மனுதாரர் தரப்புகள் தமது குறிப்பிட்ட அந்த விடயம் தொடர்பான மனுக்களை மீளப் பெற்றுக்கொள்ள விருப்பம் வெளியிட்டதன் காரணமாக உயர்நீதிமன்றம் தனது உத்தரவுகளையும் ரத்துச்செய்து

மேலோட்டமாக அவதானிப்பின், உயர் நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்று அதிகாரத் தரப்பு நடைமுறைப்படுத்தவில்லை. அதேவேளை உயர்நீதிமன்றமோ இவ்விடயம் தொடர்பான தனது முன்னைய உத்தரவுகள் அனைத்தையும் இரத்துச் செய்து கொண்டதையும் தெளிவாக உணரமுடிந்தது. இதுவே இவ்விடயத்தில் மேலோட்டமாகத் தென்படும் நிலைப்பாடாகும். இருந்தபோதிலும், உயர்நீதிமன்றம் இவ்விடயம் தொடர்பான தனது உத்தரவுகளை விலக்கிக்கொண்டதையடுத்து, 'ஹெட்ஜிங்' உடன்பாட்டுக்கு அமைய பெருந்தொகை நிதியை அரசு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய இக்கட்டு நிலைக்கு அரசு உட்பட நேர்ந்துள்ளது.

### அரசுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டு நிலை

அந்த வகையில் இதுவிடயத்தில் அரசு 80 கோடி டொலர் வரையிலான நிதியை வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய இக்கட்டு நிலைக்கு உள்ளாக நேர்ந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அளவுக்குப் பெரிய தொகையான நிதியை அரசு வங்கிகளுக்குச் செலுத்த நேர்வது அரசைப் பெரும் அசௌகரியத்துக்கும் சிக்கலுக்கும் உள்ளாக்கி விடுமென்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. குறிப்பிட்ட 'ஹெட்ஜிங்' ஒப்பந்த நடைமுறை, பெற்றோலிய எரிபொருட்களின் திடீர் விலை உயர்வுகள் காரணமாக நாடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ ஏற்படக்கூடிய நட்டங்கள் மற்றும் அதன் காரணமாக எழத்தக்க அசௌகரிங்களைக் குறைத்துக்கொள்ளும் நோக்குடனேயே மேற்கொள்ளப்படுகிறது. அது உலகமட்ட நாடுகளில் பொதுவாக நடைமுறைப்படுத்தப்படும் ஒரு முறையாகும். இருந்தபோதிலும் இவ்விடயம் தொடர்பான அணுகல்கள், அத்துறைசார் ஆற்றலும் அனுபவமும் கொண்டுள்ள ஆலோசகர்களது ஆலோசனைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படவேண்டியதொன்றாகும். அதேபோன்று, அத்தகையதொரு ஒப்பந்தம் தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அது தமக்கு இலாபகரமானதாக அமையும் விதத்தில் தயாரித்துக்கொள்ள கொள்வனவு மேற்கொள்ளும் தரப்பு கவனம் செலுத்தியாக வேண்டியதும் அவசியமானதாகும்.

### அஜந்த டி மெல்லின் வாதம்

இலங்கைப் பெற்றோலிய எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் தலைவராகப் பதவிவகித்த அஜந்த டி மெல் என்பவரே குறிப்பிட்ட இந்த ஒப்பந்தம் தயாரிக்கப்படுவது தொடர்பாகத் தம்மை முன்னிலைப்படுத்திச் செயற்பட்ட பிரமுகராவார். குறிப்பிட்ட இந்த ஒப்பந்தம் உலக சந்தையில் பெற்றோலிய எரிபொருட்களுக்கான விலைமட்டங்களில் ஏற்படும் உயர்வுகளின்போது அதன் காரணமாக ஏற்படத்தக்க அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே தயாரிக்கப்பட்ட தொன்றாகும் என்பதே அஜந்த டி மெல்லின் வாதமாகும். இருந்தபோதிலும் இடைப்பட்ட காலத்தில் உலக சந்தையில் பெற்றோலிய எரிபொருட்களுக்கான விலை மட்டங்களில் ஏற்பட்ட திடீர் பெரும் சரிவு காரணமாகக் கிட்டவிருந்த இலாப வாய்ப்பை இந்நாட்டின் சாதாரண பொதுமக்கள் அனுபவிக்க இயலாத நிலை உருவானமைக்கு குறிப்பிட்ட இந்த 'ஹெட்ஜிங்' ஒப்பந்தம் இடையூறாக அமைந்தமையே இந்த விடயம் இந்த அளவுக்கு சூடு பிடிக்கக் காரணமாக அமைந்தது. மற்றொரு வகையில் குறிப்பிடுவதானால் உலக சந்தையில் பெற்றோலிய எரிபொருட்களுக்கான விலை மட்டங்கள் குறைவடைந்து சென்றமைக்குச் சமமான விதத்தில் உள்நாட்டு வர்த்தக சந்தையில் அவற்றுக்கான விலை மட்டங்கள் குறைவடையவில்லை. இவ்விடயம் தொடர்பாக பலதரப்புக்களும் அக்கறை காட்டி அலசி ஆராய்ந்தன. அதன் முடிவில் இலங்கைப் பெற்றோலிய எரிபொருள் கூட்டுத்தாபனத்தால் இந்நாட்டின் சில வங்கிகளுடன் செய்துகொள்ளப்பட்ட 'ஹெட்ஜிங்' ஒப்பந்தம் காரணமாகவே அரசால் அவ்விதம் எரிபொருட்களின் விலை மட்டங்களைக் குறைத்துக்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது என்ற இரகசியம் வெளிச்சத்துக்கு வந்தது.

### வரையறுக்கப்பட்டிருந்தவை

அதாவது, விலை அதிகரிப்பின்போது கிட்டும் தற்காப்பு, விலை குறைவடையும் போது கிட்டுவதில்லை என்ற உண்மை உணரப்பட்டது. அந்த வகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, குறிப்பிட்ட இந்த 'ஹெட்ஜிங்' ஒப்பந்தம் உண்மையில் நாட்டுக்குச் சாதகமான பலாபலனை ஈட்டித்தர இயலாத - எவ்விதத்திலும் நாட்டுக்கும் நாட்டு மக்களுடைய சுபீட்சத்துக்கும் ஒவ்வாததொரு ஒப்பந்தமே என்ற தீர்மானத்துக்கே வரமுடிந்தது. அதாவது, குறிப்பிட்ட இந்த தற்காப்பு நோக்கிலான ஒப்பந்தப்படி ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை மட்டம் 120 அமெரிக்க டொலர்கள் தொடக்கம் 145 அமெரிக்க டொலர்கள் வரையிலேயே நிலவத்தக்க வகையில் வரையறுக்கப்பட்டிருந்தது. உலக வர்த்தக சந்தையில் பெற்றோலிய எரிபொருட்களுக்கான விலை மட்டம் குறிப்பிடப்பட்ட டொலர்கள் இடைவெளிக்குள் நிலவுமாயின், அந்த விலை மட்டத்திலேயே எம்மால் எரிபொருள் வகைகளை கொள்முதல் செய்ய வாய்ப்பிருக்கும்.

அதேவேளை, அந்த விலை மட்டம் 145 அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்டுச் செல்லும் வேளையில் இரண்டு மாதகால அவகாசத்துக்கு குறிப்பிட்ட 145 அமெரிக்க டொலர்கள் விலைக்கே பெற்றோலிய எரிபொருட்களைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பு இலங்கை அரசுக்குக் கிட்டும். அவ்வித கொள்வனவின்போது அதிகமாகச் செலுத்தப்பட வேண்டியுள்ள அதிகரித்த தொகையை 'ஹெட்ஜிங்' ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள வங்கிகளே செலுத்திக் கணக்கைச் சமன்செய்ய ஒப்பந்தம் வழிவகுத்துள்ளது. இருந்தபோதிலும், மேற்படி ஒப்பந்த விதிகளின்படி, உலக சந்தையில் பெற்றோலிய எரிபொருட்களுக்கான விலை மட்டம் பீப்பாய் ஒன்றுக்கு 120 அமெரிக்க டொலருக்குக் குறையும் சந்தர்ப்பத்தில் - அது எவ்வளவு பெரிய தொகையால் குறைவடைந்தாலும்கூட - இலங்கை அரசு ஒரு வருடகாலத்துக்கு பீப்பாய் ஒன்றுக்கான எரிபொருட்களுக்கான விலையாக 120 அமெரிக்க டொலர்களையே செலுத்தியாகவேண்டும். அதற்கமைய பீப்பா ஒன்றுக்கான குறைந்தமட்ட விலையிலிருந்து 120 டொலர்கள் வரையாகும் விலையைப் பெற்றோலிய எரிபொருள் கூட்டுத்தாபனம் வங்கிகளுக்குச் செலுத்தியாக வேண்டியுள்ளது.

## பொருளியல் மாணவர்களுக்கான சிறப்புக் கட்டுரை

### தாக்கல் செய்யப்பட்ட இரு மனுக்கள்

குறிப்பிட்ட 'ஹெட்ஜிங்' ஒப்பந்தம் இரண்டாண்டுகள் காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தபோதிலும், கடந்த காலத்தில் உலகச் சந்தையில் எரிபொருட்களின் விலைமட்டங்கள் வேகமாகக் கீழிறங்கி வந்த நிலை காரணமாகவே இது பிரச்சினைக்குரிய விவகாரமாகத் தலையெடுத்தது. அந்தவகையில், மசகு எண்ணெய் பீப்பாயொன்றுக்கான விலைமட்டம் 35 அமெரிக்க டொலர்கள் வரையில் கீழிறங்கிச் சென்றது. ஆனாலும் குறிப்பிட்ட 'ஹெட்ஜிங்' ஒப்பந்தம் நடைமுறையில் இருப்பதற்கு அமைய அந்த இலாபகரமான விலை மட்டக்குறைவு இந்நாட்டு மக்களுக்குக் கிட்டுவதற்கு வாய்ப்பில்லை. அதன் காரணமாக இலங்கையின் உள்நாட்டு எரிபொருள் வர்த்தகச் சந்தையில் எரிபொருட்களின் விலை மட்டங்கள் குறையவும் மாட்டாது. (6 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

**02. அரசைப்பற்றியதாராண்மைவாதக் கோட்பாட்டைப் பின்வருவனவற்றோடுதொடர்பு படுத்திப் பரிசீலனை செய்க.**

**1) தலையிடா அரசு:**

தாராள அரசியல், பொருளாதாரச் சிந்தனையில் தாக்கத்துக்குட்பட்டு 18ஆம் நூற்றாண்டில் இருந்து 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் செயற்பட்ட அரசு முறைமையே தலையிடா அரசு என்று அழைக்கப்படுகிறது. பல நூற்றாண்டு காலமாக ஐரோப்பாவில் நிலவிய சர்வாதிகார முடியாட்சிகள் ஜனநாயக ஆட்சிகளாக மாற்றமுறும் செயன்முறை 17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியாகும்போது ஆரம்பமாகியதுடன் 1688இல் இங்கிலாந்தில் நிகழ்ந்த ''மாண்புமிகு புரட்சி'' அதன் முதற் கட்டம் ஆகும். 1776இல் அமெரிக்க சுதந்திரப்போர் வெற்றிபெற்றதன் மூலம் ஜனநாயக ஆட்சி முறையை நோக்கிய செயன்முறை வேகமடைந்ததுடன் 1789 பிரான்சியப் புரட்சி அச்செயன்முறையின் உச்சக்கட்டமாக அமைந்தது.

இவ்வாறு சர்வாதிகார முடியாட்சிகளிலிருந்து விடுபட்ட மேற்குலகு மக்களுக்கு அரசியல் ரீதியாகத் தனிமனித சுதந்திரங்களையும் பொருளாதாரச் சுதந்திரத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏதுவாக அமையும் வகையில் அரசின் தலையீட்டை இயன்றளவு குறைந்தமட்டத்தில் வைத்திருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசியல் ரீதியாக தாராள வாதம் முன்வைக்கப்பட்டதுடன் பொருளாதார ரீதியாக அரசின் தலையிடாக் கொள்கை முன்வைக்கப்பட்டது. இவ்விரு மூலக்கொள்கைகளின் அடிப்படையில் செயற்பட்ட அரசு முறைமையே''தலையிடா அரசு'' என்று அழைக்கப்பட்டது. இதன் அரசியல் பகுதியைக் கோட்பாட்டு ரீதியாக ஒழுங்கு படுத்தியவர் இங்கிலாந்து அரசியல் சிந்தனையாளரான ஜோன் லொக் (1632 - 1704) ஆவார். தலையிடா அரசின் பொருளாதாரப் பகுதியைக் கோட்பாட்டு ரீதியாக ஒழுங்கு படுத்தியவர் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த பொருளியலாளரான அடம் ஸ்மித் ஆவார். 1776 இல் அவர் வெளியிட்ட ''தேசங்களின் செல்வம்'' (The Wealth of Nations) என்ற நூலில் இதனை விளக்கியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைத்த தலையிடா அரசு முறைமையின் ஒரு பிரதான பண்பு தனிமனிதத்துவமாகும். மனிதர்கள் சுதந்திரமாக ஓடுவதற்கு இடமளித்துவிட்டு அரசு பின்னணியில் இருந்துகொண்டு அதனைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று தலையிடாக் கொள்கைவாதிகள் கூறுகின்றனர். இப்போட்டியில் பங்கேற்றுத் தமது பௌதிக அபிவிருத்தியை உயர் மட்டத்திற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான பகுத்தறிவு ரீதியான நடத்தையை சகலரும் தமது பிறப்புடன் பெற்றுள்ளனர் என்று தலையிடாக் கொள்கைவாதிகள் கருதுகின்றனர். போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெறுவோருக்கு உரிய வெகுமதிகள் உரித்தாகும் என்றும் தோல்வியுறுவோர் பின்தள்ளப்படுவர் என்றும் கூறினர். இவ்வாறான நிலையில் அரசின் பங்களிப்பு என்னவெனில், மனிதனுக்குத் தனது தனிமனிதத்துவத்தை விருத்திசெய்வதற்குரிய சமூக நிபந்தனைகளை உருவாக்கி அவற்றைக் கொண்டுநடத்துவதேயாகும் என்று கூறினர். அதன்படி, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதைத் தவிர வேறு எந்தப் பணியையும் தலையிடாக் கொள்கைவாதிகள் அரசுக்கு வழங்கவில்லை.

**2) நலன்புரி அரசு:**

20ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியின் ஆரம்பத்தில் அரசின் செயற்பாடு எவ்வாறு அமையவேண்டும் என்று தாராளவாதிகள் முன்வைத்த சீர்திருத்தக் கருத்தின் அடிப்படையில் உருவாகிய அரசு முறையே நலன்புரி அரசு என்று அழைக்கப்படுகின்றது. 20ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதி தலையிடாக்கொள்கையின் கீழ் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ அரசுமுறையின் இருப்புக்குப் பலத்த சவால்களை ஏற்படுத்தி ஆரம்பமாகியது. அச்சவால்களாவன,

1. தலையிடா அரசின் கீழ் பலத்த சமூக அநீதிகளுக்குட்பட்ட ஒரு பாட்டாளி வர்க்கம் தோற்றம்பெறுதல்.
2. கைத்தொழில் மயமாக்கத்தின் விளைவாக ஒரு நகர்புறத் தொழிலாளர் வர்க்கம் தோற்றம் பெறுதல்.
3. இரண்டு உலகப் போர்களின் விளைவாக எதிர்நோக்கிய அரசியல் பொருளாதார, சமூகச் சீரழிவுகளை அகற்றிப் போரின் விளைவால் அழிவுற்ற சமூக, பொருள்தார முறைமைகளை மீண்டும் கட்டியெழுப்பும் பொறுப்பு அரசுக்கு உரித்தாகியமை.
4. 1917 அக்டோபர் புரட்சியின் மூலம் உலக வரலாற்றில் முதன் முதலாக ரஷ்யாவில் சோசலிஸ அரசுமுறை ஸ்தாபிக்கப்படுதல்.
5. மனித உரிமைகளைப் பாதுகாத்துப் பேணுவது தொடர்பாக வளர்ச்சியடைந்த சமூக இயக்கங்களில் இருந்து இடம்பெற்ற தாக்கங்கள்.
6. சமமான் பிரஜைகள் - சமமான வாய்ப்புக்கள் என்ற சித்தாந்தம் தலையிடா அரசு முறைமையின் கீழ் வீழ்ச்சியுற்றுள்ளது என்ற குற்றச்சாட்டு.

இச்சவால்களை எதிர்கொண்டு தாராள முதலாளித்துவ அரசினை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பது 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியாகும்போது தாராளவாதிகள் எதிர்நோக்கிய பிரதான சவாலாகும். முதலாளித்துவ அரசு முறைமையைத் தொடர்ந்தும் பாதுகாத்து நிலைநிறுத்த வேண்டுமாயின் அரசு அதுவரை கடைப்பிடித்த பந்தயத்தில் பங்கேற்காது, பின்னால் நின்றுபார்த்துக் கொண்டிருக்கும் கொள்கையில் இருந்து விடுபடவேண்டும். தலையிடா அரசு முறைமையைச் சீர்திருத்துவதற்கு முன்வைக்கப்பட்ட தாராளக் கருத்தின் சாரம் என்னவெனில், சமூகத்திலுள்ள பலவீனர்களின் இருப்புக்குப் பங்காற்றுதல் அரசின் பொறுப்பு என்பதாகும்.இவர்களின் இருப்புக்காக சமூக நலப்பணிகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்ட நலன்புரி அரசு இக்கருத்துக்களின் அடிப்படையிலேயே ஆரம்பமாகிறது.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் வளர்ச்சியும் நலன்புரி அரசு உருவாகுவதில் பாதிப்புச் செலுத்திய பிறிதொரு காரணியாகும். பிரதிநிதித்துவ ஜனநாயக முறையில் வாக்காளனுக்கும் பிரதிநிதிக்கும் இடையில் நிலவும் நெருங்கிய தொடர்பின் காரணமாகத் தமது மனக்குறைகளையும் தேவைகளையும் நிறைவேற்றி வைப்பதில் பிரதிநிதிகள் முயற்சிப்பதனால் நலன்புரிப் பணிகளை நிறைவேற்றுவதில் அரசு ஈடுபட வேண்டியதாயிற்று.

இவ்வாறு ஆரம்பமாகிய நலன்புரி அரசு பின்வரும் பிரதான பண்புகளைக் கொண்டிருந்தது.

1. பொருளாதார விருத்தியிலும் பொருளாதார விருத்தியின் பயன்களை சமூகத்தில் மீளப் பகிர்ந்தளிப்பதிலும் அரசு நேரடியாகத் தலையிடுதல்.
2. பொருளாதாரத்தை முகாமைத்துவப்படுத்தும் நிறுவனமாக அரசு மாறுதல்.
3. தனியார்துறை குறைந்த கவனத்தைச் செலுத்தும் அல்லது முழுமையாகக் கவனம் செலுத்தாத துறைகளின் வளர்ச்சியில் அரசு நேரடியாகத் தலையிடுதல்.
4. பல்வேறு நலன்புரி மற்றும் காப்புறுதிப் பணிகளை நடைமுறைப்படுத்தல்.
5. சமமான பிரஜைகள்-சமமான வாய்ப்புகள் என்ற சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு அரசு அரசியல், பொருளாதார, சமூகப் பணிகளை முகாமைப்படுத்தல்.

சுருங்கக் கூறின் அரசின் நலன்புரி வாதத்தின் சாரம் பொருளாதார, சமூக விவகாரங்களை முகாமைத்துவப்படுத்துவதில் அரசு நேரடியாகத் தலையிட்டு சமூகத்தில் அமுக்கத்துக்கு உட்பட்டுள்ளோரின் பௌதிக மேம்பாட்டுக்காகச் செயற்படுதல் என்பதாகும். இது தலையிடா அரசு முறையின் கீழ் ஏற்பட்டிருந்த அரசு பின்னால் இருந்துகொண்டு பார்த்துக் கொண்டிருக்கவேண்டும் என்ற சித்தாந்தத்துக்கு முழுமையாக முரண்பட்ட ஒரு நிலை ஆகும்.

**3) குறைந்தபட்ச அரசு:**

தலையிடா அரசு முறைமையில் '' கட்டுப்படுத்தாத அரசு'' சிறந்த அரசாகவும் நலன்புரி அரசில் ''அதிகமாகச் கட்டுப்படுத்தும் அரசு'' சிறந்த அரசு என்றும் கருதப்பட்டது. ''குறைந்த கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் அரசு'' என்பது குறைந்தபட்ச அரசின் இலட்சியமாகும். இதன்படி குறைந்தபட்ச அரசு என்பது நலன்புரி அரசுக்கும், தலையிடா அரசுக்கும் இடைப்பட்ட ஓர் அரசு முறைமை ஆகும். சுருங்கக் கூறின் பொருளாதார, சமூக விடயங்களில் குறைந்தளவு தலையிடும் அரசு பற்றியே இக்கருத்தின் மூலம் வலியுறுத்தப்படுகிறது. அதன்படி ஆட்சிக் கருமங்களிலிருந்து அரசு அகன்று செல்லாது அளவுக்கு மிஞ்சிய வகையில் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதில் அதாவது, உற்பத்தி மற்றும் பங்கீட்டுப் பணிகளை கட்டுப்படுத்துவதிலும் சமூகத்தின் சகலருக்கும் பொதுநலனை நிறைவேற்றுவதிலும் அரசு ஈடுபடக்கூடாது என்றே பொருள் கூறப்படுகின்றது. அதன்படி சமூக விவகாரங்களில் குறைந்த முகாமைப்படுத்தலை அரசும், பொருளாதார விடயங்களை முகாமைப்படுத்தலை தனியார் துறையும் மேற்கொள்ளவேண்டும் என்று குறைந்தபட்ச அரசு பற்றிய எண்ணக்கரு வலியுறுத்துகின்றது.

இ. நெகிழும், நெகிழா யாப்புக்கள்.
ஈ. ஒற்றையாட்சி, சமஷ்டியாட்சி யாப்புக்கள்.

**அ.படிமுறையாக வளர்ச்சியடைந்த மற்றும் இயற்றப்பட்ட யாப்புக்கள்:**

படிப்படியாகவளர்ச்சியடைந்து காலமாற்றங்களுக்கேற்ப ஒழுங்கமைந்து, அரசியல்தாபனங்கள் பற்றிஏற்றுக்கொள்ளப்பட சட்டதிட்டங்கள், மரபுகள்,வழக்காறுகள் என்பவற்றை வெளிப்படுத்துகின்ற எழுத்துருவங்களினதும் மரபுகளினதும் தொகுப்பே படிமுறையாக வளர்ச்சியடைந்த யாப்பாகும். இவ் வகையான யாப்பின் பிரதான பண்பு எழுதப்பட்ட பகுதிகளையும் எழுதப்படாத பகுதிகளையும் கொண்டிருத்தல் ஆகும். பாராளுமன்றச் சட்டங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்புக்கள் என்பவற்றின் மூலம் எழுதப்பட்ட பகுதி வெளிப்படும். மரபுகள், வழக்காறுகள், ஏற்புகள் போன்றவற்றின் மூலம் எழுதப்படாத பகுதி வெளிப்படும். இதற்குச் சிறந்த உதாரணம், பிரித்தானிய யாப்பாகும். மறுபுறம் ஓர் அரசியல் யாப்பு நிர்ணய சபையால் அராசங்க முறையின் செயற்பாடுகள் இடம்பெற வேண்டிய விதம் பற்றிக் குறிப்பிட்டு, குறிப்பிட்ட இலக்குகளுடன் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் உருவாக்கப்பட்ட சட்டமே இயற்றப்பட்ட யாப்பு ஆகும்.

**ஆ. எழுதப்பட்ட, எழுத்தப்படாத யாப்புக்கள்:**

இந்த வகையான யாப்புக்கள் மேலே குறிப்பிட்ட படிமுறையாக வளர்ச்சியடைந்த மற்றும் இயற்றப்பட்ட யாப்புக்களைப் பெரும்பாலும் ஒத்ததாகும். அரசியல் யாப்புகளின் எழுத்துருப்படுத்தப்பட்ட தன்மை, எழுத்துருப்படுத்தப்படாத தன்மை என்பவற்றின் அடிப்படையிலேயே இவ்வகைப்படுத்தல் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி ஓர் அரசியல் யாப்பு முழுமையாக எழுதப்பட்டிருப்பின் அது எழுதப்பட்ட யாப்பு என்றும், எழுதப்படாமல் இருப்பின் அது எழுதப்படாத யாப்பு என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த வகைப்படுத்தல் பொருத்தமானது என்று ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஏனெனில், உலகின் எந்தவொரு யாப்பும் முழுமையாக எழுதப்பட்டதாகவோ, எழுதப்படாததாகவோ காணப்படுவதில்லை. உதாரணமாக, எழுதப்படாத யாப்பில் எழுதப் பட்ட பல பகுதிகள் காணப்படுகின்றன. பாராளுமன்றினால் காலத்துக்குக் காலம் நிறைவேற்றப்பட்ட சட்டங்களும் நீதிமன்றத் தீர்ப்புகளும் எழுதப்பட்ட பகுதிகளாகும். மறுபுறம் அரசியல் யாப்புக்களை முழுமையாக எழுதிவைக்கவும் முடியாது. ஓர் அரசியல் யாப்பில் அரசாங்க முறை பற்றிய அடிப்படைக் கொள்கைகள் மட்டுமே உள்ளடக்கப்படும். எந்தவொரு யாப்பும் முன்னெடுக்கப்படும்போது அதனைச்சுற்றி புதியமரபுகளும்வழக்காறுகளும் ஏற்புகளும்வளர்ச்சியுறலாம். அவையனைத்தையும் யாப்பில் உள்ளடக்க முடியாது. ஆனால், அவை அரசியல் யாப்பின் மூலத்துவங்கள் என்று கருதப்படுகின்றன. இதன்மூலமும் ஓர் அரசியல் யாப்பை முழுமையாக எழுத்துருப் படுத்த முடியாது எனத் தெரிகிறது. அதனால் இவ் வகையீடும் முழுமையானது அல்ல என்று கூறலாம்.

**இ. நெகிழும், நெகிழா யாப்புக்கள்:**

அரசியல் யாப்புகளைத் திருத்தும் வழிமுறைகளின்,அடிப்படையில் இந்த வகையீடு மேற்கொள்ளப்படுகிறது. இதன்படி ஓர் அரசியல் யாப்பினைத் திருத்துவதற்கு விசேட வழிமுறைகளைப் பின்பற்றாது சாதாரண சட்டத்தைப் போன்று திருத்த முடியும் ஆயின்,அந்த யாப்பு நெகிழும் யாப்பு என்று அழைக்கப்படுகின்றது. மறுபுறம், யாப்புத் திருத்தத்திற்கு விஷேட வழிமுறைகள் தேவைப்படுத்தப்படின் அது நெகிழா யாப்பு என்றுஅழைக்கப்படும். பிரித்தானிய யாப்பு நெகிழும் யாப்பாகவும், அமெரிக்க யாப்பு நெகிழாயாப்பாகவும் கருதப்படுகிறது. நடைமுறையில் இவ்வகையீடும் சரியானதாக அமையவில்லை. யாப்பின் நெகிழும் நெகிழாத் தன்மை யாப்புக்கள் திருத்தமுறையினால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. நாட்டின் அரசியல் சமூகத்தின் நெகிழும், நெகிழாத் தன்மை யாப்பின் நெகிழும் நெகிழாத் தன்மையைப் பாதிக்கிறது. எனவே, அரசியல் யாப்புக்களை நெகிழும்,நெகிழா யாப்புக்கள் என்று வகைப்படுத்துவது நடை முறைக்குப் பொருத்தமற்றது என்று கருதப்படுகிறது.

**ஈ. ஒற்றையாட்சி, சமஷ்டியாட்சி யாப்புக்கள்:**

அரசியல் அதிகாரம் பரவலாக்கப்படுவதையும் செறிவாக்கப்படுவதையும் அடிப்படையாகக்கொண்டு யாப்புக்கள் ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டி ஆட்சி யாப்புக்கள் என்று வகைப்படுத்தப்படுகின்றன. வேறுவகையில் கூறின் இறைமையதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் பங்குபற்றும் அதிகார நிலையங்களின் அடிப்படையில் இந்த வகையீடு மேற்கொள்ளப்படுகிறது. நாட்டின் இறைமையதிகாரத்தை தனி மத்திய அரசாங்கம் மட்டும் பிரயோகிக்குமாயின் அது ஒற்றையாட்சி யாப்பு என்றும், இறைமை அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் மத்திய அரசாங்கத்துடன் பிரதேச அரசாங்கங்களும் பங்குபற்றுமாயின் அது சமஷ்டியாட்சி யாப்பு என்றும் அழைக்கப்படும். நடைமுறை ரீதியாக இந்த வகைப்படுத்தல் அதிகம் பொருந்துவதாக காணப்படுகின்றது. ஏனெனில், நிச்சயமான காரணங்களின் அடிப்படையில் இந்த வகையீடு மேற்கொள்ளப்பட்டிருப்பதனால் ஆகும்.

**03. 2) யாப்புறு வாதம்**

மரபுசார் கருத்தின்படி அரசியல் யாப்பொன்றை அடிப்படையாகக்கொண்டு நாட்டை ஆட்சி புரிவதே யாப்புறுவாதம் என்று அழைக்கப்பட்டது. அவ்வாறான நாடுகளில் அடிப்படைச்சட்டம் உயர் தரச் சட்டமாக மாறுவதனால், சட்டத்தின் ஆட்சி நிலவும்.சட்டவாட்சி நிலவும்போது ஆள்வோரும் ஆளப்படுவோரும் சட்டத்துக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருப்பர். அதனால் ஆள்வோரைத் தாண்டிச் செல்லும் அதிகாரத்தை ஆள்வோர் பெற்றுக்கொள்வதில்லை. ஜனநாயக ஆட்சி முறையின் வெற்றி கரமான செயற்பாட்டுக்கு இது ஓர் அத்தியாவசிய நிபந்தனையாக இருப்பதுடன் இந்தத் தளத்தில் யாப்புறுவாதம் நடைமுறையிலுள்ள நாடுகள் ஜனநாயக நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

1. யாப்புறு பக்தி.
2. மக்களின் எண்ணங்களுடன் முன்னோக்கிச் செல்வதற்கு யாப்புக்குள்ள திறன்.

யாப்புறு பக்தி என்பது யாப்பு தமது பாதுகாவலன், ஒழுங்கு பாட்டாளர், வழிகாட்டி என்ற உணர்வு மக்கள் மனதில் தோன்றுவதேயாகும். மக்கள் மனதில் அவ்வாறான ஆழமான உணர்வு ஏற்பட வேண்டுமாயின் அரசியல் யாப்பு கட்டாயமாக இரண்டு நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

அ. பக்கச்சார்பற்ற நடுத்தீர்ப்பாளர் என்ற வகையில் யாப்பு சகலருக்கும் மேலால் இருத்தல்.
ஆ. சமமான பிரசைகள் - சமமான சந்தர்ப்பம் என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் யாப்பு செயற்படல்.

ஓர் அரசியல் யாப்பு நீண்ட காலத்துக்குத் தொடர்ந்து நிலவுதல் யாப்புறு பக்தியின் மீது தாக்கம் புரியும் இரண்டாவது விடயமாகும். இதன் பொருள் காலரீதியாக இடம்பெறும் பொருளாதார, அரசியல். சமூக மாற்றங்களைத் தழுவி அதன் அடிப்படையில் ஒழுங்கமைத்து முன்னோக்கிச் செல்வதற்கு அரசியல் யாப்புக்குத் திறனுள்ளது என்பதாகும். இதன் மூலம் ஒரு விடயம் தெளிவாகிறது. அதாவது, காலத்திற்கேற்ற சமூகத்தேவைகளின்படி தன்னை மாற்றிக்கொள்வதற்கு ஒரு யாப்பு நெகிழ்ச்சியுடையதாக இருக்க வேண்டும். ஆனால், அதிகாரத்தில் அமரும் அரசியல் வாதிகளின் எண்ணங்கள் மற்றும் விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் அடிக்கடி மாற்றக் கூடியளவுக்கு யாப்பு நெகிழும் தன்மையுடையதாக இருக்கக் கூடாது. இதன் மூலம் ஒரு யாப்பு நெகிழ்ச்சி-நெகிழ்ச்சியின்மை என்ற இரு அந்தங்களுக்கிடையில் சமநிலையினதாகக் காணப்படவேண்டும் எனத் தெரிகிறது. ஓர் அரசியல் யாப்பு மேற்குறித்த தாக்கங்களுக்குட்பட்டு உயர் தன்மை பொருந்தியதாக மாறும்போது அது மக்களின் நம்பிக்கையைப்பெற்ற ''சிவில் மதம்'' (Civil Religion) என்ற நிலையினைப் பெறும். இந்நிலையே உண்மையான யாப்புறுவாதம் என்று கருதப்படுகிறது.

**3) அரசியல் முறைமைகளில் அரசியல் யாப்புக்களின் பங்கு**

ஓர் அரசியல் முறைமையில் ஒரு யாப்பு பலதரப்பட்ட பங்கினை ஆற்றுகின்றது.

அ. அரசியல் முறைமையின் இயல்பை அரசியல் யாப்பே வெளிப்படுத்துகிறது. இது அரசின் இயல்பையே குறிக்கிறது.
ஆ. அரசாங்கத்தின் இயல்பை வெளிப்படுத்துவதும் ஒரு யாப்பின் பணியாகும்.
இ. பிரசைகளின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாத்தல் ஒரு யாப்பின் பங்களிப்பாகும்.
ஈ. அரசுக்கு அரசியல், பொருளாதாரக் கொள்கையை வழங்குவது அரசியல் யாப்பாகும்.
உ. ஒரு நாட்டுக்கு அரசியல் உறுதிப்பாட்டை வழங்குவதும் அரசியல் யாப்பாகும்.
ஊ.தேசத்தை நிர்மாணிக்கும் பங்களிப்பையும் அரசியல் யாப்பு மேற்கொள்கிறது.
எ. ஏகாதிபத்திய ஆட்சி முறையிலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் பங்களிப்பையும் யாப்பு மேற்கொள்கிறது. இது ஓர் அரசியல் யாப்பு நிறைவேற்றும் ஒரு முக்கிய கருமமாகும்.

**தொடர்ச்சி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வெளிவரும்.....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌதிகவியல் - 1

ஆசிரியர் : - சி.சிந்தனைச்செல்வன்
(B.Sc) Dip in Edu கொழும்பு விவேகானந்தா கல்லூரி

## அலகுகளும் பரிமாணங்களும்.

கடந்த வாரத் தொடர்ச்சி.............

108. ஒரு திருசியமானி வட்ட அளவிடை $(1/2)^0$ வாசிக்கத்தக்கதா அளவு கோடிடப் பட்டுள்ளது. இதில் பொருத்தப்பட்டுள்ள வேணியரின் 30 சமபாகங்கள் பிரதான அளவிடையின் 29 பிரிவுகளுடன் பொருந்துகின்றது. இக்கருவியின் இழிவு எண்ணிக்கை யாது?
1) 1 2) 3 3) 2 4) $2^0$ 5) 15

109. நுண்மானித்திருக்கணிச்சி ஒன்றை ஒரு முறை சுழற்றும்போது 1/2mm நகரக் கூடியவாறு காணப்படுகிறது. வட்ட அளவிடையிலுள்ள பிரிவுகளின் எண்ணிக்கை 100 எனின், இழிவெண்ணிக்கை யாது?
1) 0.5mm 2) 0.05mm 3) 0.01mm 4) 0.02mm 5) 0.005mm

110. கோணம் சிறியதாயின் பின்வரும் கூற்றுக்களுள் எது உண்மையானது?/ எவை உண்மையானவை?
A) Sin θ0 B) Cin θ0 C) tan θ 0
1) A,B சரி. 2) B,C சரி. 3) A,C சரி.
4) A,B,C எல்லாம் சரி. 5) A,B,C எல்லாம் பிழை.

111. $F = k (T/M)$ எனும் சமன்பாட்டில் T ஆனது N இலும் M ஆனது $kgm^{-1}$ இலும்f ஆனது $S^{-1}$ இலுமுள்ளபோது $K = 1$ ஆகும். f இனதும், T இனதும் அலகுகளை மாற்றாமல் M இனது அலகை $mgm^{-1}$ இல் அளப்போம் ஆயின் K இன் பெறுமதி,
1) $10^{3/2}$ 2) $10^3$ 3) $10^{-3}$ 4) $10^{-3/2}$ 5) $10^{2/3}$

112. அமுக்கப்படித்திறனின் பரிமாணம்,
1) $MLT^{-2}$ 2) $ML^{-1}T^{-1}$ 3) $MT^{-2}$ 4) $M^{-1}L^{-3}T^{-2}$ 5) $ML^{-2}T^{-2}$

113. சடத்துவத்திருப்பத்தின் பரிமாணம்,
1) $ML^2T^0$ 2) $MLT^{-1}$ 3) $ML^0T^{-2}$ 4) $ML^{-2}T^0$ 5) $ML^{-1}T^{-1}$


114. எளிய தனி ஊசலைக்கொண்டு ஒரு மாணவி செய்த பரிசோதனையில் 10 அளவுகளுக்கான காலத்தை அளந்தான். அப்பரிசோதனையை மீளச் செய்யும்போது அவள் 40 அலைவுகளுக்கான காலத்தை அளந்தாள். நேரம் அளப்பது தொடர்பான அவளது எதிர்பார்ப்பு வழு,
1) 1/2 மடங்காகக் குறையும். 2) 1/4 மடங்காகக் குறையும்.
3) 2 மடங்காகக் கூடும். 4) மடங்காகக் கூடும். 5) 16 மடங்காகக் கூடும்.

115. கோணவேகம் கொண்டிருக்கும் பரிமாணம்,
1) $LT^{-1}$ 2) $T^{-1}$ 3) $T^{-2}$ 4) $LT$ 5) $L^2T^2$

116. வீனின் ஒருமையின் அலகு,
1) mK 2) $m^{-1}K$ 3) $mK^{-1}$ 4) $mK^2$ 5) $mK^2$

117. கதிர்ப்பின் செறிவானது $E = T^4$ எனும் சமன்பாட்டால் தரப்படும். () தனி வெப்பநிலை எனின், T இன் அலகு,
1) $Wm^{-3}K^{-4}$ 2) $Wm^{-2}K^{-4}$ 3) $Wm^{-1}K^{-4}$
4) $WmK^{-4}$ 5) $WK^{-4}$

118. சவர்க்காரக் குமிழி ஒன்றில் பிறையுருவை அளக்கக்கூடிய கருவி யாது?
1) நகரும் நுணுக்குக்காட்டி. 2) கோளமானி. 3) நுண்திருகாணிக் கணிச்சி.
4) வேணியர் கருவி. 5) மீற்றர்கோல்.


119. படத்தில் காட்டப்பட்ட நுண்மானித் திருக்கணிச்சியின் வாசிப்பு,



1) 4.5mm 2) 4.55mm 3) 4.52mm 4) 4.45mm 5) 4.6mm

120. இணையின் பரிமாணம் யாது?
1) $ML^{-1}T^{-1}$ 2) $MLT^{-2}$ 3) $ML^2T^{-1}$ 4) $MT^{-1}$ 5) $ML^{-2}T^{-2}$

### பகுதி 11அ, அமைப்புக்கட்டுரை வினாக்கள்.

01. பரிசோதனைக்குழாய் ஒன்றின் உள்விட்டத்தை அளவிடக்கூடிய வகையில் செப்பஞ் செய்யப்பட்ட வேணியர் இடுக்கிமானியை வரிப்படம் -1 காட்டுகின்றது. அளவிடைக்கு உருப்பெருக்கம் செய்யப்பட்ட வரிப்படம் -11 கீழே தரப்பட்டுள்ளது.




01) பின்வரும் பகுதிகளைப் பெயரிடுக.
A - ..............................................
B - ..............................................
C - ..............................................
D - ..............................................
E - ..............................................
M - ..............................................
V - ..............................................

02) A, B, C, D ஆகியவற்றின் தொழிற்பாடுகள் எவை?
A - ..............................................
B - ..............................................
C - ..............................................
D - ..............................................
D - ..............................................

03) கருவியின் இழிவு எண்ணிக்கை யாது?

04) வரிப்படம் 2இல் காட்டப்பட்ட அளவிடைக்கு கருவியின் வாசிப்பு யாது?

05) தாடைகளுக்கு இடையில் பொருட்கள் எதுவும் இல்லாதபோதும் வேணியரின் பூச்சியம் பிரதான அளவிடையின் பூச்சியத்திற்கு இடது பக்கத்தில் (அளவீடு எடுக்கும் திசைக்கு எதிரான பக்கம்) காணப்பட்டதுடன் வேணியரின் எட்டாவது பிரிவு பிரதான பிரிப்பு ஒன்றுடன் பொருந்தியும் காணப்பட்டது. எனின்,
1. கருவி எவ்வகையான பூச்சிய வழுவைக் கொண்டது?
2. பூச்சிய வழுவிற்கான திருத்தம் யாது?

06) பரிசோதனைக் குழாயின் உண்மையான உள்விட்டம் யாது?


07) உண்மை உள்விட்டத்தின் பின்ன வழுவைக் காண்க.


08) சதவீத வழு யாது?

09) மயிர்த்துளைக் குழாயின் உள்விட்டம் துணிவதற்கு இக்கருவியைப் பயன்படுத்த முடியுமா? உமது விடையை விளக்கு.

10) மயிர்த்துளைக் குழாயின் உள்விட்டம் துணிவதற்குப் பயன்படுத்தப்படும் கருவி யாது?

02. உலோகப் பந்து ஒன்றின் விட்டத்தை வாசிக்கக்கூடியவாறு செப்பஞ் செய்யப்பட்ட நுண்மானித் திருகுக்கணிச்சி ஒன்று உரு-1இல் காட்டப்பட்டுள்ளது. அளவிடைக்கு உருப்பெருக்கம் செய்யப்பட்ட பகுதி உரு-2இல் வரையப்பட்டுள்ளது.



01) பின்வரும் பகுதிகளைப் பெயரிடுக.
A
B
C
D
E
F
M
S

02) அளவீடு எடுக்கப்படும்போது E இனால் குறிக்கப்படும் பகுதி முக்கிய தொழிற்பாடு ஒன்றுக்குப் பயன்படுகிறது.
01. அத்தொழிற்பாடு யாது?
02). மேலே (1 இல்) நீர் குறிப்பிட்ட தொழிற்பாட்டை நிறைவேற்றுவதில் பகுதி E சரியாகப் பயன்பட்டுள்ளது என்பதை எவ்வாறு உறுதிப்படுத்துவீர்?

03) இக்கருவி 50 வட்டப் பிரிப்புகளையும், புரியிடைத் தூரம் 1/2mm ஐயும் கொண்டிருப்பின் இழிவு எண்ணிக்கை யாது?

04) இக்கருவி பூச்சிய வழுவை உடையது என மாணவன் ஒருவன் கூறுகின்றான். இதை எவ்விதம் சரிபார்ப்பீர்?

05) பூச்சிய வழுவை உடைய கருவி ஒன்றில் பிரதான அளவிடை கிடைக்கோட்டிற்கு மேலே வட்ட அளவிடையின் பூச்சியம் காணப்பட்டதுடன் 47 ஆவது வட்டப்பிரிப்பு கிடைக்கோட்டுடன் பொருந்தியும் காணப்பட்டது. எனின்,
1. இக்கருவி எவ்வகையான பூச்சிய வழுவை உடையது?
2. பூச்சிய வழுவிற்கான திருத்தம் யாது?

06) கருவியின் வாசிப்பு யாது?

07) உலோகப் பந்தின் உண்மை விட்டம் யாது?


08) இப்பந்தின் விட்டத்தைத் துணிவதற்கு வேணியர் இடுக்கியை விட நுண்மானித் திருகுக்கணிச்சி சிறந்தது ஏன் என விளக்கு.

09) அளவீட்டைப் பெறுவதற்கு நீர் எதிர்நோக்கும் இடர்பாடு யாது?


10) அளவீட்டின் சதவீத வழு யாது?

11) வேணியர் கருவிகொண்டு செய்யக்கூடிய ஆனால், நுண்மானித்திருகுக் கணிச்சி செய்யமுடியாத இரு அளவீடுகளின் பெயர்களைத் தருக.
1.
2.


03. கோள மேற்பரப்பின் வளைவின் ஆரையைத் துணிவதற்கு கோளமானி பயன்படுத்தப்படுகிறது. இக் கருவியின் தோற்றம் உரு-1இல் காட்டப்பட்டுள்ளது. இக்கருவி 100 வட்டப்பிரிப்புகளையும் 1mm புரியிடைத்




உரு-1



உரு-2



உரு-3

01) கோளமானியின் பின்வரும் பகுதிகளைப் பெயரிக.
A
B
C
D
M
S

02) கோளமானிக்கு மூன்று பகுதி A இருப்பதற்கான இரு காரணங்கள் தருக.

03) கருவியின் இழிவு எண்ணிக்கை யாது?

04) பகுதி A தளவாடி ஒன்றின் மீது வைக்கப்பட்டபோது உரு-1இல் காட்டப்பட்டுள்ளவாறு M இன் பூச்சியமும் S இன் பூச்சியமும் பொருந்திக் காணப்பட்டது. பின்னர் உரு-2 காணப்பட்டுள்ளவாறு குவிவாடி ஒன்றின் மீது வைக்கப்பட்டபோது உரு-3இல் காட்டப்பட்டுள்ள வாசிப்பு பெறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(3ஆம் பக்கத் தொடர்ச்சி)*

1. ஆரம்ப வாசிப்பு யாது? (தளவாடியில் உள்ளபோது)
2. இறுதி வாசிப்பு யாது (குவிவாடியில் உள்ளபோது)
3. பகுதி B உயர்ந்த உயரம் யாது?

05) பகுதி A இற்கும் B இற்கும் இடையிலான தூரம் 2cm எனின், குவிவாடியின் ஆரை யாது?


06) இக்கருவியின் பூச்சிய வழு பற்றிய உமது விதந்துரைப்பு யாது?

07) இக்கருவியைப் பயன்படுத்தி கோள மேற்பரப்பின் ஆரை தவிர்ந்த வேறு என்ன அளவீட்டைப் பெறமுடியும்?

04. அன்றாட வாழ்வில் நாம் பல கடிகாரங்களைப் பயன்படுத்துகின்றோம். வேறுவகையான சில கடிகாரங்களாக நிறுத்தற்கடிகாரம், மேசைக்கடிகாரம், கைக்கடிகாரம், இலத்திரனியல் கடிகாரம், சுவர்க்கடிகாரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

1) சாதாரண மேசைக்கடிகாரத்திற்கும் நிறுத்தற் கடிகாரத்திற்கும் உள்ள இரு வேறுபாடுகள் எவை?
2) நிறுத்தற் கடிகாரத்தில் காணப்படும் அதேவேளை சாதாரண கடிகாரத்தில் காணப்படாத இரு விசேட இயல்புகள் எவை?
3) நிறுத்தற் கடிகாரத்தின் இழிவு எண்ணிக்கை யாது?
4) நிறுத்தற் கடிகாரத்தில் அளவீடு எடுக்க முன்பு நீர் கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டு தருக.
5) தரப்பட்டுள்ள எளிய ஊசலின் ஓர் அலைவுக்கான நேரத்தை எளிதாக அளவிட முடியுமா? உமது விடைக்கான காரணங்கள் இரண்டு தருக.
6) எளிய ஊசலின் ஓர் அலைவுக்கான காலத்தைத் துணிவதற்குக் கையாளப்படும் உபாயம் யாது?
7) நிறுத்தற் கடிகாரத்தினால் நேரத்தை அளவிடும்போது ஏற்படத்தக்க இடர்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.
8) எளிய ஊசல் ஒன்றின் அலைவுகாலம் T = 2எனும் சமன்பாட்டினால் தரப்படும் இங்கு 1- ஊசலின் நீளம் g- புவியீர்ப்பு ஆர்முடுகல் ($ms^{-2}$) இச்சமன்பாட்டில் இருந்து நீர் புவியீர்ப்பு ஆர்முடுகலைத் துணியவேண்டியுள்ளது. இதற்காகப் பொருத்தமான வரைபு ஒன்று வரையவேண்டி உள்ளது.
   1. சார் மாறி யாது?
   2. சாரா மாறி யாது?
   3. வரைபை வரைவதற்குச் சமன்பாட்டை மீள ஒழுங்குப்படுத்துக.
9) வரைபின் படித்திறன் $4ms^{-2}$ எனின், புவியீர்ப்பு ஆர்முடுகலைத் துணிக. (இங்கு 10 எனக்கொள்க)

05. நகரும் நுணுக்குக்காட்டியைப் பயன்படுத்தி மயிர்த்துளைக்குழாய் இறப்பர்க்குழாய் போன்றவற்றின் விட்டங்களை அளவிட முடியும். ஆய்வுகூடத்தில் காணப்படும் நகரும் நுணுக்குக் காட்டியினது படம் கீழே காட்டப்பட்டுள்ளது.




1) நகரும் நுணுக்குக்காட்டியில் உள்ள 5 பிரதான பகுதிகளைப் பெயரிடுக.
2) நகரும் நுணுக்குக்காட்டியில் பிரதான அளவிடை 1/2mm ரீதியாக அளவு கோடிடப்பட்டுள்ளது. 50 வேணியர் பிரிப்புகளைக் கொண்டுள்ளது.
   1. கருவியின் இழிவு எண்ணிக்கை யாது?
   2. கருவிக்கு பூச்சிய வழு தேவையற்றது என மாணவன் ஒருவன் கூறுகிறான். இக்கூற்றை ஏற்பீரா? உமது விடையை விளக்குக.
3) நகரும் நுணுக்குக்காட்டியைப் பயன்படுத்தி மயிர்த்துளைக் குழாயய் ஒன்றின் குறுக்கு வெட்டுமுகப் பரப்பு அவதானிக்கப்பட்டது.
   1. உமது கண்ணிற்குத் தெரிந்தவாறு குறுக்கு வெட்டினது விம்பத்தை வரைக.
   2. நீர்பெற்றுக்கொண்ட வாசிப்புகள் பின்வருமாறு காணப்படின் மயிர்த்துளைக்குழாயின் உள்விட்டம் யாது?

      ஆரம்ப வாசிப்பு - 80.25mm　　　இறுதி வாசிப்பு - 85.52mm
4) இம்முறையைப் பயன்படுத்தி மயிர்த்துழைக்குழாயின் உள்விட்டம் துணிவது நன்றன்று என ஆசிரியர் கூறுகின்றார். இக்கூற்றை ஏற்பீரா? உமது விடையை விளக்கு
5) மயிர்த்துளைக்குழாயின் உள்விட்டம் துணிவதற்கு வேறொரு முறையைப் பிரேரிக்குக
6) நகரும் நுணுக்குக்காட்டியைப் பாதுகாப்பாக வைப்பது உகந்ததாகும். நீர் பாதுகாக்கும் இரு முறைகளைத் தருக.
7) நகரும் நுணுக்குக்காட்டியைப் பயன்படுத்தி எடுக்கப்படும் வேறு இரு அளவீடுகளைத் தருக.

**மாணவர் கவனத்திற்கு.....**

★ இப்பகுதியில் வெளிவரும் அனைத்து வினாக்களையும் நேரங்கணித்து உரிய நேரத்துக்குள் பயிற்சி பெறுங்கள்.


★ இப்பகுதிகளுக்குரிய விடைகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வெளிவரும்போது ஒப்பீடுசெய்து நீங்கள் சுயமாகவே திருத்திக் கொள்ளுங்கள்

★ இப்பகுதியில் வெளிவரும் பல்கோண வினாக்களில் ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் எமது கல்விச்சுடர் பகுதிக்குத் தெரியப்படுத்தின் உரிய ஆசிரியர் ஊடாக ஆலோசனை வழங்கப்படும்.

**ஆசிரியர், உதயன் - கல்விச்சுடர்,**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி :- 071-6850005, 021-2223837, 071-4273035**
தொலைநகல் :- 021-2229933, மின்னஞ்சல் :&newkalvisudar@yahoo.com

**இவ் இதழில், மாவட்ட ரீதியாக முன்னிலையில் திகழும் ஆசாரியர்களினதும், மூத்த அனுபவமிக்க ஆசிரியர்களினதும் மாதிரி வினாத்தாள்கள் தொடர்ச்சியாக வெளிவரவுள்ளது.**

**இரசாயனவியலின் கடந்தவாரத் தொடர்ச்சி......................**




**பகுதி - 11 A, கட்டுரை வினாக்கள்**

05.a) Co (g), CO2(g), $H_2O(1)$ () இன் நியம தோன்றுதல் வெப்பவுள்ளுறைகள் முறையே - 106, - 396, -244, -286() எனில்,

1) C(s) + H2O(g)　CO(g) + $H_2(g)$ H யாது?
2) $N_2H_{18}(I)$ இன் நியம தோன்றுதல் வெப்பவுள்ளுறை +46 $kJmol^{-1}$ எனில், அதன் நியம தகன வெப்ப உள்ளுறை யாது?
3) $C_6H_{18}(I)$ இன் நியம தோன்றுதல் வெப்பவுள்ளுறை -512 $kJmol^{-1}$ எனில், அதன் நியம தகன வெப்ப உள்ளுறை யாது?
4) தற்போது $H_2(g)$ இனை எரிபொருளாக பயன்படுத்துவதன் பால் உலகின் கவனம் ஈர்க்கப்படுகிறது. இதற்குச் சாதகமாக மூன்று விடயங்களைத் தருக.
5) $H_2(g)$ பெரும்படித் தயாரிப்பில் நீர் வாயு எனப்படும் CO(g) + $H_2(g)$ கலவையில் இருந்து பெறப்படுகின்றது. நீர் வாயுவைத் தயாரிக்கும்போது இடையிடையே கற்கரியானது $O_2(g)$ உடன் தகனத்திற்கு உள்ளாக்கப்படுகின்றது. இததற்கு ஏற்கத்தகு காரணம் ஒன்றைக் குறிப்பிடுக.

b) 1. பின்வருவனவற்றுள் குறிக்கும் ஈடுசெய்த சமன்பாடுகளைத் தருக.

1) KOH(aq) - HCI(aq) நியம நடுநிலையாக்க வெப்பவுள்ளுறை - 57.3$kJmol^{-1}$
2) திரவ நீரின் நியம தோன்றல் வெப்பவுள்ளுறை - 286$kJmol^{-}$
3) HCI(aq) இன் நியம தோன்றல் வெப்பவுள்ளுறை - 164$kJmol^{-}$
4) KOH(aq) இன் நியம தோன்றுதல் வெப்பவுள்ளுறை - 487$kJmol^{-}$
5) KCI(s) இன் நியம கரைசலாகக் வெப்பவுள்ளுறை + 18$kJmol^{-}$

2. மேற்படி பகுதி I ஐப் பயன்படுத்தி KCI(s) இன் நியம தோன்றுதல் வெப்பவுள்ளுறையைக் காண்க.

c) விவசாயத்தில் பயன்படும் ஓர் இரசாயன ஓர் மூலமென அமிலமாக X ஐக் கருதுக. X ஆனது ஒரு தாவரத்தின் இலையில் செறிந்துள்ளதாகக் கருதப்படுகிறது. இதன் அளவைத் துணிய விரும்பிய மாணவன் ஒருவன் இருவேறு நாட்களில் பின்வரும் பரிசோதனையை மேற்கொண்டான். X ஆனது நீரிலும் $CCI_4$ இலும் கலக்கக்கூடியது ஆயினும் $CCI_4$ இல் எதுவித தாக்கமோ பிரிகையோ அடைவது இல்லை

Expt.

1) $0.5moldm^{-3}$ X இன் நீர்க்கரைசலுடன் சமகனவளவு $CC1_4$ இட்டு நன்கு குலுக்கி வேறாக்கினான். நீர்ப்படையின் pH ஆனது 3 ஆகக் காணப்பட்டது. X இன் Ka = $2x105moldm^{-3}$ ஆயின், $CC1_4$ க்கும் நீருக்கும் இடையில் X இன் பங்கீட்டுக் குணகத்தைக் காண்க.
2) X பிரயோகிக்கப்பட்ட தாவர இலை ஒன்றினை முதலாம் நாள் முடிவிலும், 14ஆம் நாள் உடனும் சமநிலையடைய விட்டான். முதலாம். நாள் பெற்ற சாறின் நீர்க்கரைசலின் pH = 5 ஆகும். 14ஆம் நாள் பெற்ற சாறின் நீர்க்கரைசலின் ஆகும் எனில்,
   1. 1ஆம் நாள், 14ஆம் நாட்களின் முடிவில் இலையில் செறிந்துள்ள X இன் மொத்தச்செறிவு யாது?
   2. X இன் அனுமதிக்கப்பட்ட உயர் அளவு $5x104moldm^3$ ஆகும் எனில், அத்தாவரத்தை 14 ஆம் நாள் முடிவில் உணவுக்குப் பயன்படுத்த முடியுமா? விளக்குக.

**2 ம் பக்கத் தொடர்ச்சி எதிர்வரும் செவ்வாய்க் கிழமை வெளிவரும்.....**

**04. "வலுவேறாக்கக்கோட்பாட்டில் எவ்வாறான குறைபாடுகள் காணப்படினும் சர்வாதிகார ஆட்சி முறை உருவாகுவதை தடுக்கும் ஒரு வழி முறை என்ற வகையில் அதன் முக்கியத்துவம் இன்னும்இல்லாதொழியவில்லை" ஆராய்க.**

பிரான்சிய அரசியலறிஞரான மொன்டெஸ்கியு 1748 இல் வெளியிட்ட The Spirit of Laws என்ற நூலில்தற்காலவலுவேறாக்கக்கோட்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அதிகாரங்களையும் பணிகளையும் வேறுபடுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கலந்துரையாடல் கிரேக்கர் காலத்திலேயே முதலில் ஆரம்பமாகியது. கிரேக்க அறிஞரான அரிஸ்ரோட்டில் வலுவேறாக்கம் பற்றிய கலந்து உரையாடலின் ஆரம்ப கர்த்தாவாக இருந்ததுடன் அவர் தமது "அரசியல்" என்ற நூலில் அரசாங்கத்தின் பணிகளில் அரசியல் விடயங்களைக் கலந்துரையாடுதல், பொது வேலைக்காக கட்டுப்படுத்தல், நீதியை நிருவகித்தல் ஆகிய மூன்று விடயங்கள் இடம்பெறுகின்றன என்று கூறினார். உரோமர் காலத்திலும் மத்திய காலத்திலும் தோன்றிய சர்வாதிகார முடியாட்சிகளில் வலுவேறாக்கம் பற்றிய கலந்துரையாடல் மறைந்ததுடன் நவீன யுகத்தில் அது மீண்டும் தலை தூக்கியதாக பிரித்தானிய அரசாங்க முறையினூடாகக் காணலாம். இங்கிலாந்தில் அரசனுக்கும் பாராளுமன்றுக்குமிடையிலும், அரசனுக்கும் நீதித்துறைக்குமிடையிலும் அரசாங்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஏற்பட்ட அதிகாரப்போட்டியின் விளைவாக அக்கலந்துரையாடல் மீண்டும் இடம்பெற்றது. இப்பிரச்சினையைத் தீர்த்து மன்னரின் அதிகாரத்தை வரை யறுக்கும் நோக்கில் அரசாங்கத்தின் பணிகள் சட்டவாக்கம், நிறைவேற்று, நீதி என்ற வகையில் வேறுபடுத்தி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை இங்கிலாந்தில் ஜோன்லொக்கும், ஹரிங்கடனும் முன் வைத்தனர்.

எவ்வாறாயினும் நவீன காலத்தில் வலுவேறாக்கக் கோட்பாட்டை தெளிவாகவும் முறையாகவும் முன்வைத்த பெருமை மொன்டஸ்கியுவையே சாரும். அவ அரசாங்கத்தின் செயற்றிறனை மேம்படுத்தவும், அரசாங்கம் தன்னிச்சையானதாக மாறுவதைத் தடுக்கவும், மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் அரசாங்கத்தின் அதிகாரங்கள் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை என்று பிரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். அவரது கருத்தின்படி,

"நீதி அதிகாரம் சட்டவாக்க அதிகாரத்தோடு இணைந்திருப்பின் அங்கு சட்டத்துறை நீதிபதியாக மாறுவதனால் அந்நிலை தன்னிச்சையான ஆட்சிக்கு வழிவகுக்கும். மறுபுறம் நீதி அதிகாரம் நிறைவேற்று அதிகாரத்தோடுஒன்றிணைந்திருப்பின்அங்கு நிறைவேற்றுத் துறை அடக்குமுறையினதாக மாறும். சட்டவாக்க, நிறைவேற்று, நீதி ஆகிய முத்துறை அதிகாரங்களும் ஒரு தனி நபரின் கையிலோ அல்லது ஒரு குழுவின் கையிலோ குவிந்திருப்பின் அங்கு மனித சுதந்திரம் நிச்சயமாக இல்லாதொழியும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(4ஆம் பக்கத் தொடர்ச்சி)*

வலுவேறாக்கக் கோட்பாடு நான்கு மூலக்கொள்கைகளின் அடிப்படையில் ஒழுங்கமைந்துள்ளது என்று (E.S) கோவின் கூறுகின்றார்.

1)அரசாங்கத்தின் பணிகளைத் தெளிவாக அடையாளம் காணக்கூடிய வகையில் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.

2)ஒன்றுக் ஒன்று தொடர்பற்றநபர்கள் அவ்வதிகாரங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

3)மூன்று துறைகளுக்கிடையிலும் அதிகாரம் சமமான முறையில் பிரித்தளிக்கப்பட வேண்டும்.

4)ஒரு துறையின் அதிகாரத்தை எக்காரணம் கொண்டும் மற்றத்துறைக்கு ஒப்படைக்கப்படக்கூடாது.

வலுவேறாக்கக் கோட்பாடு ஜனநாயக ஆட்சி முறையைக்கொண்டு நடத்துவதாகும். மக்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் ஆள்வோரின் தன்னிச்சையான தன்மையைக் கட்டுப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்ப்டும் ஒரு பலமான கருவியாக இருப்பினும் அதனை நடைமுறைப்படுத்த முற்படும்போது, பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியேற்படுகிறது.

நடைமுறை அனுபவங்களின்படி தூய முறையில் அதிகாரங்களை அடையாளம் காண்பதற்கும், தூய முறையில் அதிகாரங்களை வேறுபடுத்துவதற்கும், அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் ஸ்தாபனங்களை தனித்தனியாக ஒவ்வொரு அதிகாரப்பகுதியோடு வரையறுப்பதற்கும், மூன்று வகையான அதிகாரங்களும் அ ள வு ரீ தி ய ா க ஒ ே ர சமமானவையாக அமைவதற்கும், மனித சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் வலு வேறாக்கம் மட்டும் போதுமானதன்று என்பதை அவதானிக்க முடிகிறது. மொன்டெங்கியுவின் கோட்பாட்டை நடைமுறையில் பயன்படுத்திக்கொண்ட அமெரிக்க அரசியல் யாப்பின் மூலம் இது நன்கு தெளிவாகிறது. அவ்வாறாயின் இங்கு வலுவேறாக்கம் என்பது நடைமுறைப் பயன்பாட்டில்லாத, கோட்பாட்டோடு மட்டும் சுருங்கிய ஒன்றா என்ற வினா எழுகிறது. எனினும், அவ்வாறு இடம்பெறும் என்று எவ்வகையிலும் கூற முடியாது.

அரசாங்கங்களின் வரலாற்று ரீதியான செயற்பாடுகள் மூலம் சுட்டிக்காட்டக்கூடும் ஒரு முக்கிய விடயம் என்னவெனில், அதிகாரத்தில் அமரும் ஆட்சியாளர்கள் எவராக இருப்பினும் அவர்கள் அதிகாரத்தை முறை யற்ற வகையில் பிரயோகித்து தன்னிச்சையாகச் செயற்படுகின்றார் என்பதாகும். ஜனநாயக முறையின் மூலம் அதிகாரத்தில் அமரும் ஆட்சியாளர்கள் அதிகாரத்தைப் பெற்றதன் பின்னர் சர்வாதிகாரிகளாகமாறியதை வரலாற்றில் காணலாம். எனினும், ஜனநாயக அரசாங்கத்தின் இருப்புக்கு ஆட்சியாளர்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுப்பதற்கும் அவர்களை ஜனநாயக முறையில் செயற்படுத்து வதற்கும் கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் அல்லது தடைகள் அவசியமாகின்றன. ஜனநாயக முறையில் இது தொடர்பாக உள்ள செயற்திறன் மிக்க இரு தடைகள் முறை அரசியல் யாப்பும் வலுவேறாக்கமும் ஆகும். எனவே, ஜனநாயக ஆட்சி முறையின் இருப்புக்கு மொன்டெங்கியு கூறியது ஒரு தூய வலுவேறாக்கம் அல்லாவிடினும் இயன்றளவு மூன்று துறை அதிகாரங்களையும் ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்தி புறம்பான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். குறிப்பாக சட்ட மற்றும் நிறைவேற்றுத்துறைகளிலிருந்து நீதித்துறையை வேறுபடுத்தி வைத்தல் ஜனநாயக ஆட்சி முறையைப் பாதுகாத்துப் பேணுவதற்கு அத்தியா வசியமானதாகும். இதன்படி வலுவேறாக்கக் கோட்பாட்டில் சில குறைபாடுகள் காணப்படுமாயினும் ஜனநாயக ஆட்சி முறையின் இருப்புக்கு அதன் முக்கியத்துவம் இன்னும் குறைவடையாமல் காணப்படுகிறது.

05. பின்வருவனவற்றைப் பரிசீலிக்குக.

1) **ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும்**

அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும் மூன்று மூலாதாரங்களிருந்து உருவாகின்றன.

1.அரசியல் யாப்பின் மூலம் உரித்தாகும் அதிகாரங்களும் பணிகளும் அரசியல் யாப்பின் 2 (2,3) ஆம் சரத்தின் மூலம் இவ்வதிகாரங்கள் கிடைக்கப்பெறுவதோடு அவற்றை மீண்டும் மூன்று வகைகளாக வகுக்கலாம்.

அ. ஜனாதிபதி தனியாகப் பிரயோகிக்கும் அதிகாரங்கள்.

* அரசின் தலைவர் என்ற வகையில் தேசத்தை அடையாளப்படுத்தி நிறைவேற்றும் பணிகள்.
  தேசிய கிறிஸ்மஸ் மரத்தை ஒளிபெறச் செய்தல், தேசிய வீரர்களுக்கு பதக்கங்களை வழங்குதல், நாட்டிலும் வெளிநாடுகளிலும் முக்கிய நபர்களைச் சந்தித்தல், அமெரிக்கக் குடியரசையும் மாகாணங்களின் குடியரசுகளையும் பாதுகாத்தல், காங்கிரஸ் நிறை வேற்றும் சட்டங்களை சம்பகமான முறையில் நடைமுறைப்படுத்துவதை உறுதிப் படுத்தல், ஐக்கிய அமெரிக்காவின் சொத்துக்களைப் பாதுகாத்தல், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளை வெளியிடுதல்.

* முப்படைகளினதும் தலைவர் என்ற வகையில் நிறைவேற்றும் பணிகள்.
  முப்படைகளினதும் மற்றும் தேசிய சேவைகளுக்காக மாகாண அரசுகளின் தேசிய பாதுகாப்புச் சேவையினதும் இராணுவத்தினர் அழைக்கப்பட்டால் அவற்றுக்குப் பிரதம தளபதியாகச் செயற்படுதல், முப்படைகளினதும் அதிகாரிகள் மட்டத்திலான சகல நியமனங்களையும் மேற்கொள்ளுதல், அமெரிக்க இராணுவ போர்க்கப்பல்கள் மற்றும் போர் விமானங்கள் என்பன தரித்து வைக்கும் இடங்களைத் தீர்மானித்தல், போர்ச் சேவைக்காக முப்படைகளையும் பாதுகாப்பு சேவைகளையும் அழைத்தல்.

* பிரதான நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் அவரது பூணிகள்
  நிறைவேற்றுக் கட்டளைகளைப் பிறப்பித்தல், அரச கொள்கைகளைத் தீர்மானித்தல், செனட் சபையின் அனுமதியின்றி மேற்கொள்ளக்கூடிய அரசாங்க சேவையின் ஏனைய நியமனங்களை மேற்கொள்ளுதல், சமஷ்டி நிருவாகத்தைக்கொண்டு நடத்துதல், வரவு - செலவைக் கட்டுப்படுத்துதல், குற்றவாளிகளுக்கு மன்னிப்பளித்தல்.

* காங்கிரஸோடு தொடர்பான அதிகாரம்
  வருடாந்த அரசாங்கச் செய்தியை காங்கிரஸில் சமர்ப்பித்தல் மற்றும் தேவை ஏற்படும் போது செய்திகளை அனுப்புதல், சட்டவாக்கம் செய்யவேண்டிய கொள்கைகளைச் சிபாரிசு செய்தல், காங்கிரஸின் விசேட தவணைகளை அழைத்தல், காங்கிரஸின் தவணைகளை முடிக்கும்போது மீண்டும் கூடும் தினத்தை உறுதிப்படுத்தல், காங்கிரஸ் ஆக்கும் சட்டங்களுக்கு இறுதி அங்கீகாரத்தை வழங்குதல் அல்லது இரத்து அதிகாரத்தைப் பிரயோகித்தல்.

* வெளிநாட்டுத் தொடர்புகளை கட்டுப்படுத்தலும் கொண்டு நடத்தலும்.
  வெளிநாட்டுக்கொள்கைகளை தீர்மானித்தலும் கொண்டு நடத்தலும், வெளிநாட்டு அரசத்தலைவர்களை வரவேற்றலும் அவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தலும், வெளிநாட்டுத் தூதுவர்களை வரவேற்றல் அல்லது நிராகரித்தல், வெளிநாட்டு அரசுகளை உத்தியோகபூர்வமாக நிராகரித்தல், அங்கீகரித்தல்நாட்டு வர்த்தகத்தைக் கட்டுப் படுத்தல்.

**ஆ. செனட் சபையுடன் இணைந்து நிறைவேற்றும் அதிகாரங்கள்**

* உயர் மட்ட நிறைவேற்று அதிகாரிகளை நியமித்தல் - அதாவது கபினட் செயலாளர், இலாகாத்தலைவர்கள், உயர்நீதிமன்ற நீதியரசர்கள், சமஷ்டி நீதிமன்றின் நீதியரசர்கள், இராஜதந்திர அதிகாரிகள் போன்ற பதவிகளுக்கான நியமனங்கள்.

* வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல் - அவ்வாறான ஒப்பந்தங்கள் செல்லுபடியாக வேண்டுமாயின், செனட் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதோடு அவை தொடர்பான வாக்கெடுப்பின்போது சமுகம் அளித்துள்ள உறுப்பினர்களுள் 2/3 பகுதியினரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.

**இ. காங்கிரசுடன் இணைந்து நிறைவேற்றும் அதிகாரங்கள்**

போரும் சமாதானமும்.

2. **ஒப்படைப்பு முறையின் கீழ் உரித்தாகும் அதிகாரங்களும் பணிகளும்**

இதன் பொருள் என்னவெனில், காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்ட யோசனைகள் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களும் பணிகளும் ஆகும்.

அ. டொலரின் தங்கப்பெறுமதி வீதத்தைத் தீர்மானித்தல், நாணயங்களை அச்சிடுதல், மற்றும் பண ஒதுக்கு சம்பந்தமாக வெள்ளி இருப்பினை மேற்கொள்ளுதல் ஆகிய விடயங்களில் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கும் வகையில் 1933 இல் காங்கிரஸ் நிறைவேற்றிய யோசனை.

ஆ 1941 நிலக்குத்தகைச்சட்டம் ஜேர்மனிக்கு எதிராகப்போரில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நாடுகளுக்கு ஜனாதிபதியின் விருப்பின் பேரில் உதவிகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கும் அதிகாரம் இச்சட்டத்தின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

இ. அனுவாயுதங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கும் அதிகாரத்தை வழங்கும் யோசனை.

ஈ. 1964 Gulf of Tonkin என்ற யோசனையின் மூலம் தென்கிழக்கு ஆசியாவிலுள்ள அமெரிக்கர் களைப் பாதுகாக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

3. **உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் உரித்தாகும் அதிகாரங்களும் பணிகளும்**

(Mayers) வழக்குத்தீர்ப்பு - இதன் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களை பதவி நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

மேலே குறிப்பிட்டவை சட்டத்தின் மூலம் ஜனாதிபதிக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களும் பணிகளும் ஆகும். இவை தவிர மரபுகள் மற்றும் ஜனாதிபதிகளின் ஆளுமை போன்றவற்றின் மூலமும் உரித்தாக்கிக்கொண்ட பல அதிகாரங்கள் காணப்படுகின்றன.

2) **பிரான்சிய ஜனாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும்**

1958 - 5ஆம் குடியரசு யாப்பின்படி ஜனாதிபதி அரசினதும் அரசாங்கத்தினதும் நிறைவேற்றுத்துறையினதும் தலைவர் ஆவார். ஆயுதம் தாங்கிய படைகளில் பிரதம தளபதியும் ஆவார். அதன்படி பிராந்திய அரசாங்க முறையில் தாங்கிய படைகளில் பிரதம தளபதியும் ஆவார். அதன்படி பிராந்திய அரசாங்க முறையில் மிகவும் முக்கியமானதும் பலம் வாய்ந்ததுமான பதவி ஜனாதிபதிப் பதவியாகும். மேலே குறிப்பிட்ட ஏற்பாடுகளின் கீழ் ஜனாதிபதிக்கு உரித்தாகும் அதிகாரங்களும் பணிகளும் கீழே தரப்படுகின்றன.

1.அரசின் தலைவர் என்ற வகையில் - இதன் கீழ் மரபு சார் முறையில் ஓர் அரசின் தலைவர் பெற்றுக்கொள்ளும் கௌரவ அதிகாரங்கள் அனைத்தையும் பிரான்சிய ஜனாதிபதிபெற்றுக்கொள்கிறார்.பிரான்சியக்குடியரசை பிரதிநிதித்துவப்படுத்துதல், தேசிய விழாக்களில் பங்கு பற்றல், அரச செய்திகளையும் அறிவித்தல்களையும் வெளியிடுதல், கௌரவப்பட்டங்களை வெளியிடுதல், அரச இலட்சினையைப் பிரயோகித்தல், வெளிநாட்டு அரச விருந்தினரை வரவேற்றல், குற்றவாளிகளுக்கு மன்னிப்பு அளித்தல் போன்ற பணிகளை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

2. அ. பிரதமரை நியமித்தல்

இங்கு ஜனாதிபதி தேசிய பேரவையில் இடம்பெறும் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் பெற்றுக்கொண்ட ஆசனங்களை கவனத்தில் எடுக்கவேண்டுமாயின் பிரதமரை நியமிப்பதில் ஜனாதிபதி தமது சுயவிருப்பின் பேரில் செயற்பட முடியும்.

ஆ அமைச்சரவையை நியமித்தல்

அமைச்சரவையை நியமிப்பது தொடர்பாக ஜனாதிபதி பிரதமரின் ஆலோசனைகளைப் பெறவேண்டும் என யாப்பு குறிப்பிட்டாலும், அவர் விரும்பினால் அவ்வாறு செய்யாது தனது சுய விருப்பின் பேரில் செயற்படமுடியும்.

இ. அமைச்சரவைக் கூட்டத்துக்குத் தலைமை தாங்குதல் அமைச்சரவையின் தீர்மானங்களிற்கு பாராளுமன்றின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்காக சமர்ப்பிக்கப்படுவதற்குமுன்னர்ஜனாதிபதிஅவற்றில் கைச்சாத்திட்டுஉறுதிப்படுத்தவேண்டும். அவ்வாறு கைச்சாத்திடாத சகல தீர்மானங்களும் இரத்துச் செய்யப்பட்டவை எனக் கருதப்படும். இது ஜனாதிபதியின் விருப்பம் இன்றி அமைச்சரவையில் எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ள முடியாது என்பதைக் காட்டுகிறது.

ஈ. அமைச்சரவையை மாற்றியமைத்தல்

அமைச்சர்களை பதவிகளிலிருந்து அகற்றுதல், அவர்களின் பணிப்பொறுப்புக்களை மாற்றி அமைத்தல் போன்றன இதில் அடங்கும்.

3. நிறைவேற்றுத்துறையின் தலைவர் என்றவகையில்

முழு அரசாங்க சேவையும் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை ஜனாதிபதி பெற்றுள்ளார்.பாராளுமன்றில் நிறைவேற்றப்படும் ஒரு சட்டத்தின் மூலம் அரசாங்க சேவையில் மேற்கொள்ள வேண்டிய நியமங்கள் காணப்படாவிட்டால் அரசாங்க சேவை நியமனங்கள் தொடர்பாக ஜனாபதி தமது தற்துணிவு அதிகாரத்தின் அடிப்படையில் செயற்படமுடியும்.

4.ஆயுதப் படைகளின் பிரதம தளபதி என்ற வகையில்

இதன் கீழ் ஜனாதிபதி ஆயுதப் படைகளின் அதிகாரிகள் நியமனங்களையும் பதவி உயர்வுகளையும் பதவி நீக்கங்களையும் மேற்கொள்வதோடு போர் மற்றும் சமாதானம் தொடர்பான அதிகாரங்களையும் பெற்றுள்ளார்.

3. **பிரித்தானியப் பிரதமரின் அதிகாரங்களும் பணிகளும்**

பிரித்தானியாவில் கபினட் அரசாங்க முறையே நடைமுறையில் உள்ளது. கபினட் முறையில் நிறைவேற்றுத்துறையானது நாம நிருவாகம், உண்மை நிருவாகம் என்று இரு பகுதிகளைக் கொண்டி ருக்கும். பிரித்தானிய முறையில் மகாராணி நாம நிருவாகி ஆவார். பிரதமர் உட்பட அமைச்சரவை உண்மையான (அரசியல்) நிர்வாகம் ஆகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகளின்படி கபினட் அரசாங்க முறையில் நாம நிருவாகியே அரசின் தலைவரும் நிறைவேற்றுத்துறையின் தலைவரும், ஆயுதம் தாங்கிய படைகளின் பிரதான தளபதியும் ஆவார். பிரதமர் அரசியல் நிருவாகத்தின் தலைவர் ஆவார். அதனால் அவரே அரசாங்கத்தின் தலைவர் ஆவார். இதன்படி கபினட் அரசாங்க முறையில் பிரதமர் பெற்றுக்கொள்ளும் அதிகாரங்களும் பணிகளும் ஜனாதிபதி முறையில் ஜனாதிபதியினை விடக் குறைவானதாகக் காணப்படுகின்றது. நடைமுறை நிலை இதனை விட வேறுபட்டதாகும். ஜனாதிபதி முறையில் ஜனாதிபதியை போன்றே பிரதமரும் அதிகாரங்களைப் பெற்றுள்ளனர். இந்தப்பொருள் விளக்கம் பிரித்தானியப் பிரதமருக்கு பொருந்தும். கோட்பாட்டு ரீதியாக பிரித்தானிய பிரதமர் அரசாங்கத்தின் தலைவராக மட்டும் செயற்பட்டாலும் நடைமுறையில் அவர் நிறைவேற்றுத்துறையின் தலை வராகவும் முப்படைகளின் பிரதம தளபதியாகவும் செயற்படுகிறார்.

இதனடிப்படையில் பிரித்தானிய அரசாங்க முறையில் அரசாங்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் பிரதான நபர் பிரதமர் ஆவார். பிரித்தானிய அரசாங்க இயந்திரத்தின் பிரதான சில்லான கபினட்டின் உறுப்பினர்களை பிரதமரே நியமிக்கின்றார். அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய அமைச்சுப்பொறுப்புக்களை அவரேதீர்மானிக்கின்றார். அவர் தாம் விரும்பும் நேரத்தில் கபினட்டை மாற்றி அமைக்கின்றார். அமைச்சர்களைப் பதவியிலிருந்து அகற்றுகின்றார். அரச கொள்கைகளை வகுப்பதிலும் நடைமுறைப் படுத்துவதிலும் பிரதான பொறுப்பினை ஏற்கின்றார். அரசாங்கத்தின் உயர் மட்ட நிறைவேற்றுப் பதவிகளை யார் வகிக்கவேண்டும் என்பதனைத் தீர்மானிக்கின்றார். பிரதமரே பாராளுமன்றின் பொது மக்கள் சபையின் தலைவரும் ஆவார். அரசாங்கத்தின் பிரதான பேச்சாளரும் ஆவார். எதிர்க்கட்சியினை எதிர்கொண்டு அரசாங்கத்தினைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பினைப் பெற்ற வரும் ஆவார். பொதுமக்கள் சபையை கூட்டுதல், ஒத்தி வைத்தல், கலைத்தல் ஆகிய திர்மானங்களை மேற்கொள்கிறார். நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையைத் தீர்மானித்து நடைமுறைப்படுத்துகிறார். முக்கியமானஅரசத்தலைவர்கள்மாநாடுகளில் பிரித்தானியாவை பிரதிநிதித்துவப்படுத்திப் பங்கு பற்றுகிறார். யுத்தம் மற்றும் போர் பற்றிய இறுதித்தீர்மானங்களை அவரே மேற்கொள்கிறார்.

**தொடர்ச்சி எதிர்வரும் செவ்வாய்க் கிழமை வெளிவரும்.....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலவும் இந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே மனித உரிமை மீறல் தொடர்பான இரண்டு மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றுள் ஒன்று 'லாவ்' எரிவாயு உற்பத்தி நிறுவனத்தின் தலைவரான டபிள்யூ.கே.எம். வாகபிட்டியவால் தாக்கல் செய்யப்பட்டது. இரண்டவாது மனு ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மற்றும் நித்தியாவல பாலித்த தேரர் ஆகிய இருவரும் இணைந்து தாக்கல் செய்யப்பட்ட மனித உரிமை மீறல் மனுவாகும். இலங்கைப் பெற்றோலிய எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் செயற்றிறனற்ற நிர்வாகம் மற்றும் அவர்களால் செய்துகொள்ளப்பட்டுள்ள 'ஹெட்ஜிங்' ஒப்பந்தம் போன்றவை காரணமாகவும் தமக்கு குடிமக்கள் என்ற ரீதியில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என அந்த மனுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இத்தரப்புகளால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மேற்படி மனித உரிமைமீறல்சம்பந்தப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையின் போதே 'ஹெட்ஜிங்' ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்குவது உள்ளிட்ட இடைக்காலத் தடையுத்தரவுகளை உயர்நீதிமன்றம் பிறப்பித்திருந்தது. இவ்விதமாக தன்னால் முன்னர் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளைத் தானாகவே உயர்நீதிமன்றம் தற்போது நீக்கிக்கொண்ட அல்லது ரத்துச்செய்துவிட்ட நிலைப்பாட்டை அடுத்துப் பிரச்சினைகள் பலவும் தற்போது தலைதூக்கியுள்ளன. அவற்றுள் ஒன்று, பெற்றோலிய எரிபொருள் கூட்டுத்தாபனத்தால் செய்துகொள்ளப்பட்ட மேற்படி 'ஹெட்ஜிங்' ஒப்பந்தத்துக்கு அமைய வங்கிகளுக்குச் செலுத்தப்படவேண்டியுள்ள நிதித் தொகைகள் தொடர்பான பிரச்சினையாகும்.அவ்வாறு,பெரும்பணத்தொகைகள்வங்கிகளுக்குச்செலுத்தப்படும் போதுஅதன்காரணமாக ஏற்படும்நட்டத்தை நிரப்பிக்கொள்வது எவ்வாறுஎன்பதே அடுத்து எழுந்துள்ள பிரச்சிணையாகும்.

## சிக்கல் நிறைந்த நிலைப்பாடு

அத்தோடு, 'ஹெட்ஜிங்' ஒப்பந்தத்தின் சரத்துக்களுக்கு அமைய வங்கிகளுக்குச் செலுத்தப்படவேண்டியுள்ள தொகைகள் செலுத்தப்படாதுபோகும் பட்சத்தில் அரசு எதிர்கொள்ள வேண்டி நேரும் சட்ட ரீதியிலான மற்றும் வேறு விதங்களிலான பிரச்சினைகளும்கூட மிகப் பாரதூரமானவைகளேயாகும். அந்த வகையில், உயர் நீதிமன்றம் தானாகவே செயற்பட்டுள்ள -தனதுஉத்தரவுகள்அனைத்தையும் ரத்து செய்து கொண்டுள்ளதன் காரணமாக இன்று உருவாகியிருப்பது, சிக்கல்கள் நிறைந்ததொரு நிலைப்பாடேயாகும். இவ்வளவுக்கும் மத்தியில் தற்போது இப்பிரச்சினையில் மத்திய வங்கியும் மூக்கை நுழைத்துள்ளது. அதற்கமைய குறிப்பிட்ட 'ஹெட்ஜிங்' ஒப்பந்தம் முறைப்படியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறித்த ஆய்வொன்று மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்டதாகவும், அப்பரிசீலனையின் போது வெளிப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய, அந்த ஒப்பந்தம் தொடர்பாக முறைகேடுகள் இடம் பெற்றுள்ளன எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. எனவே, 'ஹெட்ஜிங்' ஒப்பந்த விதிகளுக்குக் கீழ் அமையும் கொடுப்பனவுகள் வங்கிகளுக்கு வழங்கப்படக்கூடாதெனவும் இலங்கை மத்தி வங்கி உத்தரவிட்டுள்ளது. அத்தோடுநில்லாது,'ஹெட்ஜிங்'ஒப்பந்தம்போல் அமையும்எதிர்கால நடவடிக்கைகள்எதுவொன்றையும்மேற்கொள்ளாதிருக்குமாறும்இவ்வொப்பந்தத்தோடு சம்பந்தப்படும் வங்கிகளுக்கும் மத்திய வங்கி உத்தரவிட்டுள்ளது.

எவ்வாறான போதிலும், உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிகள் பலவும் இந்த ஒப்பந்தத்தோடு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டுள்ளன. அந்த வகையில் சிட்டிவங்கி, ஸ்ரான்டட் சார்ட்டட் வங்கி, டொயிஸ் வங்கி, மக்கள் வங்கி மற்றும் கொமர்ஷல் வங்கி ஆகியன தம்மை இணைத்துக் கொண்டுள்ளன. இதனிடையே வங்கிக் கண்காணிப்பு அதிகாரத்தை மத்திய வங்கியே கையாளுகிறது. எவ்வாறான போதிலும் இச்சந்தர்ப்பத்தில் ஒரு விதத்தில் நோக்கும்போது மத்திய வங்கியும் இந்த விவகாரத்தில் ஒரு பங்காளியேயாகும். இவ்வளவுக்கும் இறுதிக்கட்டமொன்றில் இந்த நிதிக் கொடுப்பனவுகளுக்கான பொறுப்பு அரசின் மீதே சார்கிறது. என்றாலும்கூட, தாம் செலுத்தவேண்டியுள்ள நிதித்தொகையொன்றைப் பற்றி உத்தரவுகளைப் பிறப்பிக்கும் அதிகாரி அத்தகைய நிறுவனமொன்றுக்கு உள்ளதா - என்பது இங்கு சிக்கலுக்குரியதாகிறது.

## ஆய்வாளர்சுட்டிக்காட்டியவை

எவ்வாறானபோதிலும்,இந்தவிவகாரம்தொடர்பாகஅரசால்மேற்கொள்ளப்படவேண்டியுள்ள செயற்பாடுகள் மூன்று விதமானவைகளாக அமைகின்றன என பொருளாதார ஆய்வாளரொருவரான கலாநிதி ஹர்ஷா டீ சில்வாஇங்குசுட்டிக்காட்டுகின்றார்.அவற்றுள் முதலாவது, குறிப்பிட்ட 'ஹெட்ஜிங்' ஒப்பந்தத்துக்கு அமைய நிதித்தொகைகளை வங்கிகளுக்குச் செலுத்துவதாகும். இரண்டாவது, மத்திய வங்கியின் உத்தரவின் மீது பாரத்தைப் போட்டு நிதித்தொகைகளைச் செலுத்தாதிருப்பதாகும்.

மூன்றாவது, மேற்படி ஒப்பந்தத்தோடு சம்பந்தப்பட்டுள்ள வங்கிகளுடன் பேச்சுக்களை மேற்கொண்டு கொடுப்பனவு தொடர்பாகக் கால அவகாசம் பெறுவது மற்றும் நியாயமான வேறு இணக்கப்பாடொன்றை எட்டுவதாகும்.

இவற்றுள் முதலாவது அணுகுமுறையைப் பின்பற்றுவதனால், அது தொடர்பாக பெரும் நிதித்தொகை ஒன்றைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய இக்கட்டு நிலைக்கு அரசு தள்ளப்படக்கூடும்.

இன்றைய நிலையில் அது இலகுவானதொரு கருமம் அல்ல. இரண்டாவது நடைமுறைக்கு அமைய சம்பந்தப்பட்ட வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ள தொகைகளைச் செலுத்தாதிருக்கும் பட்சத்தில், அது தொடர்பாக சட்டரீதியிலான நடவடிக்கைகளின் மூலம் பிரச்சினை கிளப்புவதற்கு மேற்படி வங்கிகளுக்கு ஆற்றல் உள்ளது.

அதேபோன்று, சர்வதேச ரீதியிலும் அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும். அத்தகைய விதத்திலான நடவடிக்கைகள் காரணமாக இந்நாட்டுக்கு ஏற்படத்தக்க நிலைமை சிறப்பானதொன்றாக அமையப்போவதில்லை. எனவே, இவ்விடயத்துடன் சம்மந்தப்பட்ட அரசு, வங்கிகளுடன் இவ்விடயம் குறித்து பேச்சுக்களை மேற்கொண்டு ஒரு இணக்கப்பாட்டை எட்டிக்கொள்ள வேண்டியதே அரசு இன்று மேற்கொள்ளத்தக்க பொருத்தமான- சிறப்பான செயற்பாடென பொருளாதாரத்துறையில் நிபுணத்துவம் மிக்க பிரபல பொருளாதார நிபுணர் ஹர்ஷா டி சில்வா கருத்து வெளியிட்டுள்ளார்.

இருந்த போதிலும் இலங்கை மத்திய வங்கி இந்த விடயத்தில் தற்போது இவ்விடயம் தொடர்பாக அறிவுறுத்தலொன்றை விடுத்துள்ளது. அதனை மீண்டும் மத்திய வங்கி வாபஸ் பெற்றுக்கொள்ளுமென எதிர்பார்க்க இயலாது.

அதன்படி பேராசிரியர் ஹர்ஷா டீ சில்வா தெரிவித்துள்ள கருத்துக்களில், இரண்டாவதாக நட வடிக்கையை மேற்கொள்வதற்கு - அதாவது,

செலுத்த வேண்டியுள்ள நிதித்தொகையை செலுத்தாது தவிர்ப்பதற்கு அரசு அக்கறை காட்டி செயற் படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

## மீள உருவாகும் பிரச்சினை

'ஹெட்ஜிங்' ஒப்பந்தத்துடன் தொடர்புபட்டுள்ள வங்கிகள் யாவும், இலங்கை மத்திய வங்கியின் முடிவை ஏற்று மௌனம் காக்கும் என எதிர்பார்க்க இயலாது. விசேடமாகக் குறிப்பிட வேண்டுமானால், இந்த 'ஹெட்ஜிங்' உடன்படிக்கையுடன் சம்பந்தப்பட்டுள்ள வெளிநாட்டு வங்கிகள், இலங்கை மத்திய வங்கியின் இத்தகைய முடிவுக்கு எதிராக நீதிமன்றத்தின் உதவியை நாடுவதற்கும் - நிறைவேற்றுவதற்கும் நிறையவே இடமுண்டு. அத்தகைய ஒரு நிலைமை உருவாகும் பட்சத்தில் மீண்டும் இப்பிரச்சினை உயர்நீதிமன்றத்தின் முன் கொண்டுசெல்லப்படும் நிலை உருவாகும். அத்தகையதொரு நிலையில் உயர்நீதிமன்றம் எத்தகைய முடிவை-தீர்ப்பைவெளியிடும் என்பது குறித்தும், அத்தகைய நீதிமன்றத் தீர்ப்பு எந்தவகையில் கையாளப்படும் என்பதுகுறித்தும்பிரச்சினை தலையெடுப்பதைத்தவிர்த்திட இயலாது. இருந்தபோதிலும், அத்தகையதொரு நிலையில், குறிப்பிட்ட இந்தப் பிரச்சினைமென்மேலும்சிக்கலாகும் என்றே கருதத் தோன்றுகிறது. இதேசமயம் இந்தப் பிரச்சினை மென்மேலும் சிக்கலுக்கு உள்ளாவது இந்நாட்டுக்கு சாதகமான பலனை அளிக்கும் எனக் கருத இயலாதுள்ளது. எனவே, குறிப்பிட்ட இந்தப் பிரச்சினை தொடர்பாக, மிக விரைவான தீர்வொன்றை எட்டுவதற்காக சகலரினதும் அக்கறை அவசியமாகிறது என்பதை வலியுறுத்தியாக வேண்டியுள்ளது.

(தொடரும்)

## க. பொ.த உயர்தர மாணவர்களுக்கான

புள்ளி வழங்கும் திட்டம்- அரச பரீட்சை வினாத்தாள் ஒகஸ்ட்-2009

# அரசியல் மூலதத்துவங்கள்-01

கடந்தவாரத் (24.02.2009) தொடர்ச்சி.....

பகுதி-11

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்:-

* நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* ஒவ்வொரு விடைக்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும்.
* பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் புள்ளிகள் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

01. ''அரசறிவியல் கற்கை அரசைச் சுற்றியமைந்துள்ளது.'' நீர் ஏற்பீரா? உமது விடைக்குக் காரணங்கள் தருக.

''அரசறிவியல் கற்கை அரசைச் சுற்றி அமைந்துள்ளது''

இக்கூற்று அரசறிவியலின் மையக் காரணி அரசாகும் என்றும், அதனைப் பற்றிக் கற்றல் அரசியல் பாடத்தில் இன்று வரை பிரதான இடத்தைப் பெற்றுள்ளது என்றும் வலியுறுத்துகிறது. அரசியல் கற்கையின் வரலாற்றைப் பார்க்கும்போது அதன் ஆரம்பம் கிரேக்க காலத்தில் இடம் பெற்று தற்காலத்தில் தேசிய அரசுமுறை உருவாகி அரசியல் அதிகாரம் பற்றிக் கவனம் செலுத் தப்படும் வரை அரசும் அரசாங்கமுமே அக்கற்கையின் பிரதான தலைப்பாக இடம்பெற்று வந்துள்ளது. கிரேக்கர் காலத்தில் பிளேட்டோவில் ஆரம்பித்துத் தற்காலத்தின் ஆரம்பப் பகுதியில் மக்கியாவல்லி வரை அரசியல் கருத்துக்களை முன்வைத்த சகல அரசியல் சிந்தனையாளர்களும் மனிதனுக்கு உயர் பௌதிக விருத்தியைப் பெற்றுக்கொடுப்பதற்காகச் செயற்படவேண்டிய மிகச் சிறந்த அரசும் அரசாங்கமும் யாது என்பதைக் கண்டறிவதிலேயே கவனம் செலுத்தி உள்ளனர்.

தற்காலத்தில் தேசிய அரசு முறைமை தோன்றியதன் பின்னர் அரசியல் என்பது உள்வாரியா கவும் வெளிவாரியாகவும் இடம்பெறும் அதிகாரத்துக்கான போராட்டமாக மாறியதுடன் அதன் விளைவாக அதிகாரத்தைப் பற்றிய கற்கை அரசறிவியலின் பிறிதொரு பிரதான தலைப்பாக மாறியது. இப்புதிய சிந்தனையின் ஆரம்ப கர்த்தா இத்தாலியரான மக்கயாவல்லியாவார். அவருக்குப் பிறபட்ட காலத்தில் அரசியல் சிந்தனையாளர்களும் யாப்பறிஞர்களும் இதன் கருப்பொருளின் அடிப்படையில் கருத்துத் தெரிவிப்பதைக் காணலாம். இவர்களின் கருத்துக்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாயினும் அனைவரும் அரசு என்பது அதிகாரத்தின் அடிப்படையில் ஒழுங்கமைந்துள்ள தாபனம் என்பதிலும் அரசியல் என்பது அதிகாரத்துக்கான போராட்டம் ஆகும் என்பதிலும் அதன் காரணமாக அரசியல் பற்றிய கற்கை அதிகமாக அரசியல் அதிகாரத்தோடு தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதிலேயே கவனம் செலுத்துகிறது என்பதிலும் உடன் படுகின்றனர். அதிகாரம் என்றால் என்ன? அதனை எவ்வாறு கொண்டு நடத்தலாம்? அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம்? என்பன அதிகாரத்தோடு தொடர்பான பிரச்சினைகளாகும்.

அரசியலைக் கற்கும்போது அதிகாரம் பற்றிய கற்கையைக் கவனத்தில் எடுக்காதிருக்க முடியாது. அரசு என்பது எந்த இயல்பினைக் கொண்டிருந்தாலும் அரசின் இருப்புக்கு அதிகாரம் அத்தியாவசியமாகின்றது.அரசின் உள்வாரியான மற்றும் வெளிவாரியான செயற்பாடுகளில் அதிகாரம் ஒரு நிர்ணயமான காரணியாக அமைகிறது. அதிகாரத்தை எந்தளவு நடைமுறைப்படுத்த முடியும் என்பதன் அடிப்படையிலேயே உள்வாரியாகச் சட்டத்தையும் அமைதியையும் பேணி அரசின் நோக்கங்களுக்கு ஏற்ப மக்களை ஆட்சிசெய்து முன்னெடுத்துச்செல்ல முடிகிறது. மறுபுறம் வெளி வாரியாக அரசின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி ஏனைய தேசிய நலன்களைப் பாதுகாத்து விருத்திசெய்தல் என்பது அரசின் அதிகாரத்திலும் அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய அளவிலுமே தங்கியுள்ளது. எனவே, அரசியல் கற்கையில் அதிகாரத்தைப் பற்றிக் கற்றல் அத்தியாவசிய மானதாகக் காணப்படுகிறது.

20ஆம் நூற்றாண்டின் முதல் அரைப் பகுதியில் ஜனநாயக, சோசலிஸ, பாசிச அரசு முறைமைகளின் அபிவிருத்தி அரசறிவியல் கற்கையின் பாடப்பரப்பு பரவலடைவதில் பாதிப்புச் செலுத்தியது. ஜனநாயக அரசு முறைமையின் வளர்ச்சியோடு அம்முறைமையில் அரசியல் அதிகாரத்தை நடை முறைப்படுத்துவதற்கு கபினட் மற்றும் ஜனாதிபதி என்ற இரு புதிய அரசாங்க முறைமைகள் தோன்றியதுடன் மக்கள் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பிரதிநிதித்துவ முறை, அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், பொதுஜன அபிப்பிராயம் போன்ற அரசியல் கருவிகள், அரசாங்க முறைமையில் நிருவாகத்துறை தன்னிச்சையானதாக மாறுவதைத் தடுப்பதற்கு வலு வேறாக்கம், அரசியல் யாப்புக்கள் என்பவற்றின் மூலம் ஆட்சியைக் கொண்டுநடத்துதல் போன்ற புதிய அம்சங்கள் அரசியலில் அறிமுகப்படுத்தப் பட்டதோடு அவற்றைப் பற்றிய கற்கைகளும் அரசறிவியலோடு சேர்ந்தது. இவை பின்னர் அரசியல் கற்கையின் பிரதான தலைப்புக்களாகவும் மாறின. சோசலிஸ அரசு முறை பற்றிய கருத்தின் மூலம் அரசு பற்றியும் அதிகாரம் பற்றியும் நிலவிய சகல கருத்துக்களும் சவால் களுக்குட்பட்டு அரசு மற்றும் அரசியல் அதிகாரம் என்ற இணைப்பில் இருந்து விடுபட்டால் மட்டுமே மனிதனுக்கு விடுதலை கிடைக்கும் என்று வலியுறுத்தப்பட்டது. பாசிச அரசு முறை அரசறிவியலில் நிலவிய சகல அரசு பற்றிய கோட்பாடுகளையும் விட முழுமையாக வேறுபட்டதாகும். மேற்குறிப்பிட்ட சகல விடயங்களும் அரசறிவியல் கற்கையின் தலைப் புக்களாகும்.

20ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் அரசறிவியல் பாடத்தில் கற்கைக்குட் படும் விடயங்கள் மேலும் விருத்தியடைந்தது. இதில் பின்வரும் காரணிகள் பாதிப்புச் செலுத்தின.

அ. அரசின் பொதுநலவாதத்தின் வளர்ச்சி.

ஆ 2ஆம் உலகப் போரை அடுத்து குடியேற்ற நாட்டாட்சி முறைக்கு உட்பட்டிருந்த ஆசிய, ஆபிரிக்கா, இலத்தின் அமெரிக்கப் பிரதேசங்களில் இருந்த குடியேற்றங்கள் சுதந்திரம்பெற்று உலக அரசு முறைமையில்சேர்ந்தமை. இவ்வரசுகளே 3ஆம் உலக நாடுகள் என்று அழைக்கப் படுகின்றன.

இ. அரசறிவியலைக் கற்பதற்கான ஒரு அணுகு முறை என்ற வகையில் நடத்தை வாதத்தின் எழுச்சி.

அரச நலன்புரி வாதத்தின் வளர்ச்சியோடு, சமூக, பொருளாதார விடயங்களை முகாமைப் படுத்துவதில் அரசு அதிகளவு தலையிட வேண்டும் என்ற கருத்து முன்னணிக்கு வந்த தோடு அதன் விளைவாகப் பொதுத்துறைக் கொள்கை மற்றும் முகாமைத்துவம் என்பன அரசறிவியற் கற்கையின் பிரதான தலைப்புகளாக இடம்பெற்றன. மறுபுறம், புதிதாகத் தோன்றிய 3ஆம் உலக நாடுகள் அரசியல் ரீதியாக நவீனமயம் அடையாதவையாகவும், பொருளாதார ரீதியாக குறைவிருத்தி உடையனவாகவும், சமூக ரீதியாக பன்மைத்தன்மை உடையனவாகவும் இருந்ததுடன், அந்தந்தத் துறைகளில் உருவாகிய பிரச்சினைகளைத் தீர்த்து அவ்வரசுகளைப் பலப்படுத்தும் பொறுப்பும் அரசறிவியலுக்கே ஒப்படைக்கப்பட்டது. அதன் காரணமாக பொதுத்துறைக் கொள்கை மற்றும் முகாமைத்துவம் என்ற தலைப்பு மேலும் முக்கியத்துவம் பெற்றது. 3 ஆம் உலக அரசுகள் தேசிய நிர்மாணம் தொடர்பாகப் பின்பற்றிய சில கொள்கைகள் தோல்வியில் முடிந்தமையால் அவ் அரசுகள் பெரும்பாலானவற்றில் இன மோதல்கள் உருவாகி அது உள்நாட்டு யுத்த மோதல்கள் வளர்ச்சியடைந்தது. சில வளர்ச்சியடைந்த நாடுகளிலும் இந்நிலை காணப்படுகிறது. இதன் காரணமாக மோதல் தீர்த்தல் மற்றும் முகாமைத்துவம் என்ற ஒரு புதிய தலைப்பு அரசறிவியல் பாடத்துடன் சேர்ந்துள்ளது. இறுதியில் நடத்தைவாதத்தின் மூலம் அரசறிவியல் பாடத்தோடு பல புதிய எண்ணக்கருக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. உதாரணமாக, அரசியல் கலாசாரம், அரசியல் சமுதாயப்படுத்தல், அரசியல் உயர் குழாம் அரசியல் அபிவிருத்தி, அரசியல் நவீனத்துவம், பிராந்தியக் கற்கை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

சுருங்கக்கூறின் மனித இனத்தின் வாழ்வும் தாழ்வும் அரசின் இயல்பிலும் செயற்பாட்டிலுமே தங்கியுள்ளன. எனவே,மனித இனத்தின் இருப்புக்குப் பொருத்தமான அரசு முறை யாது என்பதைக் கண்டறிதல் இன்றும் அரசறிவியலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளாகும். இதன்படி அரசறிவியல் என்பது அரசைப் பற்றிய கற்கையையே சுற்றியமைகின்றது என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org